பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 ஆவணி 23 செவ்வாய்க்கிழமை (09-09-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:285

### காக்கி நிறம் மீது தமிழ் மக்களுக்கு வெறுப்பு

# பொலீஸார் பற்றிய அச்சத்தைப் போக்கவே காவல்துறையினருக்கு நீலவர்ணச் சீருடை!

## கிளிநொச்சியில் இடம்பெற்ற கலந்துரையாடலில் பிரபாகரன் தெரிவிப்பு

கிளிநொச்சி,செப்.9

காலம் காலமாக எமது மக்களிடம பொலீஸ் என்றால் ஒருவித பயம்; காக்கி உடையென்றால் ஒருபயம். அதாவது, அடக்குமுறை புரியும் பொலீஸாரைப் பார்த்ததால் ஏற்பட்ட விளைவு இது. எனவே, அந்த உணர்வைப் பிரதிபலிக்கக் கூடாது என்பதற்காகவே தமிழீழக் காவல்துறையினருக்கு மெல்லிய இளநீலநிற சீருடையைத் தெரிவு செய்தேன்.

- இவ்வாறு குறிப்பிட்டார் தேசியத் தலைவர் வே.பிரபாகரன்.

கிளிநொச்சியில் தமிழீழக் காவல்துறையின் நடுவப் பணியகத்தை நேற்றுமுன்தினம் திறந்துவைத்தபின்னர் காவல்துறையினருடன் கலந்துரையாடியபோதே தேசியத் தலைவர் இதனைத் தெரிவித் தார்.

அக்கலந்துரையாடலில் தேசியத் தலைவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

பொதுவாக நீங்கள் தமிழீழக் காவல்துறையில் இருப்பதையிட்டு பெரிதும் பெருமிதம் கொள்ளலாம். ஏனென்றால், மற்ற எத்தனையோ நாட்டுக் காவல்துறைகளில் ஊழல்களும் ஒழுங்கீனங்களும்தான் மேலோங்கி இருக்கின்றன. அப்படியிருக்கும் பொழுது இப்படியானதொரு சுத்தமான காவல்துறையில் இருப்பதையிட்டு நீங்கள் நிச்சயமாகவே பெருமிதம் அடையலாம். எங்களுடைய காவல்துறையில் குற்றவாளிகளும் வந்து ஒழுங்காக திருந்திவரக்கூடிய சூழலே இருக்கின்றது. அதற்கு உங்களுடைய பொறுப்பாளர் கடமையுணர்வுடனும் இறுக்கமுடனும் கண்டிப்பாக இருப்பதே காரணம். அதனால்தான் நீங்கள் இன்று உலகமே - அதாவது எங்களுக்கு எதிரான பத்திரிகைகளேகூட - உங்களைப் போற்றி எழுதக்கூடிய அளவிற்கு பாராட்டுப் பெற்றவர்களாக இருக்கிறீர்கள்.

இறுக்கமான கட்டுப்பாடும் சுயஒழுக்கமும் எங்களுக்கு எப்பொழுதும் நல்ல பெயரையே தேடித்தரும். எப்போதும் நாங்கள் எங்களுடைய சுயஒழுக்கத்தைப் பேணவேண்டும். ஒழுக்கங்களில் இரண்டு ஒழுக்கங்கள் இருக்கின்றன. ஒன்று, சூழ்நிலை ஒழுக்கம். மற்றையது, சுயஒழுக்கம். சூழ்நிலை ஒழுக்கம் என்றால் எங்களது சூழலால் ஏற்படுத்தப்படுகின்ற கட்டுப்பாடுகளுக்காக

(02ஆம் பக்கம் பார்க்க)

# பலாலி விநியோகத்தைத் துண்டிக்க திருகோணமலையில் புலிகள் தீவிரம்!

## பேராபத்து என்று கூறுகிறார் கதிர்காமர்

கொழும்பு,செப்ரெம்பர்9

**பலாலிக்கு உயிர்நாடி இணைப்பாக இருக்கும் விநியோக மார்க்கத்தைத் துண்டிப்பதற்கு புலிகள் திட்டமிடுகின்றனர். திருகோணமலையிலேயே அதைச் செய்யமுடியும் என்பதால் புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்குப் பின்னர் அங்கு தங்கள் பலத்தைப் புலிகள் குவித்து வருகின்றனர்.**

**- இவ்வாறு கூறியிருக்கிறார் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகரும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினருமான லஷ்மன் கதிர்காமர்.**

செய்தி ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். அவர் அப்பேட்டியில் மேலும் கூறியிருப்பதாவது:-

திருகோணமலையில் பல்வேறு விடயங்கள் தற்போது நடந்தேறிக்கொண்டிருக்கின்றன. புலிகளின திருகோணமலைத் தலைவர் பதுமனைச் சந்திப்பதற்கு ஹெலிகொப்டரில் யார் வந்து போகின்றார்கள் என்பது ஒருவருக்கும் தெரியாது. எமது முதுகுக்குப் பின்னால் நடப்பதை நாம் தெரிந்து கொள்ளாமல் இருக்கின்றோம். ஆனால், படையினர் அவை குறித்தெல்லாம் கவலை கொண்டுள்ளனர்.

திருகோணமலைத் துறைமுகத்தில் மூவாயிரம் கோடி ரூபா பெறுமதியான உபகரணங்கள், கருவிகளை நாம் வைத்திருக்கிறோம். அங்கு புலி

(14ஆம் பக்கம் பார்க்க)



தமிழீழ வலைப்பந்தாட்ட அணி பிரிட்டனில் பெற்ற வெற்றிக்கிண்ணத்தை அந்த அணியின் தலைவி தேசியத் தலைவர் பிரபாகரனிடம் கையளிக்கிறார். அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும் உடன் காணப்படுகிறார்.

### வேலணை பிரதேச சபையின்

# வாகனத்தை தேடிக் கண்டுபிடிக்க பொலீஸ்மா அதிபருக்கு உத்தரவு

## ஊர்காவற்றுறை நீதிவான் பிறப்பித்தார்

யாழ்ப்பாணம்,செப்.9

வேலணைப் பிரதேச சபைக்கு அரசினால் முன்னர் வழங்கப்பட்ட 'பிக்-அப்' வாகனத்தைத் தேடிக் கண்டுபிடித்து நீதிமன்றத்திடம் கையளிக்கும்படி பொலீஸ்மா அதிபருக்கு ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

ஈ.பி.டி.பி. அமைப்பின் நிர்வாகத்தில் இருந்த வேலணைப் பிரதேச

(14ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேத் தூதருடன் கேணல் கருணா பேச்சு

மட்டக்களப்பு,செப்.9

மட்டக்களப்புக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நோர்வே தூதர் ஹன்ஸ் பிரட்ரீசர், விடுதலைப் புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணாவுடன் நேற்றிரவு பேச்சு நடத்தினார்.

கிழக்கில் தொடரும் அசம்பாவிதங்கள் மற்றும் பாதுகாப்பு நிலைவரங்கள் தொடர்பாக இப்பேச்சில் ஆராயப்பட்டுள்ளது.

- (14ஆம் பக்கம் பார்க்க)

# காவலுக்குச் சென்ற சிப்பாய் முகமாலையில் சடலமாக மீட்பு!

தென்மராட்சி,செப்.9

முகமாலையில் படையினரின் முன்னரங்கப் பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட நேற்றுமுன்தினம் இரவு சென்ற சிப்பாய் ஒருவர் சடலமாக நேற்றுக்காலை மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக சம்பவ

(14ஆம் பக்கம் பார்க்க)

### பிரிட்டனில் நடந்த வலைப்பந்தாட்டப் போட்டிகளில்

# தாயக அணி பெற்ற வெற்றிக் கிண்ணம் தலைவர் பிரபாவிடம் நேற்று சமர்ப்பிப்பு

## அப்போது வீராங்கனைகளுக்குப் பாராட்டு

கிளிநொச்சி,செப்.9

பிரிட்டனில் அண்மையில் இடம்பெற்ற 8ஆவது தேசிய தமிழர் விளையாட்டு விழாவில் கலந்துகொண்டு வெற்றியீட்டிய தமிழீழ வலைப்பந்தாட்ட அணியினர் தாம் பெற்ற வெற்றிக்கிண்ணத்தை தேசியத் தலைவர் வே.பிரபாகரனிடம் நேற்று சமர்ப்பித்தனர். அப்போது தாயக அணி வீராங்கனைகளை அவர் பாராட்டிக் கௌரவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் தமிழீழ விளையாட்டுத்துறையின் பொறுப்பாளர் கி.பாப்பா தலைமையில் இதற்கான விழா நடைபெற்றது.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்

(14ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவ வாகனம் மோதி சிறுமி படுகாயம்!

யாழ்ப்பாணம்,செப்.9

படையினரின் குடிதண்ணீர் விநியோக பவுஸரும் சைக்கிளில் சென்ற சிறுமியும் மோதிக்கொண்ட விபத்தில் சிறுமி படுகாயமடைந்தார்.

நேற்று மாலை அரியாலை, மாம்பழம் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த ஜி.தர்சினி (வயது15) என்ற சிறுமியே படுகாய

(14ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்கு மாகாண நிலை தொடர்பாக

# தமிழ்-முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் புலிகளைச் சந்தித்துப் பேச இணக்கம்!

கொழும்பு,செப்.9

கிழக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக தமிழ், முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் கூட்டாக விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசுவதென்று இணக்கம் காணப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று நடந்த சந்திப்பிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



யாழ். வணிகர் கழக அலுவலகத்தின் கணனிப் பயிற்சி நிலையம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது. இந்த நிலையத்தின் திறப்பு விழா நிகழ்வில் வணிகர் கழக நிர்வாகக் குழு உறுப்பினர்களான இ.சிவலிங்கம், வை.நமசிவாயம் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதையும், பயிற்சி நிலையத்தை வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரன் நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும், ஆசிரியர் எஸ்.விஜயகுமார் கணனி பற்றி கருத்துரை வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# தலைவர் அஷ்ரப் மரணத்தின் மர்மம் துலக்க 3 ஆண்டுகளாகியும் நடவடிக்கை எதுமில்லை!

## பிரதமரின் வாக்குறுதி, ஹக்கீமின் மௌனம் பற்றி முஸ்லிம்கள் கேள்வி

சாய்ந்தமருது,செப்.9

முஸ்லிம்களின் பெருந்தலைவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகருமான மர்ஹூம் எம்.எச்.எம் அஷ்ரப் மர்மமான முறையில் அகாலமரணமடைந்து மூன்று ஆண்டுகளாகியும் இன்னும் அவருடைய மரணத்தின் மர்மத்தைத் துலக்க நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

எதிர்வரும் 16ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 23ஆம் திகதிவரை அஷ்ரப் நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடாகியிருக்கிறது. பெருந்தலைவரின் மரணத்தைச் சூழ்ந்துள்ள மர்மம் மட்டும் இன்னும் கண்டறியப்படவில்லை.

விசாரணை ஆணைக்குழு நியமித்து உண்மையைக் கண்டறிய ஏற்பாடு செய்வதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தாம் எதிர்கட்சியில் இருந்தபோதே உறுதி அளித்தார். அது காற்றில் பறந்துவிட்டது. இப்போது பிரதமராக இருந்தும் கூட அவா ஆணைக்குழுவை நியமிக்கவில்லை. தலைவரின் மரணம் பற்றிய சில காத்திரமான தகவல்கள் தமக்குக் கிடைத்தன என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் ஆரம்பத்தில் ஆவேசமாகக் கூறினார். அவரும் இப்போது மௌனம் சாதித்து வருகிறாரே.

- இப்படி முஸ்லிம் மக்கள் கவலை தெரிவிப்பதோடு பல கேள்விகளும் எழுப்புகிறார்கள்.

### பத்திரிகையாளர் சங்க உறுப்பினர்களுக்கு

யாழ்ப்பாணம்,செப்.9

வட இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் பத்திரிகையாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

இறைமையைப் பாதுகாத்துக்கொண்டு

# இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஏற்படுத்த பேச்சு ஆரம்பிக்கப்படும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு,செப்.9

இலங்கையின் ஐக்கியமும், இறைமையும், ஜனநாயகமும் பாதுகாக்கப்படும் வகையில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தினால், கடந்த 20 ஆண்டுகளாகத் தடைப்படிருந்த அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க முடிந்தது என்றும் போர்நிறுத்தம் முடிவுற்றால் அத்திட்டங்கள் அனைத்தும் இடைநடுவில் நின்றுவிடும் என்றும் பிரதமர் சொன்னார்.

மொனறாகலை மாவட்டத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றை ஆரம்பித்து வைத்து நிகழ்த்திய உரைகளிலேயே பிரதமர் இவற்றைக் கூறினார்.

இப்போர்நிறுத்தத்தைத் தொடர்ந்து பாதுகாத்துக் கொண்டு, அரசியல் தீர்வொன்றை நோக்கி நாம் முன்னேற வேண்டும் என்றும் போர்நிறுத்தத்தை முடித்துக் கொண்டு யுத்தத்துக்குச் செல்வதனால் எந்த ஓர் அபிவிருத்தியையும் செய்யமுடியாது என்றும் பிரதமர் மேலும் கூறினார்.

# தமிழக மீனவர் விடுதலைக்கு ஜெயலலிதா கோரிக்கை

சென்னை,செப்.9

இலங்கைச் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் 34 தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பிரதமர் வாஜ்பாயிடம் கோரிக்கை விடுத்திருக்கிறார்.

இதுதொடர்பாக பிரதமருக்கு கடிதம் எழுதியிருக்கும் தமிழக முதல்வர், தமிழக மீனவர்களின் கஷ்டங்கள் குறித்து பல முறை மத்திய அரசுக்கு கடிதம் எழுதியும் பலன் கிட்டவில்லை எனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இப்பிரச்சினைக்கு நீண்டகால அடிப்படையில் நிரந்தரத் தீவு காண வெளிவிவகார அமைச்சு மூலம் உறுதியான நடவடிக்கை எடுக்குமாறும் ஜெயலலிதா கடிதத்தில் வலியுறுத்தியிருக்கிறார்.

# சந்நிதி முருகன் ஆலய தேர்த் திருவிழா இன்று

வடமராட்சி,செப்.9

பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயில் ரதோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

தீர்த்தோற்சவம் நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறும். அன்றைய தினம் பிற்பகல் 5மணிக்கு நிகழும் மௌனத் திருவிழாவுடன் வருடாந்த மகோற்சவம் நிறைவுறும்.

இன்றும் நாளையும் நடைபெறும் தேர், தீர்த்த உற்சவங்களை முன்னிட்டு கோவில் சுற்றாடலில் சுகாதார நடவடிக்கைகளும், தொண்டர் அமைப்புக்களினால் போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவும், குடாநாட்டிலுள்ள சிற்றூர்தி சேவைச் சங்கங்களும் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் விசேட இ.போ.ச., மினி பஸ்சேவைகளை நடத்துவதற்கு விரிவான ஏற்பாடுகளைச் செய்துள்ளன.

கோயில் சுற்றாடலில் உள்ள சந்நிதியான் ஆச்சிரம மடம் உட்பட அனைத்து மடங்களிலும் அன்னதானம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(எ-10-173)

# போராளியின் முறைப்பாடு: வியாழனன்று விசாரணை

யாழ்ப்பாணம்,செப்.9

யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னி திரும்பியபோது முகமாலையில் வைத்துப் போராளி ஒருவர் படையினரால் துன்புறுத்தப்பட்டமை தொடர்பான விசாரணை நாளைமறுதினம் 11ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தான் முகமாலையூடாக வன்னி திரும்பியபோது முகமாலைச் சோதனைச் சாவடியில் வைத்து படையினர் தன்னைக் காரணமின்றிக் கைது செய்தமை, சிங்களமொழியில் எழுதப்பட்ட முறைப்பாடு ஒன்றில் கையொப்பம் இட வற்புறுத்தியமை, மக்கள் முன்னிலையில் தனக்கு கைவிலங்கு மாட்டியமை தொடர்பாக விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு முன்னர் விசாரணை நடத்த ஏற்பாடு செய்தபோதும் இவ்விசாரணையின் பிரதிவாதிகளான சுன்னாகம், கொடிகாமம் ஆகிய பொலீஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் விடுமுறையில் சென்றிருந்தமையால் விசாரணை நடைபெறவில்லை.

இதன்பின்னர் மீண்டும் இவ்விசாரணை எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

விசாரணைக்கு சமுகமளிக்குமாறு சுன்னாகம் மற்றும் கொடிகாமம் பொலீஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளுக்கும், சம்பந்தப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினருக்கும் அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளன. (ஐ-8)

# பொலீஸார் பற்றிய அச்சத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாங்கள் ஒழுக்கமாக இருப்பதுபோல் நடிப்பது. சுயஒழுக்கம் என்றால் எந்த வித ஒழுங்கற்ற இடத்திலும் நாங்கள் ஒழுக்கமாக இருப்பது. ஆகவே, எப்பொழுதும் நாங்கள் சுய ஒழுக்கத்தை கடைப்பிடிப்பவரை கெடுத்துவிடமுடியாது. ஆனால், சூழ்நிலை ஒழுக்கம் அப்படியானதல்ல அது மற்றவர்களுக்காக நடந்துகொள்வது. காவல்துறை ஒரு கட்டுப்பாட்டை உங்களுக்கு வகுத்து, அந்தப் பயத்தில் நீங்கள் இருப்பீர்களானால் அது சூழ்நிலை ஒழுக்கம் ஆகும். ஆனால், எங்கு சென்றாலும் உங்களுடைய கட்டுப்பாட்டை நீங்கள் கடைப்பிடித்து, உங்களை எவரும் கவனிக்காத இடத்திலும் ஒழுக்கமாக வாழ்வீர்களேயானால் அதுதான் சுய ஒழுக்கம். எனவே, நீங்கள் சுய ஒழுக்கத்தைக் கடைப்பிடியுங்கள் அதனால் உங்களுக்கு ஒரு பிரச்சினையும் ஏற்படாது.

மேலும் உங்களையிட்டு நான் பெருமிதம் அடைகிறேன் ஏனென்றால், நீங்கள் எவ்வளவோ இக்கட்டான காலகட்டத்திலும் மக்களுடைய அவ்வளவு துன்பங்களையும் சுமந்தவர்கள். அதாவது, காவல்துறையினராகிய உங்களுக்கு எல்லாவிதத்திலும் கஷ்டங்கள் இருந்தன. உங்களுக்கு வளங்கள் குறைவாக இருந்தன. உங்களுக்குரிய வாழ்க்கை ரீதியான, அதாவது ஒரு நாட்டினுடைய காவல்துறையைப் போன்ற தனிப்பட்ட வசதிகள் இருக்கவில்லை. இப்படியான ஓர் இருக்கத்திலும் கூட நீங்கள் நேர்மையாக இருந்திருக்கிறீர்கள். அதேநேரம் நல்ல வசதியான காவல்துறையிலும் கூட லஞ்சம், ஊழல்கள் உலாவுகின்றன. வசதியான சம்பளங்கள் அளிக்கப்படும் பெரிய நாடுகளின் காவல்துறைகளிலும் கூட ஊழல்கள் இருக்கின்றன. அப்படிப் பார்க்கும்பொழுது மிக இக்கட்டான காலகட்டங்களிலும், அதாவது எங்களுடைய அமைப்பின் விடுதலைப்போர் நடந்துகொண்டிருகின்ற நேரங்களிலும் விடுதலைப் போராட்டத்தின் ஓர் அங்கமாகத்தான் இந்தக் காவல்துறையும் இருந்திருக்கிறது. கிட்டத்தட்ட போராளிகளின் நிலையில் நின்று நீங்களும் உங்களுடைய கடமைகளைச் செய்திருக்கின்றீர்கள்.

அத்தோடு, உங்களுக்கு இன்னுமொன்றையும் கூற விரும்புகிறேன். இந்த மக்களுடன் நீங்கள் பழகும்பொழுது எப்பொழுதும் 'குற்றவாளிகள் பிறப்பதில்லை; குற்றவாளிகள் உருவாக்கப்படுகிறார்கள்' என்பதை மனதில் வைத்திருக்கவேண்டும். எனவே, நீங்கள் யாரையுமே குற்றவாளியாகப் பார்க்கக்கூடாது. அவர்களுடைய அந்தக் குற்றத்திற்கான சூழலைத்தான் நீங்கள் ஆராயவேண்டும். அதன மூலம் அவர்களை எப்படி அந்தக் குற்றச்செயல்களில் இருந்து திருத்தி, எங்களுடைய சமூக வாழ்க்கையில் ஒரு நல்ல பிரஜையாக உருவாக்க முடியும் என்று நீங்கள் பார்க்கவேண்டும். நீங்கள் குற்றவாளியைக் குற்றவாளியாகவே தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருந்தால், அவரும் தொடர்ந்தும் குற்றம் செய்பவராகத்தான் மாறுவார். சமூகச் சூழல்களால்தான் குற்றவாளிகள் உருவாகிறார்கள். பெற்றோர்களால் சிறுவயதில் கவனிக்காது விடப்பட்டவர்கள், குற்றம் செய்யும்போது, அவை கவனிக்கப்பட்டுத் திருத்தப்படாமல் அப்படியே விடப்பட்டவர்கள, தனிப்பட்ட முறையில் ஏதோ ஒருவழியாகப் பாதிக்கப்பட்டவர்கள் போன்றோரால்தான் குற்றச்செயல்கள் உருவாகின்றன. எனவே, நீங்கள் எப்போதும் குற்றவாளிகளை மனிதர்களாக மதித்து நடத்தவேண்டும். கண்டிப்பு இருக்கும் அதேநேரம் உங்களிடமிருந்து அன்பும் அவர்களிடம் செலுத்தப்படவேண்டும். அதாவது எந்தவொரு குற்றவாளியும் குற்றத்தை உடனே ஒத்துக்கொள்ளப்போவதில்லை. அதற்காக பொதுவாகவே காவல்துறையினரும் சரி, இராணுவத்தினரும் சரி, எல்லாவற்றிற்குமே கடுமையாக நடந்துகொள்வார்கள். ஆனால், இராணுவத்தை விடக் காவல்துறை அது விடயத்தில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும் ஏனென்றால், காவல்துறையினர் இந்த மக்களை நல்வழிப்படுத்துபவராக இருக்கவேண்டுமே யொழிய, இந்த மக்களில் இருந்து அந்நியப்பட்டவராக இருக்கமுடியாது. நீங்கள் இந்த மக்களை நெறிப்படுத்துபவராக இருக்கவேண்டுமே தவிர, அந்த மக்களுக்கும் உங்களுக்கும் ஓர் இடைவெளியும் இருக்கக்கூடாது. எனவே, நீங்கள் எப்பொழுதும் குற்றவாளிகளை அணுகும்போது, மனிதாபிமானத்துடன் அணுகவேண்டும் என்பது முக்கியமானது. மனிதர்கள் என்றாலே அவர்களிடம் பல பலவீனங்கள் இருக்கும். எல்லா மனிதர்களும் ஒழுங்காக இருந்தால் காவல்துறையே தேவையில்லை. காவல்துறையை நாங்கள் உருவாக்கவேண்டிய அவசியமகூட எழுந்திருக்காது. எனவே, எல்லோரையும் நீங்கள் மனிதர்களாகப் பார்க்கவேண்டும்.

காவல்துறையைப் பொறுத்தவரைக்கும் உங்களுடைய மனங்களிலும் வேலையின் அழுத்தம் நிறைந்திருக்கும். அதாவது உங்களுடைய வேலைகள் எப்பொழுதும் அளவுக்கு மீறியவை. ஏனென்றால், இன்று கூட காவல்துறைக்கு ஆளணித்தேவை நிறையவே உள்ளது. அப்படியிருக்கும்போது உங்களுடைய வேலைகளில் சில அழுத்தங்கள் ஏற்படும். நீங்களும் உங்களுடைய மனமும் களைத்திருக்கின்ற நேரம், உங்களுக்குக்கூட கோபங்கள், எரிச்சல்கள் போன்றவை உருவாகும். ஆனாலும், மிகவும் பொறுமையாக மக்களைக் கையாளும் தன்மை உங்களுக்கு வரவேண்டும். அதாவது உங்களது சகிப்புத் தன்மை மிகவும் உன்னதமான நிலையில் இருக்கவேண்டும். பொதுமக்களைவிட உங்களது சகிப்புத்தன்மை மிகவும் உச்ச நிலையில் இருந்தால்தான் நீங்கள் ஓர் அழுத்தமான நேரத்திலும் மக்களுடன் பழகுவதிலும் சரி காரியங்களை ஆற்றுவதிலும் சரி உறுதியாகச் செயற்பட முடியும். இந்தச் சகிப்புத்தன்மை இல்லாதவர்களினால்தான் பிரச்சினைகளே வருகின்றன.

அத்தோடு, இன்னுமொரு விடயத்தை நீங்கள் எப்பொழுதும் மனதிற்கொள்ளவேண்டும். அதிகாரம் எமது கைகளில் வரும்பொழுது எல்லாவற்றையும் அதிகாரத்தால் செய்துவிட முடியும் என்ற மன உணர்வை அது உருவாக்கும் அந்தத் தன்மையை நீங்கள் குறைத்துக்கொள்ளவேண்டும். எவ்வளவுதான் அதிகாரம் இருந்தாலும் நீங்கள் எவ்வளவிற்கெவ்வளவு மக்களுடன் அன்பாக இருக்கிறீர்களோ அவ்வளவிற்கவ்வளவு மக்கள் உங்களுடன் இணைந்து நெருங்கிப் பழகுவார்கள்.


உங்களுடைய சீருடை ஸ்ரீலங்கா பொலீஸாருடைய சீருடையைவிட வித்தியாசமானது. ஸ்ரீலங்கா அரசாங்கத்தினது சீருடை காக்கி நிறம். உங்களுடைய சீருடை மெல்லிய இளநீல நிறம். நான் இந்த நிறத்தை தெரிவுசெய்ததற்குக் கூடக் காரணம் இருக்கிறது. காலங்காலமாக எங்களுடைய மக்களிடம் பொலீஸ் என்றால் ஒரு பயம்; காக்கி உடுப்பென்றால் ஒரு பயம் என்ற நிலைமை இருந்தது. அதாவது அடக்குமுறை புரிகின்ற காவல்துறையைப் பார்த்ததால் ஏற்பட்ட ஒரு விளைவு இது. எனவே நாங்களும் அந்த உணர்வை பிரதிபலிக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சீருடையை உங்களுக்குத் தெரிவுசெய்தேன். அதாவது ஸ்ரீலங்கா பொலீஸைப் பார்த்துப் பார்த்துப் பழகிய மக்களுக்கு, அவர்களில் இருந்த அந்த வெறுப்பு, நீங்களும் அதேமாதிரிச் சீருடை தரித்தால் உங்களிடமும் வரும் மக்களின் மனங்களிலுள்ள அப்படியான அச்ச உணர்வுகளை நீங்கள்தான் மாற்றவேண்டும் அதனை நீக்கவேண்டிய கடமையும் உங்களுடையதே.

நீங்கள் இவ்வளவு காலமும்

(13ஆம் பக்கம் பார்க்க)

# சதாமின் ஈராக்கிய ஆதரவாளர்களைத் தோற்கடிக்க எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்வோம்

## தொலைக்காட்சி உரையில் ஜனாதிபதி புஷ் தெரிவிப்பு



விடுதலையின் விரோதிகள் ஈராக்கில் இறுதிக் கட்டப் போரில் ஈடுபட்டிருக்கின்றனர். அவர்களைத் தோற்கடிப்பதற்கு காலம் செல்லும்; அர்ப்பணிப்பு தேவை என்று தொலைக்காட்சியுரையில் புஷ் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்திற்கெதிரான போரை வென்று எமது சொந்த நாட்டை மேலும் பலப்படுத்துவோம் இதற்கு எது வேண்டுமானாலும் செய்வோம். எவ்வளவு வேண்டுமானாலும் செலவுசெய்வோம் என்று அவர் சூளுரைத்துள்ளார்.

ஈராக்கை புனர்நிர்மாணம் செய்வதற்கான படையினரின் ஆக்கிரமிப்புக்கு 87பில்லியன் டொலர்களை ஒதுக்குமாறு புஷ் காங்கிரஸிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இப்பணம் ஈராக்கின் புனர்நிர்மாணப் பணிகளுக்கும் செலவிடப்படும் என்றும் -

சித்திரவதைக்கூடங்கள், மனிதப் புதைகுழிகள் நிறைந்திருந்த ஈராக்கை சட்டமும், ஒழுங்கும் சுதந்திர நிறுவனங்களும் நிறைந்த இடமாக மாற்றிக் கொண்டிருக்கிறோம். ஐ.நாவுக்கு அங்கு ஒரு பிரதான பாகம் காத்திருக்கிறது என்றும் - தெரிவித்த அவர் மூன்று இலக்குகளை முன்வைத்து ஈராக்கில் போராடுகிறோம் என்றும் குறிப்பிட்டார். அவையாவன:-

1)பயங்கரவாதிகளை ஒழித்தல்

2)சுதந்திர ஈராக்கை அமைப்பதற்கு ஏனைய நாடுகளின் ஆதரவைப் பெறல்

3)தமது சொந்தப் பாதுகாப்பிலும் சொந்த எதிர்காலத்திலும் ஈராக்கியர்களை பொறுப்பேற்க வைத்தல் -

ஆயினும், எதிர்க்கட்சியான ஜனநாயக கட்சியினர் புஷ்ஷின் நடவடிக்கைகளை காரசாரமாக கண்டிக்கின்றனர்.

ஈராக்குடன் நாம் எதற்காக போர் புரிய வேண்டும் என்ற விடயம் பற்றி 15 மாதங்களாக அமெரிக்க மக்களை தவறாக வழிநடத்தியதற்கு 15 நிமிடங்கள் நடத்திய பேச்சு ஈடாகவில்லை. ஈராக்கில் 15 மாதங்கள் புனர்நிர்மாணம் தவறாக முகாமைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு ஜனநாயகக் கட்சி சார்பில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள ஹேரவாட்டின் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்கா பாதுகாப்பு கவுன்சிலுக்கு சமர்ப்பித்த பிரேரணையின் வரைவை பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகள் விமர்சித்துள்ளன. பிரேரணை ஐ.நாவுக்கோ, ஈராக்கிய மக்களுக்கோ போதிய அதிகாரங்களை வழங்கவில்லை என்று அவை தெரிவித்துள்ளன.

ஆனால், புஷ் தெரிவிக்கையில், அமெரிக்காவின் நட்பு நாடுகள் யாவும் எமது நடவடிக்கையை ஆதரிக்கவில்லை. அதற்காக நாம் முன்னைய வேறுபாடுகள், இன்றைய கடமைகளில் தலையிடுவதை அனுமதிக்க முடியாது. பயங்கரவாதிகள் நாகரிக உலகின் பிரதிநிதிகளை (ஐ.நா.அலுவலகம்) தாக்கியுள்ளனர். இவர்களை எதிர்ப்பது நாகரிக உலகின் இலட்சியமாய் இருத்தல் வேண்டும் என்று புஷ் தெரிவித்தார்.

பயங்கரவாதிகளின் தாக்குதலின் பின்னணியில் ஆத்திரமும் முனைப்பும் மட்டும் இருக்கவில்லை. பின்னணியும் இருக்கிறது. எமது பணிகள் முடிவதற்கு முன் நாம் ஈராக்கை விட்டு வெளியேற வேண்டும் என்று பயங்கரவாதிகள் விரும்புகிறார்கள். நாகரிக உலகின் விருப்பை உலுக்கிவிட விரும்புகிறார்கள் - என்று அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

இதற்கிடையே, ஈராக்கில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் இரண்டு அமெரிக்கப் படையினர் காயமடைந்துள்ளனர்.

(ஐ)

# ஜனாதிபதி புஷ்ஷிற்கு எதிராக கறுப்பு இனத்தவர் பேரணி

ஈராக்கிற்கு எதிராக ஜனாதிபதி புஷ் போர் நடத்தியது உட்பட அவரது அரசின் செயற்பாடுகளைக் கண்டித்து அமெரிக்காவில் வாழும் கறுப்பு இனத்தவர்கள் நேற்று பேரணி நடத்தினர். இந்தப் பேரணியில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.

ஈராக்கிற்கு எதிராக புஷ் போர் நடத்தியது, நிலையற்ற பொருளாதாரம் மற்றும் பொலீஸ் அத்துமீறல்களைக் கண்டித்து அமெரிக்காவில் புருக்ளின் நகரில் இந்தப் பேரணி நடைபெற்றது.

இந்தப் பேரணிக்கு புதிய கறுப்பு சிறுத்தைகள் என்ற அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்தனர். பேரணியில் பேசியவர்கள், இந்த ஆண்டு நடைபெறும் பேரணி ஈராக்கிற்கு எதிரான போருக்கு கண்டனம் தெரிவிக்கவும், துப்பாக்கிக் கலாசாரத்தை கைவிட்டு கறுப்பு இனத்தவர்கள் கல்வியைத் தொடர வேண்டும் எனக் கேட்டுக் கொள்வதற்காகவும் பேரணி நடைபெற்றதாகத் தெரிவித்தனர்.

பேரணியில் இளைஞர்கள், முதியவர்கள், ஆண்கள், பெண்கள் என வயது வித்தியாசமின்றி பலரும் பங்கேற்றனர்.

"அமெரிக்க இராணுவத்திலிருந்து கறுப்பு இனத்தவர்கள் வெளியேற வேண்டும். ஜனாதிபதி புஷ்ஷைவிட கொடிய வன்முறையாளர்கள் யாரும் இல்லை. வெள்ளை மாளிகையில் நாம் கிரிமினலை வைத்திருக்கிறோம்" என்று பேரணியில் கலந்துகொண்டோர் புஷ் நிர்வாகத்தை கடுமையாகக் கண்டித்தும் பேசினார்.

(ஐ)

# கிளர்ச்சியாளரின் தாக்குதலில் மெசிடோனியப் படையினர் பலி

மெசிடோனிய படையினருக்கும் அல்பேனிய கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடந்த சண்டையில் மெசிடோனியப் படையினர் பலர் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை ரோந்து சென்ற படையினர் மீது பதுங்கியிருந்த கிளர்ச்சியாளர்கள் திடீர் தாக்குதலை மேற்கொண்டனர். இதில் ரோந்து சென்ற படையினர் டசின் கணக்கில் கொல்லப்பட்டனர் என்று இணையத்தள செய்திகள் தெரிவிக்கின்றன.

தாக்குதல் நடத்திய கிளர்ச்சியாளர்கள் அங்குள்ள கிராமங்களுக்குள் தலைமறைவாகியுள்ளனர்.

கிளர்ச்சியாளரின் தாக்குதலை அடுத்து பொலீஸாரின் உதவியுடன் பிறெஸ்ர், மலினாயாலா ஆகிய இரண்டு கிராமங்களையும் சுற்றிவளைத்த படையினர் அங்கு கடும் தேடுதல் நடத்தி வருகின்றனர்.

கிராமங்களுக்குள் நுழைந்த படையினர் வீடு வீடாகத் தேடுதல் நடத்தி பலரைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் தீவிரவாதிகளா? என்பது தெரியவில்லை.

முன்னைய அல்பேனியக் கெரிலாக்களுடன் இணைந்த சமூக ஜனநாயகவாதிகளால் இந்தக் கிளர்ச்சிவாத இயக்கம் தேசிய விடுதலை இராணுவம் என்ற படைப்பிரிவை ஆரம்பித்தது.

மெசிடோனிய அரசு, அல்பேனியர்களின் பகுதிகளை ஆக்கிரமித்துள்ளது எனக் கூறியே அல்பேனியக் கிளர்ச்சிவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

# உலக வர்த்தக மையம் மீதான தாக்குதல் மற்றொரு ஒளிநாடா கிடைத்தது

அமெரிக்க உலக வர்த்தக மையம் மீதான தாக்குதல் தொடர்பான மற்றொரு ஒளிநாடா இப்போது கிடைத்துள்ளது.

செக்.குடியரசைச் சேர்ந்த பவல் லவா அமெரிக்காவில் கட்டுமானப் பணியாளராக உள்ளார். இவர் எடுத்ததுதான் இந்த ஒளிநாடா. இவரது மகன் இந்த ஒளிநாடாப் பதிவை சமீபத்தில் அழித்துவிட இருந்தார். ஆனால், அதற்குள் அதன் முக்கியத்துவத்தை லவா உணர்ந்துவிடவே அதைத் தடுத்துவிட்டார்.இப்போது இந்த ஒளிநாடா நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையிடம் உள்ளது. ஆங்கிலம் தெரியாதவர் லவா. முக்கியத்துவம் வாய்ந்த சம்பவத்தைதான் பதிவு செய்துள்ளோம்என அப்போது அவருக்கு உறுதியாகத் தெரியவில்லையாம். லவா தான் எடுத்த ஒளிநாடாவை தனது சகோதரர் ஜோசப் உதவியுடன் நியூயோர்க்கிலும் செக் குடியரசிலும் விற்க முயன்றுள்ளார். ஆனால், அந்த ஒளிநாடாவின் முக்கியத்துவம் தெரியாத காரணத்தால் அதனை அப்போதுயாரும் வாங்க முன்வரவில்லை என்று 'நியூயோர்க் டைம்ஸ்' குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, பணம் ஏதும் கொடுத்து இந்த ஒளிநாடாவை 'நியூயோர்க் டைம்ஸ்' பெறவில்லை. எந்தத் தொலைக்காட்சி நிறுவனத்துக்கும் விற்பனை செய்யவும் இல்லை என்று பத்திரிகை வட்டாரங்கள் தெரிவித்தன.

உலக வர்த்தக மையக் கட்டடத்தின் மீது கடந்த 2001 ஆம் ஆண்டு செப்.11 ஆம் திகதி விமானங்கள் மோதி, தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். முதலாவது விமானம் கட்டடம் மீது மோதும் காட்சி இடம்பெற்ற ஒரு ஒளிநாடா முன்னதாகக்கிடைத்தது. அது பிரெஞ்சுக்காரர் எடுத்த டொகுமெண்டரி படத்தின் போது பதிவானது. இப்போது மற்றொரு ஒளிநாடா கிடைத்துள்ளது. இது தாக்குதல் தொடர்பான விசாரணைகளுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

# பலஸ்தீனத்துக்கு புதிய பிரதமரை தெரிவுசெய்ய அரபாத் உத்தரவு

## நாடாளுமன்ற சபாநாயகர் பெயர் சிபார்சு

தனது பதவியிலிருந்து விலகுவதாக பலஸ்தீனப் பிரதமர் முஹமட் அப்பாஸ் வழங்கிய இராஜினாமாக் கடிதத்தை அதிபர் யஸீர் அரபாத் ஏற்றுக்கொண்டுள்ளார். அவருக்குப் பதிலான புதிய பிரதமர் ஒருவரைத் தெரிந்தெடுக்குமாறும் அவர் நாடாளுமன்றத்தைக் கேட்டுள்ளார்.



அரபாத்துடன் ஏற்பட்ட அதிகாரப் பிணக்குக் காரணமாக கடந்த சனியன்று முஹம்மட் அப்பாஸ் தனது பதவியை இராஜினாமாச் செய்தார்.

அவரது இடத்துக்குப் புதிய பிரதமராக தற்போதைய நடாளுமன்ற சபாநாயகர் அபு அலா என அழைக்கப்படும் அஹமட் ஹுரேயைத் தெரிவு செய்யும்படி பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் சிபாரிசு செய்துள்ளார்.

10 ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய கிழக்கு சமாதான முயற்சிகளில் நோர்வே மத்தியஸ்தராகச் செயற்பட்ட சமயத்தில் அதற்கு அனுசரணையாகப் பங்காற்றியவர் அஹமட் ஹுரே.

அமெரிக்காவும் ஐரோப்பிய யூனியனும் சமாதான விடயத்தில் தனக்கு ஆதரவு தெரிவிப்பதாக இருந்தாலேயே தான் பிரதமர் பதவியை ஏற்பேன் என்று தெரிவித்துள்ளார்.

"அமெரிக்கர்கள் எந்த வகையிலான ஆதரவைத் தருவார்கள் என்பதை நான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றேன்" - என்று நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் தெரிவித்தார்.

"நான் தோல்வியடைவதற்குத் தயாராயில்லை. சமாதானம் சாத்தியமானதா இல்லையா என்பது எனக்குத் தெரிந்தாக வேண்டும்" - என்றும் சொன்னார்.

அரபாத்தின் அதீத விசுவாசியான இவர், அபு மாஸானைப் போன்று அரபாத்துடன் அதிகாரப் போட்டியில் ஈடுபட மாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிய பிரதமர் நியமிக்கப்பட்டிருப்பினும், அரபாத் அரசியல் விவகாரங்களில் இருந்து ஒதுங்கி இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ள இஸ்ரேல், அரபாத் அவ்வாறு செய்யாவிடின் சமாதானப் பேச்சுக்களில் தமது அதிகாரிகள் பங்குபற்ற மாட்டார்கள் என்று கூறியுள்ளது.

பயங்கரவாத கறை படிந்தவர் என அரபாத்தை விமர்சிக்கும் இஸ்ரேல், அரபாத் நியமித்துள்ள புதிய பிரதமருடன் பேச்சு நடத்துவது எந்தளவுக்கு சாத்தியம் என்பது குறித்து இதுவரை முடிவு செய்யவில்லை என்று தெரிவித்துள்ளது.

அது, அரபாத்தை சமாதான முயற்சிகளில் இருந்து ஓரங்கட்டவே விரும்புகிறது. ஆனால், அரபாத்தை அடக்கி ஒடுக்கும் இஸ்ரேலின் முயற்சிக்கு முதல் தடவையாக எதிர்ப்புத் தெரிவித்துள்ள அமெரிக்கா, அபு மாஸான் இராஜினாமா செய்தாலும் தனது சமாதான முயற்சிகள் தொடரும் என்று அறிவித்துள்ளது.

(ம)

# ஏவுகணைத் தாக்குதலில் 15 பொதுமக்கள் காயம்

காஸாவில் உள்ள கட்டடத் தொகுதி மீது இஸ்ரேலிய உலங்கு வானூர்திகள் ஏவுகணைத்தாக்குதல்களை நடத்தியுள்ளன. பதினைந்து பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

காண்யௌனில் என்ற இடத்தில் இருந்த கட்டடத் தொகுதிகளே இஸ்ரேலின் ஏவுகணைத் தாக்குதலுக்கு இலக்காகியிருக்கின்றன.

இந்தக் கட்டடத் தொகுதியில் ஹமாஸ் இயக்கத்தின் ஆயுதக் களஞ்சியம் உள்ளது என்று கூறும் இஸ்ரேலிய இராணுவம், அங்கு தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது.

அத்துடன், தமது தாக்குதலை அடுத்து கட்டடத் தொகுதிக்குள் இருந்த குண்டுகள் வெடித்துச் சிதறிய சத்தம் கேட்டதாகவும் அது கூறியுள்ளது.

ஆனால், இஸ்ரேலிய உலங்கு வானூர்திகள், ஹமாஸ் இயக்கத் தளபதிகளில் ஒருவரான அப்துல் சலாமை குறிவைத்தே தாக்குதல்கள் நடத்தின என்றும் -

தாக்குதலுக்கு சிறிது நேரத்திற்கு முன்னரே அவர் அங்கிருந்து வெளியேறியிருந்தார் என்றும் - பலஸ்தீன வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏ.எவ்.பி. இணையத்தளம் செய்தி வெளியிட்டுளளது. இதற்கிடையே -

காஸாவில் துப்பாக்கியுடன் நடமாடிய ஹமாஸ் இயக்க உறுப்பினர் ஒருவரை இஸ்ரேலிய படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

ஹமாஸ் இயக்கத்தின் தலைவர்களை தேடி அழிக்கப்போவதாக இஸ்ரேலிய பிரதமர் கூறியதையடுத்து ஹாஸாவில் தொடர் தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக ஹமாஸ் இயக்கத்தின் மூத்த உறுப்பினர்களை கொல்லும் நடவடிக்கையில் இஸ்ரேலியப் படையினர் முழு வீச்சுடன் செயற்பட்டு வருகின்றனர். இஸ்ரேலின் இந்தப் போக்கை கடுமையாக கண்டித்திருக்கும் ஹமாஸ் இயக்கம், இஸ்ரேலை நிச்சயம் பழிவாங்குவோம் என்று சபதம் பூண்டுள்ளது



உ

## உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா

இன்று (09.09.2003) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணி.

**நாதஸ்வர இசை**

இணுவில ச.இராசன் குழுவினர்.
இணுவில் ப.சிவா குழுவினர்.
கலாபூஷணம கே.ஆர். சுந்தரமூர்த்தி குழுவினர்.
நாதஸ்வர வித்துவான வீ.கே.கானமூர்த்தி குழுவினர்.
நாதஸ்வர வித்துவான் சு.பாலமுருகன் குழுவினர்.

*அடியார்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.*

கருணாகரப்பிள்ளையார் கோயில். - உபயகாரர்.
உரும்பிராய்.

(22377)(12-15-21)

---

பளை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

## பணிநிலை வேண்டுகை (தற்காலிகம்)

கீழ்க்காணும் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01) பதவி.தட்டெழுத்தாளர் - 305:15
02) சம்பள அளவுத்திட்டம் - 2700.60 10.70 10.4000
03) தகைமைகள் - க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் தமிழ், கணிதம் உள்ளடக்கியதாக 06 பாடங்களில் சித்தியும் தமிழ் தட்டெழுத்தாற்றல் நிமிடத்திற்கு 15 சொற்கள் தட்டச்சுப் பொறிப் பவராகவும் இருத்தல் வேண்டும். (இதனுடன் ஆங்கிலத்தில் தட்டெழுத்தாற்றல் இருப்பது விரும்பத்தக்கது)
04) வயதெல்லை - 18 - 45 (கூட்டுறவின் சேவையிலுள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது)

குறிப்பு: சங்க எல்லைப்பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன், கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றுபவர்கள் விண்ணப்பிக்க விரும்பின் சம்பந்தப்பட்ட சங்கங்களின் ஊடாக விண்ணப்பிக்கவேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்புதல் விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கும் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து அந்நியமனத்தை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கும்.

விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரிக்கப்பட்டு 20.09.2003 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியதாக *பொது முகாமையாளர், ப.தெ.வ.அ.கூ.சங்கம், பளை* என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்கவும்.

பொது முகாமையாளர்,
ப.தெ.வ.அ.கூ.சங்கம்,
பளை.

(22378)(21-15-12)

---

## தேவாரத் திரட்டு முற்றோதல்

யாழ்ப்பாணம்,செப்.9

அகில இலங்கை திருமுறை மன்றம் மாதாந்த பூரணைத்தினத்தில் நடத்திவரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன நாளை புதன்கிழமை காலை 8 மணிமுதல் ஏழாலை இலந்தகட்டி ஸ்ரீ பாதாள வைரவர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. (எ)

## மிதிவெடியில் சிக்குண்டு இருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,செப்.9

கடந்த சனி, ஞாயிறு தினங்களில் இடம்பெற்ற இருவேறு மிதிவெடிச் சம்பவங்களில் சிக்குண்டு இருவர் படுகாயமடைந்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அரியாலை யூதா கோயிலடிப் பகுதியில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சின்னையா பாஸ்கரன் (வயது-27) என்பவர் வலது கால்பாதம் இழந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

6ஆம் திகதி சனிக்கிழமை மல்லாகம் பகுதியில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் மல்லாகம் கோணாபுரம் முகாமில் தங்கியிருக்கும் ஜே.அரியநாயகம் (வயது-50) என்பவர் படுகாயமடைந்தார்.

வளவொன்றினுள் மணல் வெட்டிய வேளையில் மண் வெட்டியினுள் மிதிவெடி சிக்குண்டு வெடித்ததில் இவர் படுகாயம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-6-15)

---

### பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்ய அல்லது நாளாந்தம் போய்வரக் கூடிய பணிப்பெண் தேவை.

தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு:
**T.P. 071 2347564**

(22376) (26-12-14)

---

## பாராட்டி வாழ்த்துகிறோம்

கிளி/பூநகரி மகா வித்தியாலய மாணவன்

**செல்வன் கணபதிப்பிள்ளை கஜேந்திரவேள்**

அவர்கள் இவ்வாண்டு க.பொ.த.உயர்தர வர்த்தகப் பிரிவில் 3A சித்திபெற்று மாவட்ட ரீதியில் 2ஆம் இடத்தைப் பெற்றமைக்காக உளம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம். மற்றும் சிறந்த பெறுபேற்றைப் பெற்ற மாணவர்களாகிய

ச.கேசவன் 2BC (கலை)
ச.சிவனருட்செல்வி 2AB (வர்த்தகம்)
த.இசைப்பிரியா A2B (வர்த்தகம்)
சி.வசந்தன் A2C (கலை)
சி.அனுஷா ABC (வர்த்தகம்)

ஆகியோரையும் மேன்மேலும் சிறப்புற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர். ஆசிரியர்கள்.
பெற்றோர்கள்.
கிளி/பூ.ம.வி.

(22373)(21-12-15)

---

உ

யாழ். புன்னாலைக்கட்டுவன் வடக்கு - பலாலி வீதி

திருவருள்மிகு அன்னை ஸ்ரீதுர்க்காதேவி

(குளத்தடி நாச்சிமார்)

கட்டுக்குள கந்தசுவாமி திருக்கோயில்

புனராவர்த்தன அஷ்டபந்தன

## மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

*கர்மாரம்பம்:* நாளை (10.09.2003) புதன்கிழமை அதிகாலை 5.30மணி.
*எண்ணெய்க்காப்பு:* 11.09.2003 வியாழக்கிழமை காலை 7.00மணி முதல் பி.ப. 4.00 மணி வரை.
*மஹாகும்பாபிஷேகம்:* 12.09.2003 வெள்ளிக்கிழமை அதிகாலை 6.05 மணி முதல் காலை 7.05 மணி வரையுள்ள சுபவேளை.
*பிரதிஷ்டா பிரதமகுரு:* வேதாகம கிரியாஜோதி, ஆகம கிரியாதிலகம், சிவாசாரியரத்ன பிரம்மஸ்ரீ ந. சபாரத்தின சிவாச்சாரியார் (தேவஸ்தான ஆதீனகுரு)

குறிப்பு: மண்டலாபிஷேகம் செய்ய விரும்பும் அடியார்கள் தேவஸ்தானத்தில் தொடர்புகொள்ளவும்.

★ *அன்றைய தினங்களில் கோயிலுக்கு சென்றுவர மினிபஸ் சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.*

*அனைவரும் வருக. அம்பிகை அருள் பெறுக.*

புன்னாலைக்கட்டுவன் வடக்கு. - தேவஸ்தானத்தினர்.
புன்னாலைக்கட்டுவன்.

(C-30069)(21-12-15)

---

# கேள்வி கோரல்

இலங்கை சனநாயக சோசலிஸ குடியரசு

வடக்கு - கிழக்கு மாகாண சபை

மின்சாரப் பொறுப்பீடுகள் திணைக்களம் வ.கி.மாகாணம், திருகோணமலை மூலம் மேற்கொள்ளப்படும் கிராமிய மின் வழங்கல் திட்டம்.

**வலுவூட்டப்பட்ட கொங்கிறீற்று மின்கம்பங்கள் (8.3 மீற்றர் 100கி.கி. மற்றும் முழு அலுமினிய கடத்திகள் (AAC) ஆகியவற்றுக்கான வழங்கல், ஏற்றி இறக்கல், வழங்கி ஏற்றி இறக்கல்.**

01. வன்னி புனர்வாழ்வு துணைபுரியும் அமைச்சு மூலம் பெறப்பட்ட நிதியில் மின்சார பொறுப்பீடுகள் திணைக்களத்தினால் முல்லைத்தீவு பட்டணத்திற்கான மின்வழங்கல் திட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.
02. முத்திரையிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள், பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம், வ.கி மாகாணம் அவர்களால் பொருத்தமான வழங்குவது ஏற்றி இறக்குவது எனும் கீழ்வரும் விவரத் தரவுகளுக்கேற்ப வரவேற்கப்படுகின்றது.
03. கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நாளிலிருந்து 60 நாள்களிற்கு செல்லுபடியாகும்.
04. கேள்விப்பத்திரங்கள் 24.09.2003 காலை 10.00 மணிவரை *பணிப்பாளர், கட்டடங்கள் திணைக்களம், வ.கி.மாகாணம், உட்துறைமுக வீதி, திருகோணமலை* அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரம் தாங்கிய கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் *"வலுவூட்டப்பட்ட மின்கம்பங்கள், முழு அலுமினியக்கடத்திகளின் வழங்கல்/ஏற்றி இறக்கல், வழங்கி ஏற்றி இறக்கல்"* எனக் குறிப்பிட்டு *தலைவர், திணைக்கள கேள்விச் சபை, கட்டடங்கள் திணைக்களம், வ.கி.மாகாணம், உட்துறைமுக வீதி, திருகோணமலை* எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
05. **வழங்கல், ஏற்றி இறக்கல் சம்பந்தமான விவரங்கள்.**
    (i) 8.3 மீற்றர், 100 கி.கி. வலுவூட்டப்பட்ட கொங்கிறீற்று மின்தூண்கள் (இ.மி. சபையின் வசைபட இல. DS&S/95/7709 இற்கு அமைய) எண்ணிக்கைகள், 100 வழங்கல்.
    (ii) முழு அலுமினியக் கடத்தி (AAC) 7/0, 134 (FLY) பரிமாணத்துடன் 16,000 மீற்றர்கள் வழங்கல்.
    (iii) இல. 11 அளவுடைய கல்வனையிட்டு புவியிடல் கம்பிகள். 4000 மீற்றர்கள் வழங்கல்.
    (iv) மேற்குறித்த பொருள்கள் I, II & III இற்கான ஏற்றி இறக்கல் (விநியோகமையத்திலிருந்து வவுனியா மி.பொ.தி. கிளை அலுவலகம் வரை)
    (v) மேற்குறித்த பொருள்கள் I, II & III ஏற்றி இறக்கல் (வவுனியா கிளை அலுவலகத்திலிருந்து முல்லைத்தீவு வேலைத்தளம் வரை)
06. கேள்விப்பத்திரங்கள் 24.09.2003 காலை 10.00 மணிக்கு *பணிப்பாளர், கட்டடத் திணைக்களம், வ.கி.மாகாணம், திருகோணமலை* அலுவலகத்தில் திறக்கப்படும்.
07. கேள்விப்பத்திரம் சம்பந்தமான மேலதிக விவரங்கள் தேவைப்படின் வழமையான காரியாலய நேரங்களில், *எந்திரி எஸ்.ஆர்.திலீபன், பிரதம பொறியியலாளர், மின்சார பொறுப்பீடுகள் திணைக்களம், திருகோணமலை* அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி. 026-2221021 அல்லது 026-2222261.

மாகாணப் பணிப்பாளர்,
கட்டடங்கள் திணைக்களம், வ.கி.மாகாணம்.,
உட்துறைமுக வீதி, திருகோணமலை.

(C-30076)(21-12-15)

உதயன்

# கூட்டமைப்பு முயற்சி தோல்வி; ஆனால் ஆபத்து நீங்கியதா?

புதிய கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஜே.வி.பியும் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

பேரினவாதத்தில் ஊறித்திளைத்து நிற்கும் ஜே.வி.பிக்கு முன்னுரிமை வழங்கக் கூடிய கூட்டமைப்பு முளையிலேயே கருகிப்போயிருப்பது சகலருக்கும் சமநீதி கிடைக்கவேண்டும் என விரும்புவோரின் மனதில் பால் வார்த்திருக்கின்றது.

நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பூசலுக்கு அதிகாரப் பகிர்வுமூலம் தீர்வுகாணும் முயற்சியைக் கடுமையாக எதிர்க்கின்றது ஜே.வி.பி. அதுமட்டுமல்ல, தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு அனுசரணையாளர்களாக நோர்வேத் தரப்பு அழைக்கப்பட்டிருப்பதையும் அடியோடு ஆட்சேபிக்கின்றது அக்கட்சி.

இந்த இரண்டு விடயங்களிலும் ஜே.வி.பியின் தீவிர நிலைப்பாட்டை சுதந்திரக்கட்சி ஏற்கத் தவறியதே - கொள்கை ரீதியாக இணங்க மறுத்தமையே கூட்டு சாத்தியப்படாமல் போனதற்கான அடிப்படைக் காரணம் என்று பிரசாரப்படுத்தப்படுகின்றது.

அது உண்மையானால் - இந்த இரண்டு விடயங்களிலும் விட்டுக்கொடுக்க முடியாத நிலைப்பாட்டைப் பின்பற்றிய தேசியக் கட்சி என்ற முறையில் - சுதந்திரக் கட்சியைப் பாராட்டலாம்.

எனினும், கூட்டமைப்பு முயற்சி தோல்வியில் முடிவடைந்தது என்ற செய்தி வெளியான பின்னர் கசியவிடப்படும் வேறு சில தகவல்கள் சமநீதி நிலைக்க விரும்புவோரின் மனதை நெருடாமல் இல்லை.

அத்தகைய தகவல்களில் ஒன்று ஜே.வி.பி. பக்கத்திலிருந்தும் மற்றது சு.க. பக்கத்தில் இருந்தும் வந்துள்ளது.

"தேசிய அரசு ஒன்றை அமைப்பது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களே தோல்வியில் முடிவடைந்தன. மக்கள் விரோத ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கவிழ்க்கும் முயற்சிகள் பற்றிய பேச்சுக்களுக்கு ஜே.வி.பியின் கதவுகள் இன்னும் திறந்தே உள்ளன" - என்று ஜே.வி.பி. அறிவித்திருக்கின்றது.

அதேசமயம், ஜே.வி.பியுடன் கூட்டு அமைக்கும் முயற்சியைக் கைவிடாமல் தொடர்ந்து முன்னெடுக்கும்படி சுதந்திரக்கட்சி பிரமுகர்களான மங்கள சமரவீர, அனுர பண்டாரநாயக்க, டிலான் பெரேரா ஆகியோர் உட்பட - இரண்டு டசினுக்கும் குறையாத எண்ணிக்கையுடைய - எம்.பிக்கள் கட்சித் தலைவியான ஜனாதிபதி குமாரதுங்கவைக் கோரியிருக்கின்றனர் என்ற தகவல் சு.க. வட்டாரங்களில் இருந்து வெளியிடப்பட்டிருக்கின்றது.

இத்தகவல்கள் கூட்டமைப்பு முயற்சி கூண்டோடு தகர்ந்து போய்விடவில்லை என்பதைக் காட்டுகின்றன.

தற்போதைய அரசைக் கலைத்துவிட்டு, புதிய தேர்தல் ஒன்றைக் கூட்டாகச் சந்திக்கும் முயற்சி தொடர்பான ஏற்பாடுகள் குறித்தே சு.க. - ஜே.வி.பி. இடையே இணக்கம் ஏற்படாமல் போயிருக்கின்றது.

ஆனால், தற்போதைய ஐ.தே. முன்னணி அரசை வீட்டுக்கு அனுப்பவேண்டும் என்பதில் இரு கட்சிகளுமே தீவிரமாக இருக்கின்றன என்பது உறுதி. அந்த விடயத்தில் எந்தக் கொள்கையும் இல்லாமல் கூட்டுச் சேர்வதற்கும் அவை இரண்டும் தயார் என்பதும் உண்மை.

எனவே, பொதுத்தேர்தலை சந்திக்கும் விடயத்தில் தமக்குள் உடன்பாடு ஒன்றை எட்ட முடியாத இக்கட்சிகள் இரண்டும், தேர்தலைச் சந்திக்காத வகையில் தற்போதைய அரசைக் கவிழ்ப்பதற்கு திட்டமிட்டுச் செயலாற்றலாம் என்றே பலரும் எதிர்பார்க்கின்றார்கள்.

தற்போதைய ஐ.தே. முன்னணி அரசை வீட்டுக்கு அனுப்பிவிட்டு, தங்களுக்குள் மாற்று அரசை அமைப்பதற்கு அவை தருணம் பார்த்துக் காத்திருக்கின்றன. அதற்கு வாய்ப்பாக, நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை பற்றிய அட்சரகணிதம் தங்களுக்கு சாதகமாகும் நிலைமையை அவையிரண்டும் எதிர்பார்த்திருக்கின்றன.

அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் தற்போதைய சமாதான முயற்சிகள் கிடப்பில் போடப்பட்டுவிடும் என்பதும் நிச்சயம்.

எனவே, கூட்டமைப்பு முயற்சி முறிந்ததால் தற்போதைய சமாதான நடவடிக்கைகளுக்கு நேரவிருந்த பேராபத்து நீங்கிவிட்டது என்று கருதிவிட முடியாது. மழை ஓய்ந்துள்ளது. தூவானம் இன்னும் விடவில்லை. எப்போது வேண்டுமானாலும் மீண்டும் மழை கொட்டலாம் என்பதே இப்போதுள்ள நிலையாகும்.

நல்லூர் ஆலயச் சூழலில்

# தவறவிடப்பட்ட பொருள்கள் இன்று முதல் விநியோகம்

## கோட்ட அரசியல் பணிமனையில் வைத்து

நல்லூர் ஆலய உற்சவ காலத்தின்போது அடியார்களினால் தவறவிடப்பட்ட மற்றும் களவுகொடுத்து மீட்கப்பட்ட பொருள்கள் இன்று நல்லூர், வைமன் வீதியில் உள்ள நல்லூர் அரசியல்துறைப் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளன.

நல்லூர், யாழ்ப்பாணக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன், யாழ். மாநகரசபை ஆணையாளர் இ.இராமலிங்கம், சிறப்புச் செயலணித் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் கிராம அலுவலர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொள்வர்.

காலை 9 மணிமுதல் இந்தப் பொருள்கள் விநியோகம் செய்யப்படவுள்ளன. இவற்றில் கைவிடப்பட்ட பணப்பைகள், ஆண்கள், பெண்களுக்கான கைக்கடிகாரங்கள், தங்கநகைகள், மோட்டார் சைக்கிள், சைக்கிள் திறப்புக்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைகள், விசேட அடையாள அட்டைகள் என்பன அடங்குகின்றன. நல்லூர் ஆலயச்சூழலில் பொருள்களைக் கைவிட்டவர்கள் தகுந்த அடையாளம் காட்டித் தத்தமது பொருள்களைப் பெற்றுச் செல்லமுடியும் என்று - சிறப்புச் செயலணியினர் கேட்டுக்கொள்கின்றனர். (எ-86)

# நாட்டு நடப்பு

## நல்லையூர்க் கந்தன் திருப்பள்ளியெழுச்சி (1)

*போற்றி எம் நல்லூர் பதிஉறை பொருளே*
*புலர்ந்தது புதியதோர் 'பண்பாடதும்' இங்கு*
*ஏற்றியுனை எழில்பெறு தேரினில் இருத்த*
*எழில் நகையோடு கண்டனை யெல்லாம்*
*முற்றிலும் புதிய நடை உடை கொண்டு*
*முழுதுமாய் எம் "பண்பாட்டினை" க் கொன்றார்*
*நாற்புற வீதியில் நடந்தவை யெல்லாம்*
*நாயகனே! நீ அறிந்தவை யன்றோ!!*
*போற்றிடும் யோகதவமுனி நடந்த*
*பூதலம் வியக்கும் நல்லூரில்*
*சாற்றுவேன் கண்ட காட்சிகள் தம்மை*
*சங்கரன் புதல்வா! பள்ளி எழுந்தருளாயே!*

- விகடகவி.

# நாட்டில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட அனைவரதும் கடின உழைப்பு அவசியம்

## அமைச்சர் பீரிஸ் வேண்டுகோள்



கொழும்பு,செப்.9

தனியார்துறையினர் வர்த்தகத்துறையில் இலாபம் ஈட்டுவதோடு, நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்கும் நல்ல பங்களிப்பினை செய்கின்றனர். இந்தநிலை அரசாங்கத்துறையிலோ, கூட்டுத்தாபனங்களிலோ இல்லாதிருப்பது கவலைக்குரியதாகும். நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைப் பேணுவதற்கு அனைவரும் கடினமாக உழைக்க முன்வரவேண்டும்.

கடந்த வியாழக்கிழமை கலதாரி ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை ஏற்றுமதியாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

வெளிநாட்டுத் தூதுவர்கள், இலங்கை ஏற்றுமதியாளர் சங்கத்தின் தலைவர் கிரேஷியன் குணவர்த்தன, பிரபல வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் கலந்துகொண்ட இந்த வைபவத்தில் அமைச்சர் மேலும் கூறியதாவது:-

நாட்டில் தற்போது சுமுகமான நிலை தோன்றியுள்ளது. யுத்தம் இல்லாத இத்தகைய சூழ்நிலை தொடர்ந்தும் காணப்பட வேண்டுமென எமது அரசாங்கம் மட்டுமல்ல, உலக நாடுகளும் விருப்பம் கொண்டுள்ளன. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இங்கு முதலீடு செய்வதற்கு சமாதானம் நீடித்திருக்க வேண்டுமென்றே விரும்புகின்றனர். இதற்கான அடித்தளத்தை அமைத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செயற்பட்டதினால் யுத்தத்திற்கு செலவுசெய்யப்பட்ட பெரும் தொகை நிதி தற்பொழுது நாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்காகச் செலவிடப்படுகிறது. வெளிநாட்டு நிதி உதவிகளும் எம்மை வந்தடையவுள்ளன.

இலங்கையின் உற்பத்திப் பொருள்களுக்கு உலக நாடுகளில் நல்ல சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதில் ஏற்றுமதியாளர் சங்கம் ஆர்வம் கொண்டுள்ளது. பாரம்பரியமற்ற எமது உள்நாட்டு உற்பத்திகளையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலும் இலங்கை ஏற்றுமதியாளர் சங்கம் பெரும் பங்களிப்பினை செய்து வருகின்றது.

நிலையான சமாதானத்தை நாம் ஏற்படுத்திவிட்டால் மலேசியா, சிங்கப்பூர் நாடுகளைப் போன்று நாமும் விரைவில் பொருளாதார வளர்ச்சியை அடையலாம் - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரதமர் நாடாளுமன்றத்தைக் கூட்டாதது ஏன்? மங்கள சமரவீர புதிய விளக்கம் தருகின்றார்

"இந்திய சோதிடர் ஒருவரின் சோதிட ஆலோசனைப்படியே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தைக் கூட்டாமல் காலம் கடத்தி வருகின்றார். இந்தநிலை தொடர்ந்தால் எதிர்க் கட்சிகள் எல்லாம் இணைந்து நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்டுமாறு அரசை வலியுறுத்துவோம்."

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிழக்கில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் அது தொடர்பாக நாடாளுமன்றத்துக்குப் பதில் கூறவேண்டிய பிரதமர், நாடாளுமன்றத்தைக் கூட்டாமல் உள்ளார்.

இம்மாதத்தில் நாடாளுமன்றத்தைக் கூட்டினால் அரசின் பக்கமிருந்து பெரும்பாலான உறுப்பினர்கள் எதிர்ப்பக்கம் சென்று அமர்ந்துவிடுவரென்று இந்திய சோதிடர் பிரதமருக்குக் கூறியுள்ளார்.

அரசின் தற்போதைய செயற்பாடுகள் அமைச்சர்களில் பெரும்பாலானவர்களுக்கே தெரியாது. பிரதமரின் மற்றும் ஜீ.எல்.பீரிஸின் செயற்பாடுகள் பலரின் அதிருப்தியைச் சம்பாதித்துள்ளன. அமைச்சர் மிலிந்த மொறகொடகூட இந்தச் சமாதானப் பேச்சுக்களை கைகழுவி விட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்தநிலையில், முதற்றடவையாகப் புலிகள் தமது யுத்த கோஷத்தை உரத்துக் கூறியுள்ளனர். புலிகளின் உத்தியோகபூர்வ இணையத்தளமான 'தமிழ்நெட்'டில் புலிகள் விடுத்துள்ள அறிக்கையின்படி இந்த மாத இறுதிக்குள் இடைக்கால நிர்வாகம் தொடர்பாக புலிகளின் யோசனை அரசுக்கு சமர்ப்பிக்கப்படும் எனவும், அதனை அரசு ஏற்றுக்கொள்ளாவிட்டால் யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீள்பரிசீலனை செய்யவேண்டிவரும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது "நான் அனுப்பும் யோசனையை ஏற்காவிட்டால் அடிப்பேன்" எனக்கூறுவது போலவேயுள்ளது.

- இவ்வாறு ஓர் அமைப்பு அரசாங்கம் ஒன்றை அச்சுறுத்துவது உலகில் இதுவே முதல் முறையாகும்.

திருகோணமலை மற்றும் கிழக்கு மாகாண நிலைமைகளில் மாற்றம் எதுவும் இல்லை என்பதுபோல பிரதமர் நடந்து கொள்கின்றார். அவ்வாறெனில், தொலைக்காட்சியில் இது தொடர்பாக மக்களுக்கு விளக்கமளிக்கவேண்டும் என பிரதமருக்கு நாம் சவால் விடுகின்றோம் - இவ்வாறு அவர் கூறினார்.

# தும்பளை பகுதியில் திருட்டு அதிகரிப்பு

## முகமூடி சகிதம் திருடர்கள் கைவரிசை

கரவெட்டி,செப்.9

வடமராட்சி, தும்பளைப் பகுதியில் கடந்த சில வாரங்களாகத் திருடர்களின் தொல்லை அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாகத் தும்பளைப் பகுதியிலுள்ள மணல் ஒழுங்கை, திகிரி ஒழுங்கை போன்றவற்றில் முகமூடி சகிதம் திருடர்கள் நடமாடுவதாகவும், இரவு வேளைகளில் வீடுகளுக்குள் புகும் இவர்கள் பொருள்களைத் திருடிச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இக்குழுவினால் அண்மையில் அப்பகுதியில் உள்ள வீடுகளில் தங்க நகைகள் மற்றும் சைக்கிள்கள் என்பன திருடப்பட்டுள்ளன. கத்திகள் மற்றும் பொல்லுகள் சகிதம் நடமாடும் இவர்கள் திருட்டில் ஈடுபடும் வேளைகளில் மக்களுக்குக் கொலைப் பயமுறுத்தல் விடுத்து வருகின்றனர் என்றும் - மக்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் - திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பதை அடுத்து அப்பகுதியில் விழிப்புக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. (எ-10-70)

### நாளை

ஆவணி 24
புதன்கிழமை
(10.09.2003)
திதி : பூரணை
முன்னிரவு 10.43 வரை
நட்சத்திரம்: சதயம்
பிற்பகல் 4.38 வரை
பூரணை விரதம்
சுபநேரம்: 4.38 - 6.03
ராகுகாலம்: 12.03 - 1.33
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

துன்பம் அனுபவித்த காலத்தை மறந்துவிடு. ஆனால், அது உனக்கு கற்பித்த பாடத்தை மறந்துவிடாதே.

# பத்திரிகையாளர்கள் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடவேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர்

பத்திரிகையாளர்களுக்கு பூரண சுதந்திரம் கிடைக்க வழி செய்வதாக உறுதிகூறி ஆட்சியைக் கைப்பற்றிய ஐக்கிய தேசிய முன்னணி இன்று அதற்கு முற்றிலும் முரணாகச் செயற்பட்டு வருகின்றது. அரச செய்தி நிறுவனங்களில் செயலாற்றிய சிறந்த பத்திரிகையாளர்களை வெளியேற்றிவிட்டு அரசின் ஆதரவாளர்களை அந்த இடங்களுக்கு நியமித்திருப்பது பத்திரிகையாளர்களுக்கு விடுத்திருக்கும் அச்சுறுத்தல் என்பதையே காட்டுகிறது.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

8ஆம் திகதி சர்வதேச ஊடகவியலாளர் நல்லுறவு தினத்தை முன்னிட்டு எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஊடகத்துறையில் மிகவும் மதிப்புக்குரியவராக இருந்த செக்கோஸ்லவாக்கிய எழுத்தாளர் ஜூலியஸ் புவிக் 1943ஆம் ஆண்டு செப்ரெம்பர் 8ஆம் திகதி ஹிட்லரின் நாஸிப்படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டு அறுபது வருடங்கள் பூர்த்தியாகின்றன. சுதந்திரமான தமது கருத்தை வெளியிடுவதற்கு ஏற்படும் அச்சுறுத்தல்களுக்கு எதிராக ஊடகவியலாளர்கள் போர்க்கொடி தூக்கவேண்டும் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# மண்ணின் கதைகளைத் திரையிட தாயக நிறுவனங்களே வருக!

## 'ஸ்கிறிப்ற் நெற்' இணைப்பாளர் அழைப்பு

யாழ்ப்பாணம்,செப்.9

எமது மண்ணின் கதைகளை திரைப்படமாகத் தயாரிக்க, தாயகத்திலுள்ள திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் 'ஸ்கிறிப்ற் நெற்' திட்ட இணைப்பாளர் ஆ.ஞானதாஸ்.

இது தொடர்பாக இணைப்பாளர் மேலும் தெரிவிக்கையில்:-

எமது திரைப்பட உருவாக்கப் பயிற்சியின் 3 ஆவது கட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்ட பதினொரு எழுத்தாளர்களின் திரைக்கதைகளும் மிகத தரம் வாய்ந்தவை.

எமது தாயக மண்ணின் கதைகளை அழகியலுடன் யதார்த்தமாகக கூறுபவை. அந்த எழுத்தாளர்களின் திரைப்படங்கள், தாயகத் திரைப்படத் துறையிலே நிச்சயமாக இன்னொரு பரிணாம வளர்ச்சியாக இருக்கும். தமிழுனுக்கான காண்பிய மொழிகள் நமது மண்ணிலேயே பிறக்கவும் -

அவை மொழி எல்லையைத் தாண்டி சர்வதேசத்தைச் சென்றடையவும் - வழிசமைக்கப்பட வேண்டும்.

மூன்றாவது கட்டத் தெரிவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பதினொரு திரைக் கதைகளில் நேற்றைய சுவடு (ச.சாரங்கா - சங்கத்தானை), மூக்குப் பேணி (ராகவன்), செருப்பு (கௌதமன்), துடிக்கும் கண்கள் (கேசவராஜன்) ஆகிய நான்கு கதைகள் மட்டும் ஸ்கிறிப்ற்நெற் இணையத் தளத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன.

பிரித்தானியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த திரைப்படத் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் இத்திரைகளைத் தயாரிக்கவுள்ளனர்.

ஹரி (ஜமுனாராணி), பயணம் (அமரதாஸ்) ஒரு பயணத்தின் துகள் (அல்பேர்ட் பௌலஸ்), துடிக்கும் கணங்கள் (கேசவராஜன்), செருப்பு (கௌதமன்) ஆகிய திரைக் கதைகள் தயாரிப்புக்காக சிபார்சு செய்யப்பட்டுள்ளன. இத்திரைக் கதைகளுக்கான இயக்குநர் மற்றும் தயாரிப்பாளர்கள் விரைவில் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்றும் -

அவர்களுக்கான பயிற்சிகள் அடுத்தமாதம் ஆரம்பமாகவுள்ளன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இந்த ஐந்து திரைக்கதைகளில் இறுதியாக தெரிவுசெய்யப்படும் இரண்டுக்கு மட்டுமே தயாரிப்புக்கான செலவை 'யுனெஸ்கோ' வழங்கவுள்ளது.

தெற்கிலிருந்து ஸ்கிறிப்ற் நெற் அமைப்பு தெரிவுசெய்துள்ள மூன்று திரைக்கதைகள் உட்பட ஐந்து திரைக்கதைகளும் நவம்பர் மாத இறுதிக்குள் படமாக்கப்படவுள்ளன. அவை சர்வதேச திரைப்பட விழாவிலும், இலங்கையில் 40 இடங்களிலும் மற்றும் கனடாவில் நடைபெறும் ரொரன்டோ திரைப்பட விழாவிலும் திரையிடப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

(எ-9)

## சமுர்த்தி வங்கி திறப்பு விழா

வலி.கிழக்கு,செப்.9

கோப்பாய் பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க திறப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை வீதி, கோப்பாய், பூதர்மடம் பகுதியில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக வலி.கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.யாழவன், வலி.கிழக்கு பிரதேச சபை செயலாளர் க.வெங்கடாசலம், கோப்பாய் உதவிப் பிரதேச செயலர் க.இராசதுரை, கோப்பாய் பிரதேச செயலக கணக்காளர் செ. மனோகரன், திட்டமிடல் பணிப்பாளர் ஆ.கதிரமலைநாதன் ஆகியோர் கலந்துகொள்வர்.(எ-180)

## கொழும்பில் பொலீஸார் விசேட ரோந்து

கொழும்பு,செப்.9

வெளிமாவட்டங்களில் இருந்து இரவு நேரங்களில் கொழும்புக்கு வரும் பயணிகளை அச்சுறுத்தி அவர்களின் உடைமைகளை அபகரிக்கும் கொள்ளையரை கைதுசெய்வதற்காக விசேட ரோந்து நடவடிக்கைகளை மேற்கொள்ள பொலஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜா தீர்மானித்துள்ளார்.

அண்மைக் காலமாக கொழும்பு நகருக்கு வரும் பயணிகளிடம் கொள்ளையர்கள் பரிசோதனை நடத்தும் பாவனையில் உடைமைகளைப் பறித்துவருவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதை அடுத்தே இந்த ரோந்து நடவடிக்கையினை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளதாகவும்-

மேலும், இரவு நேரங்களிலும் அதிகாலை நேரங்களிலும் கொழும்புக்கு வரும் பயணிகளைப் பாதுகாப்பதற்காக சிவில் உடையில் பொலீஸாரை கடமையில் ஈடுபடுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் -

பொலீஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (எ-6)

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 01 | 01 |
| 04 | 09 |
| 1948 | 1996 |



### திருமதி மீனாம்பிகை நடராசா

திதி:- 09.09.2003

அன்பு அம்மா
ஆண்டுகள் ஏழு மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை
விட்டு அகலாது!

"மீனா இல்லம்",
புகையிரத வீதி அருகில்,
மல்லாகம். (21-14)

கணவர், பிள்ளைகள்,
மருமகன், பேர்த்தி,
தாய், சகோதரர்கள்.

(22356)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

| மண்ணில் மாதரசியாக | விண்ணில் விடிவெள்ளியாக |
|---|---|
| 12 | 10 |
| 10 | 08 |
| 1929 | 2003 |



### திருமதி புவனேஸ்வரி திருச்செல்வன்

திங்கள் ஒன்று ஆனதோ - அம்மா
நீங்கள் விண்ணுலகு சென்று
அன்பின் வழிநின்று எம்மை என்றும்
பண்புடன் வாழ வைத்த தெய்வமே!
கண்ணில் நீர்வழியக் கலங்குவது
நாம் மட்டுமல்ல - உங்கள்
அண்ட வந்தோரை ஆதரித்து அரவணைக்கும்
பண்பினால் கவரப்பட்ட ஊராரும்
உற்றார், உறவினரும், நண்பர்களும் தான்
அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

திருமதி சிவகாமி தர்மபாலா,
இளவாலை.

- குடும்பத்தினர்.

(22327)


## திருமண நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது

திரு.க:ரவிகரன், செல்வி க.உமாபதி ஆகியோருக்கு நல்லை திருஞானசம்பந்த ஆதீனத்தில் 10.09.2003 அன்று காலை 11.22-12.22 மணிக்கு நடைபெற இருந்த திருமண நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
திருமதி இராசமலர் கந்தையா (தாய்)

(22371)(21-14)

## STUDY IN INDIA

*We Recruit Students To Reputed And Recognized Colleges in India*

*Medical & Paramedical Courses:*

MBBS - *Medicine*, BDS - *Dental Science* BMLT,
B. Pharma, BPT - *Physiotherapy*
*Colleges recognized by Sri Lanka Medical Council, Affiliated to Rajiv Ghandhi University of Health Science and Bangalore University.*

*Bachelor of Engineering (B.E) Course :*

B.E. *(Electronics and communication / Electrical & Electronics / Mechanical / Computer Science / Chemical / Telecommunication)*
*Colleges Affiliated to Visveshwarajah Technical University & Approved by AICTE, New Delhi.*

*Other degree courses :*

BCA, BBM, BHM, B.Sc. *(all branches)*
M.Sc. *(all branches)*
*Call or visit for Guidance and Admission*

Director
Institute of Informatics Studies (IIS)
100, Clock Tower Road, Jaffna.
Tel : 222 2831.

We deliver quality Education, cost effective fee structure and wide recognition.

(C30071) (21-14-31)


## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13 | 25 |
| 06 | 08 |
| 1981 | 1999 |



### செல்வி கனகசபை திருமகள்

திதி:- சதுர்த்தசி 09.09.2003

பாசத் திருவுருவே! பண்பான திருமகளே!
நேசத்துடன் கந்தனையே வந்தனை செய்ய செல்கையிலே
தேசத்தினை விட்டு காலன் கவர்ந்து சென்றானே -
கலங்குகின்றோம்.
கள்ளமிலா வாசமலர் உனையிழந்து வாடுகின்றோம்
உள்ளத்தில் உறுதியில்லை உணர்வினிலே நிஜமில்லை.
உன்னை அனுதினமும் எண்ணுகின்றோம்! ஏங்குகின்றோம்!
எம்மை வந்து தேற்றிடம்மா

ஓம் சாந்தி!

மீசாலை வடக்கு,
மீசாலை.

உன்பிரிவால் ஏங்கும்:
பெற்றோர், சகோதரர்கள்.

(22372)




உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக சேவையில் பெற்றிட





LG
Digitally Yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

# போதைப்பொருள் சந்தையாக மாறிவருகிறது இலங்கை

கே.எஸ்.எம்.

"நோயற்ற வாழ்வே உலகின் உயர்வான சுகம்" எனப் புத்த பகவான் கூறியுள்ளார். நோயற்ற வாழ்வின் மகத்துவத்தினை நன்குணர்ந்ததாலேயே புத்தபகவான் அவ்வாறு தெரிவித்துள்ளமை நன்கு புலனாகின்றது. ஆனால், நோயற்ற வாழ்வை சீரழிக்கும் போதைப் பொருள் என்னும் பயங்கரமான அரக்கன் இன்று முழு உலகையும் ஆட்கொண்டுள்ளான்.

பலவகையான போதைப் பொருள்களுக்கு அடிமையான பத்து லட்சத்துக்கும் அதிகமானோர் உலகெங்கிலும் உள்ளனர். அதேவேளை, உலகில் ஆண்டொன்றுக்கு கோடிக்கணக்கானவர்கள் போதைப்பொருள் பாவனையினால் பாதிக்கப்பட்டு நோயாளிகளாகி மரணத்தைத் தழுவிக் கொள்கின்றனர். இதிலிருந்து போதைப்பொருள் அரக்கனின் பயங்கரத் தன்மை எவ்வாறானது என்பதை உணரமுடிகிறது.

இலங்கைக்கும் இப்போதை அரக்கனின் பிடியிலிருந்து மீள்வதற்கான வாய்ப்பு கிடைக்காமலேயே உள்ளது. இன்று இலங்கையும் போதைப்பொருள் வர்த்தகத்தின் சொர்க்கபூமியாக மாறியுள்ளதே இதற்குக் காரணமாகும். இந்தப் போதைப்பொருள்களில் ஹெரோயின் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. காலங்காலமாகவே போதைப்பொருள் விநியோகத்தின் மத்திய நிலையமாக இலங்கை விளங்கி வந்துள்ளது.

இலங்கையில் ஹெரோயினுக்கு அடிமையானோரின் தொகை ஒரு லட்சத்தைத் தாண்டிவிட்டது என பொலீஸாரின் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு தெரிவிக்கிறது. போதைப் பொருளுக்கு அடிமையான ஒருவர் போதைப்பொருளுக்காக நாளொன்றுக்கு சாதாரணமாக 500 ரூபாவுக்கும் மேலாகவே விரயமாக்குகிறார். இதற்கமைய போதைப்பொருள் விரும்பிகள் போதைப்பொருள்களை வாங்குவதற்காக நாளொன்றுக்கு ஐந்து கோடி ரூபாவை விரயமாக்குகிறார்களென பொலீஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் சிரேஷ்ட பணிப்பாளரான பொலீஸ் அத்தியட்சகர் சுஜீத் ஜயசுந்தர சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் இப்பெருந்தொகையான பணம் இவ்வாறு பயனற்ற விதத்தில் விரயமாவது அழிவிற்கே அடிகோலுமென்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. நோயற்ற சமுதாயமொன்றை உருவாக்கும் எமது பிரயத்தனத்திற்கு இது ஒரு மாபெரும் அடியாகும்.

இலங்கைக்கு, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிலிருந்தே அதிக அளவில் ஹெரோயின் கடத்தப்படுகிறது. அதில் இந்தியா முக்கியபங்கு வகிக்கிறது. இது தவிர ஆசியாவிலேயே மிகப்பாரிய அளவில் சட்டவிரோதமான ஹெரோயின் உற்பத்தியிலீடுபட்டுள்ள லாவோஸ்,


கைப்பற்றப்பட்ட 'ஹெரோயின்' போதைப்பொருள்களுடன் பொலீஸார்.

மியன்மார் மற்றும் தாய்லாந்து ஆகிய "தங்கமுக்கோணம்" என்றழைக்கப்படும் பிரதேசத்திலிருந்தும், ஈரான், பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் உள்ளிட்ட "சந்திர வளைவு" என்றழைக்கப்படும் பிரதேசத்திலிருந்தும், இலங்கைக்கு ஹெரோயின் வந்து சேருகிறது.

இப்போதைப்பொருள் வர்த்தகர்கள் சார்க் நாடுகளுக்கான போதைப் பொருள் விநியோக மத்திய நிலையமாக, இலங்கையை அமைத்துக் கொண்டுள்ளதாகப் பொலீஸார் தெரிவிக்கின்றனர். அதேவேளை, பூகோள ரீதியாக இலங்கையின் அமைவு இதற்குப் பெரும் வாய்ப்பாக உள்ளது. இந்நாட்டிற்குள் இரண்டு பிரதான மார்க்கங்களான கடல் மற்றும் வான் பரப்பின் மூலமாகவே ஹெரோயின் கொண்டு வரப்படுகிறது. இதில் கடல் மார்க்கமே முக்கிய இடத்தை வகிக்கிறது. ஹெரோயின் கடத்தல்காரர்கள் இக்கடத்தல்களுக்காக நீர்கொழும்பு முதல் புத்தளம் வரையிலான கரையோரப் பகுதிகளைச் சில காலம் பயன்படுத்தி வந்துள்ளனர். ஆனால், இன்று அனேகமானோர் அப்பாதையைப் பயன்படுத்துவதில்லை. இன்று அவர்கள் தமது புதிய பாதையான வடக்கு - கிழக்கின் கடற்கரைப் பிரதேசத்தின் ஊடாக ஹெரோயினைக் கொண்டு வருகின்றனர் எனப் பொலீஸார் தெரிவிக்கின்றனர். இவ்விரண்டு பிரதேசங்களிலும் தற்போது நிலவும் சமாதானத்திற்கான சுமுகநிலை இவர்களது சட்டவிரோத போதைப்பொருள் கடத்தல்களுக்கு பெரும் வரப்பிரசாதகமாக அமைந்துள்ளது.

ஹெரோயினை இந்நாட்டினுள் கொண்டு வருவதற்குப் பல முறைகள் பின்பற்றப்படுகின்றன. போதைப் பொருள் கடத்தல்காரர்கள் இக்கடத்தல்களை மேற்கொள்வதற்கு அநேகமாக புடவை வகைகள், பாய்கள், பால்மா வகைகள், பிரயாணப் பைகள், மின்சார உபகரணங்கள், விளையாட்டுப் பொருள்கள், உணவு வகைகள் மற்றும் கருத்தடைச் சாதன உறைகள் போன்றவற்றைச் சுலபமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர். போதைப் பொருள்களை உடம்பில் பிணைத்துக் கடத்தி வருதல், மற்றும் ஆணுறைச் சாதன உறைகளுக்குள் ஹெரோயின் தூளை நிரப்பி அவற்றை விழுங்கிக் கொள்வதன் மூலம் கடத்துதல் போன்ற முறைகள் இன்று சுலபமான கடத்தல் முறைகளாகப் பின்பற்றப்பட்டு வருகின்றன. தினமும் நூற்றுக்கு அதிகமானோர் இவ்வாறு போதைப்பொருள்களுடன் இங்கு வந்து சேருகின்றனர். ஆயினும், இவர்களுள் போதைப்பொருள் பரிசோதனை அதிகாரிகளின் கைகளில் சிக்குவோர் எத்தனை பேரோ?

போதைப்பொருள் கடத்தல்களில் ஈடுபட்டுள்ள முக்கியமான கடத்தல் பேர்வழிகளில் சுமார் 30 பேரும், சிறிய அளவில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டுள்ள சுமார் 5 ஆயிரத்துக்குச் சற்று அதிகமானோரும் இன்று நாட்டில் சுதந்திரமாக உலாவி வருவதாகப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் மத்தியிலிருந்து இவை சம்பந்தமாகப் போதிய அளவிலான தகவல்கள் கிடைக்கப் பெறாமையே இவர்களைக் கைதுசெய்ய முக்கியதடையாக உள்ளதெனப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

போதைப்பொருள் கடத்தல்களில் சம்பந்தப்பட்டுள்ள உயர் மட்டக் குழுவினரும் இங்கு இருக்கவே செய்கின்றனர். ஆனால், போதிய ஆதாரங்கள் இல்லாமையால் அவர்களைக் கைதுசெய்ய முடியாதுள்ளது. எச்சந்தர்ப்பத்திலும் அவர்களிடம் போதைப் பொருள்களைக் காணமுடிவதில்லை என்றும் அவர்களின் அடியாள்கள் கைதுகளுக்கு உட்பட்ட சந்தர்ப்பங்


போதைப்பொருள் உற்பத்தியில் முக்கிய பங்காற்றும் பொப்பிச்செடி

களில்கூட இவர்கள் பற்றிய தகவல்களைக் கைதானவர்களிடமிருந்து பெறமுடியாதுள்ளது என்றும் பொலீஸ் செய்திகள் தெரிவிக்கின்றன.

போதைப்பொருள் பற்றிப் பேசப்படும் இத்தருணத்தில் பாதாள உலகைப் பற்றி பிரஸ்தாபிக்காது இருக்க முடியாதுள்ளது. ஏனெனில், பாதாள உலகிற்கும் போதைப்பொருளுக்கும் மிக நெருங்கிய தொடர்புகள் உண்டு. கொழும்பின் போதைப்பொருள் கடத்தல்காரர்களில் பாதாள உலகத் தலைவர்களும் அடங்கியுள்ளனர். அவர்கள் தமது அடியாள்களைக் கொண்டு இப்போதைப் பொருள் கடத்தல்களை மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக ஆயுதபலத்தையும் அவர்கள் பயன்படுத்துகின்றனர். இவர்களால் மேற்கொள்ளப்படும் இச்சட்டவிரோதக் கடத்தல் வியாபாரத்தை முன்னிட்டு சில பாதாள உலகத் தலைவர்களின் பெயர்கள் "தாள் என்னும் அடைமொழியுடன் அழைக்கப்படுகின்றன.

போதைப்பொருள் சம்பந்தப்பட்ட குற்றங்களுக்காக சிறைவைக்கப்பட்டுள்ள அநேகமானோரில் பாதாள உலகத் தலைவர்களும் மற்றும் அதன் உறுப்பினர்களும் அடங்குவர். போதைப்பொருள் கடத்தல் மற்றும் அதற்கான அனுசரணை வழங்குதல் விடயத்தில் பாதுகாப்புப் பிரிவின் உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் மற்றும் அரசியல்வாதிகள் ஆகியோர் அடங்கியுள்ளனர். அண்மையில் இத்தகைய செயற்பாடுகளில் பங்கேற்ற பொலீஸ் மற்றும்


பொப்பிப் பூ.

சிறைச்சாலை உத்தியோகஸ்தர்களைக் கைதுசெய்வதில் பொலீஸார் வெற்றியடைந்துள்ளனர்.

அதேவேளை, போதைப்பொருள் கடத்தல்களுக்கான சுற்றிவளைப்புக்களின்போது அவை தோல்வியடைவதற்குச் சில பொலீஸ் உத்தியோகத்தர்களது கீழ்த்தரமான செயல்களே காரணமாகியுள்ளன. அவர்களால் முன்கூட்டியே கடத்தல்காரர்களுக்கு இத்தகைய சுற்றிவளைப்புகள் பற்றிய தகவல்களைத் தெரிவித்துவிடுகின்றனர்.

ஹெரோயின் பாவனையானது "எய்ட்ஸ் பரவ" வழிவகுக்கின்றது. போதைப்பொருள்களை உடலில் உட்செலுத்தப் பயன்படுத்தும் 'சிரிஞ்ச்' எனப்படும் ஊசிகள் மூலம் எய்ட்ஸ் கிருமிகள் உடலினுள் உட்புகுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகவே உள்ளன.

போதைப்பொருள்கள் சட்டத்திற்கு உட்பட்டவை மற்றும் சட்டத்திற்கு உட்படாதவையென இருவகைப்படும். ஹெரோயின், கஞ்சா மற்றும் கசிப்பு போன்றவை சட்டவிரோதமான போதைப்பொருள்களாகவும் சாராய வகைகள் (குடிவகைகள்) மற்றும் சிகரற் போன்றவை சட்டத்திற்குட்படுத்தப்பட்ட போதைப்பொருள்களாகவும் கணிக்கப்படுகின்றன.

போதைப்பொருள்களுக்கு அடிமையாவதற்குக் காரணம் பொருளாதார, சமூக மற்றும் தனிப்பட்ட நிர்ப்பந்தங்களே எனக் கருதப்படுகிறது. அதேவேளை, குடும்பங்கள் சிதறிப் போதல், குடும்பங்களின் ஒற்றுமை குலைந்து போதல், களவுகள், கொள்ளைச் சம்பவங்கள், சுகாதாரக் குறைபாடுகள் மற்றும் நாட்டில் காரணமின்றி செலவாகும் பணம் போன்ற இக்கட்டான நிலைகள் ஆகியவை காரணங்கள் . என இணங்காணப்பட்டுள்ளன.

சட்டவிரோதப் போதைப்பொருள் விற்பனையைத் தடுப்பதற்கு போதைப்பொருள் ஒழிப்பிற்கான விசேட பொலீஸ் பிரிவினரால் அநேகமான விசேட செயல் திட்டங்கள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. பொலீஸ்மா அதிபரின் ஆலோசனைக்கமைய பல விசேட பொலீஸ் குழுக்கள் இதற்காக நியமிக்கப்பட்டுள்ளன. போதைப்பொருள் கடத்தல் சம்பந்தமான இரகசிய உறவுகள் மற்றும் தகவல்களைச் சேகரிப்பதற்காக விசேட உளவாளிகள் நாடு பூராகவும் அமர்த்தப்பட்டுள்ளனர். *

## இளந்தலைமுறையினதும் குடும்பப்பெண்களினதும் தொலைக்காட்சிப் பொழுதுபோக்கு சமூகப் பிரச்சினைகளுக்கு ஏதுவாகிறது!

### யாழ்., நல்லூர் கோட்டப் பொறுப்பாளர் உரை

வலி.வடக்கு,செப்.9

இளையதலைமுறையினர் தொடக்கம் குடும்பப்பெண்கள் வரையானோர் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னாலேயே தமது நேரத்தைப் போக்குகின்றனர். இந்த நிலைமை எம்மத்தியில் கலாசார சீர்கேடுகள் மற்றும் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தக் காரணமாகிவிடும்.

- இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாணம், நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன்.

யாழ். பிரதேசத்தைச் சேர்ந்த மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் நிர்வாக அங்கத்தவர்களுக்கான 'ஒன்றுகூடும் சங்கமம்' என்னும் நிகழ்வு அண்மையில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

செல்வி ந.சுபத்திரா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்விலேயே ஈஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

பிள்ளைகளுக்கு நிலாக்காட்டி உணவு ஊட்டியகாலம் போய் இன்று தொலைக்காட்சி காட்டி உணவு ஊட்டப்படுகின்றது. ஒரு பிள்ளையின் நல் வளர்ச்சிக்கு தாயே காரணமாகின்றாள். ஆனால், தாய் தொலைக்காட்சி பார்ப்பதில் அடிமைப்பட்டு வீண்பொழுது போக்குவதனால் பிள்ளைகளும் அதே நிலைமைக்குச் செல்லக்கூடிய சந்தர்ப்பங்களே காணப்படுகின்றன. இந்நிலையிலிருந்து எமது குடும்பப் பெண்கள் விடுபடவேண்டும்.

எமது பெண்கள், இன்று தமது மண்ணில் பல்வேறு சாதனைகளையும் நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். கிராம மட்டத்தில் உள்ள பெண்களிடம் எத்தனையோ ஆற்றல்கள் இருக்கின்றன. ஆனால், அவை வெளிக்கொண்டு வரப்படுவதில்லை.

எனவே, அத்தகையவர்களை வெளிக்கொண்டுவரும் பொறுப்பும், கடமையும் கிராம மட்டத்தில் இருக்கும் இத்தகைய பெண்கள் அமைப்புக்களுக்கு உரியதாகும். இதற்கு வேண்டிய வழிகாட்டலைச் செய்து வளர்த்தெடுக்க நாம் ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும்.

கிராமமட்டத்தில் பெண்கள் அமைப்புக்களை கட்டியெழுப்பவேண்டும். தேசிய எழுச்சிப்பேரவை தேசியத் தலைவரின் வழிகாட்டலில் உருவாக்கப்பட்டு மக்களுக்கான சேவையை வழங்குகின்றது. அதேபோன்று மகளிர் அமைப்புப் பேரவையுங்கூட தலைவரின் சிந்தனையில் எழுந்த ஒன்றாகும் - இப்படி ஈஸ்வரன் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்ட மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி மா.பூமகள் உரையாற்றும் போது:-

சமூகச் சீர்கேடுகளைத் தடுப்பதில கிராம மட்டத்திலான பெண்கள் அமைப்புகள் பல்வேறு வழிகளிலும் பங்காற்ற முடியும். பெண்களாகிய நாம், ஓரணியில் நின்று செயற்பட வேண்டும். இன்றும்கூட சில பெண்கள் அடக்கி ஒடுக்கப்பட்டவர்களாக இருந்து வருகின்றனர். இத்தகையவர்களை வெளிச்சத்துக்கு கொண்டு வரவேண்டியது இதுபோன்ற அமைப்புக்களின் கடமையென்பதை உணர வேண்டும்.

சமூகத்தின் எழுச்சிக்கும் விடுதலைக்கும் உழைக்கவேண்டிய பொறுப்பும் கடமையும் எங்கள் ஒவ்வொருவரிடமும் உண்டு எனக் குறிப்பிட்டார்.

பிரதேச மட்டத்திலான அமைப்பின் தலைவியாக இந்திராணி நடராஜாவும், செயலாளராக தம்பி ஐயா கீதாவும் தெரிவு செய்யப்பட்டதுடன், 13பேர் கொண்ட நிர்வாகமும் தெரிவு செய்யப்பட்டது. (எ-9-86)

## ஐ. நாவில் உரையாற்றப்போவது பிரதமரா அல்லது ஜனாதிபதியா?

இம்மாத இறுதியில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத்தில் இலங்கையின் சார்பில் உரையாற்றுவது யார்? ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையே இது தொடர்பான இழுபறி ஏற்பட்டிருக்கின்றது.

ஐ.நா. பொதுச்சபையில் இலங்கையின் சார்பில் பிரதமர் உரையாற்றுவார் என்று ஐ.நா. செயலகத்துக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது.

ஆயினும், பிரதமருக்குப் பதிலாக ஐ.நா. பொதுச்சபையில் தானே உரையாற்றப்போவதாக அறிவிக்கும்படி ஜனாதிபதி சந்திரிகாவும் வெளிவிவகார அமைச்சைப் பணித்திருக்கிறார். இதையடுத்து இலங்கையின் சார்பில் ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றுவது பற்றிய ஐ.நாவின் பதிலுக்கு அவர் காத்திருக்கிறார்.

எய்ட்ஸ் பற்றிய ஐ.நா. விசேட கூட்டத்தொடரில் உரையாற்றுவதற்கான அழைப்பொன்றை ஜனாதிபதி சந்திரிகா இதற்கு முன்னர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

எவ்வாறாயினும், ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்ற பிரதமரின் பெயர் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது என்று ஜனாதிபதி செயலகத்துக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. வெளிவிவகார அமைச்சினால் பிரதமரின் பெயர் தெரிவு செய்யப்பட்டது என்று அமைச்சின் செயலாளர் நிஹால் றொட்றிக்கோ தெரிவித்திருக்கிறார்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



துன்னாலை தெற்கு, கிராமசேவையாளரும் சிறந்த சமூக சேவையாளரும், கடமையில் கண்ணியம் மிக்கவருமான

உயர்திரு க.பரஞ்சோதி

அவர்கள் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதையிட்டு மிக்க மகிழ்ச்சியுடன் இவரின் சேவை மேலும் சிறந்தோங்க வேண்டுமென்று பாராட்டி வாழ்த்துகின்றோம்.

துன்னாலை கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கமும் பொதுமக்களும்.

(22397) (21-12)



# 11ஆம் ஆண்டு நீங்கா நினைவுடன்



அமரர் இராசையா நவரட்ணம்

(ஆசிரியர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரி)

திதி: 09.09.2003

"சந்திரியான் வீதி வலம் வருகையிலே காலனவன் உமைக் கவர்ந்த தேனோ?"

என்றும் உம் நினைவுடன்

மனைவி: ந.இந்திராணி

பிள்ளைகள்: ந.இந்துஷா. ந.நரேந்திரன்.

நி.முகவரி: புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய்.

த.முகவரி: 456, மானிப்பாய் வீதி, வண்ணார்பண்ணை.

(22382) (25-12-14)


# ஓமந்தை பஸ்களில் திருட்டு தொடர்கிறது

வவுனியா, செப்.9

வவுனியாவுக்கும் ஓமந்தைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் பஸ்களில் திருட்டுச் சம்பவங்கள் நாளாந்தம் இடம்பெறுவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தென்பகுதியில் இருந்து ரயிலிலும், பஸ்களிலும் வருகின்ற மக்கள் வவுனியாவில் இருந்து ஓமந்தைக்குச் செல்லும் போது இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

பயணிகளின் தூக்கம் மற்றும் பயணக் களைப்பு போன்றவற்றைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி இந்தத் திருட்டு மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு வந்த ஒரு பெண்ணின் கைப்பையில் இருந்த கைத்தொலைபேசி சாதுரியமாகத் திருடப்பட்டுள்ளதுடன், வேறொரு பெண்ணின் ஒரு தொகைப் பணம் மற்றும் அடையாள அட்டை என்பனவும் திருடப்பட்டுள்ளன.

(எ-10)


## கண்டெடுக்கப்பட்டது

தங்க நகை ஒன்று திருநெல்வேலி சந்தையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தவறவிட்டவா க.கந்தசாமி (காவேரி மில்) இல. 16, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கு எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

(22391) (26-14-12-21)



## காணவில்லை

ஒரு சோடி எருத்து மாடுகள் இதில் சிவலை நிற மாட்டுக்கு S.S. என்ற குறியும், நான்கு கால்களிலும் வெள்ளை நிற அடையாளமும் உண்டு. கறுப்பு நிற மாட்டுக்கு K.A. என்ற குறி உண்டு. அத்துடன் இரண்டு மாட்டிற்கும் கட்டைக் கொம்புகள் காணப்படுகின்றன.

தொடர்பு: V.சிவசுப்பிரமணியம், சந்திரபுரம், மட்டுவில். T.P.070-213127

தகுந்தசன்மானம் வழங்கப்படும்.

(21-14-12) (22393)



## தொலைபேசி பாவனையாளர்களுக்கு!

சர்வதேச இன்ரநெட் அழைப்புக்களை விரைவாகவும் தெளிவாகவும் துல்லியமாகவும் குறைந்த கட்டணத்தில் உங்கள் நிலையங்களில் இருந்தபடியே பெற்றுக்கொள்வதற்கு ஏற்றவாறு இன்ரநெட் இணைப்புக்கள் செய்து தரப்படும்.

தொலைபேசி நிலையங்களுக்கு ஒரு நிமிடத்திற்கு 6 ரூபா மட்டுமே அறவிடப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு:

K.S.M. தொலைத் தொடர்பு நிலையம்,

146, நவீன சந்தை,

யாழ்ப்பாணம்.

T.P.: 021 222 2508, 222 3079

(22369) (21-12-14)



# கண்ணீர் அஞ்சலி

அமரர் செல்லையா யோகேஸ்வரன்

(S.L.P.S.II, 1)

(அதிபர், யா/புத்தூர் மெ.மி.த.க.பா.)

06.09.2003 அன்று அகாலமரணமடைந்த அதிபர் செல்லையா யோகேஸ்வரன் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வடமாகாண அதிபர் சங்கம், யாழ்ப்பாணம்.

(22392) (26-12-14-21)



# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 06 - 05 - 1937



மறைவு 04 - 09 - 2003

செல்லத்துரை இராசலிங்கம்

கடந்த 04.09.2003 வியாழக்கிழமை காலமான எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(குறிப்பு:- அன்னாரது பூதவுடல் நாளை (10.09.03) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு காலை 10 மணியளவில் நாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

சுதுமலை வடக்கு, மானிப்பாய்.

-குடும்பத்தினர்.

(22328)



# சுடர் ஒளி

வார மலர்




விலை ரூ 16/=

தொழிற்சங்கங்கள் திருகுதாளம் தொழிலாளர்கள் திண்டாட்டம் — மலையகம்

முதல் சந்திப்பிலேயே புலிகளுக்கு ரூ.2 கோடி தர முன்வந்த எம்.ஜி.ஆர்.

தெற்கின் ஆட்சிப் பசியை தீர்க்க இனப்பிரச்சினை மீண்டும் கருவியா? — பக்கம் -2

பின்லேடனுக்கு ஏவுகணை கடத்திய லகானி இலங்கை இராணுவத்தின் ஆயுதத் தரகர்!

சர்வதேச உளவுத்துறை பொறி வைத்து பிடித்தது எப்படி — பக்கம் -5 கலர்

அவள் அப்படித்தான் — சிறுகதை

நல்லதொரு நட்பு காதலாக முடியும் என்றால்; ஏன் காதல் மீண்டும் நல்லதொரு நட்பாக முடியாது?

செப்ரெம்பர் பீதியில் அமெரிக்கா — பக்கம் -25 கலர்

அடியார்கள் எண்ணிய எண்ணியாங்கெய்த வரமருளும் கோணேஸ்வர சிவத்தலம் — திருகோணமலை பக்கம் -19

விசேட இரத்தப் பரிசோதனை மூலமே எயிட்சை இனங்காண முடியும். — மருத்துவம் பக்கம் -7

திராவிட ஆட்சிகளை பலிகொள்ளும் 356ஆவது சட்டமும் ஜெயலலிதாவும் — பக்கத்து வீடு

அகாஷியின் முயற்சியில் அரசு காட்டும் நம்பிக்கை

கொழும்பு மாநாட்டில் புலிகள் பங்குபற்றுவரா?

பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நடத்திய போராட்டம்

சந்தைக்கு வந்துவிட்ட உடலுறுப்புகள்

(C/30075)

# வரலாற்றுச் செய்திகள் கூறும் சந்நிதி முருகன் திருக்கோயில்

தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் வருடாந்த தேர்த்திருவிழா இன்று நடைபெறுகின்றது. அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

வரலாற்றுச் சிறப்புப் பெற்ற திருத்தலங்களுள் தொண்டமனாறு செல்வச் சந்நிதி திருத்தலமும் ஒன்றாகும். ஈழத்திருநாட்டில் உள்ள முருக வழிபாட்டுத் தலங்களுள் முதன்மையானதும், தனித்துவம் மிக்கதுமான இந்த ஆலயத்தில் இறை அருள் நிறைந்து விளங்குகின்றது.

இந்து புராண காலத்திலிருந்தே இதன் மகத்துவத்தை நாம் காணக் கூடியதாக உள்ளது. இதனை வரலாறுகள் எடுத்துக் காட்டுகின்றன.

இப்பதியில் உறைந்து அருள் மழை பொழியும் முருகனது திருவிளையாடல்கள் பல, தன்னை நாடி அவலக் குரல் எழுப்பிவரும் அன்பர்களுக்கு கருணை மழை பொழியும் வள்ளல் சந்நிதி முருகன்.



குழந்தைகளுக்கு குழந்தையாகவும், அடியவர்களுக்கு அடியவனாகவும், அன்பர்களுக்கு அன்பனாகவும் இன்னும் பல்வேறு வடிவங்களில் எந்தவித பேதங்களும் இல்லாமல் அருள் பொழிபவன் கந்தக் கடவுள்.

இங்கு உறைந்துள்ள முருகப் பெருமானை ஆற்றங்கரையான், சந்நிதியான், அன்னதானக் கந்தன், கல்லோடைக்கந்தன், காவடிக்கந்தன் என பல்வேறு பெயர்களால் அழைப்பர். தனது சந்நிதிக்கு வந்து மனம் கலங்கி, வாஞ்சையுடன் கண்ணீர் மல்கி நிற்கும் அடியவர்கள் கேட்கும் வரங்களை எல்லாம் அளித்திடும் தூயவன் கந்தப் பெருமான்.

இவ்வாறு அடியவர்களது குறைகளைத் தீர்க்கும் முருகனின் அருட்கடாட்சத்தால் அத்திருத்தலத்தில் நாளாந்தம் கூடும் அடியார்களின் எண்ணிக்கை சொல்லில் அடங்காதவை.

ஆலயக் கருவறையிலே கூரிய வேலாக அமர்ந்திருந்து வடிவேல் முருகன் பல அரிய பெருங்கருணையை வாரி வாரி வழங்குகின்றார். அஞ்ஞானத்தில் வாழும் மனித ஆசைகள் ஒரு புறம், நல்லனவைப் பெற மெய்ஞ்ஞானத்தை நாடும் சித்தர்களும் யோகிகளும் மறுபுறம் கந்தனது கருணைபெற பாடுபாடு படுகின்றனர். இவர்களுக்கெல்லாம் முருகப் பெருமான் அருளாட்சி வழங்கும் நிலை நிச்சயம் உண்டு. தன்னை நாடி வருபவர்களுக்கு அருள் மழை வழங்கும் வள்ளல் முருகன்.

### தலச் சிறப்புடன் வரலாறு

வீரவாகு தேவர் சூரபத்மனிடம் தூது சென்றபோது தனது காலடியைக் கல்லோடை என்ற இடத்தில் தங்கிச் சென்றதாகவும், பின்னர் திரும்பும் வேளை சந்திக்காலம் பூசை செய்ய வேண்டியிருந்ததால் வல்லி ஆற்றங்கரையில் பூவரச மர நிழலில் வேல் ஒன்றை வைத்து சந்திக் காலப் பூசைசெய்து வழிபாட்டினைச் செய்தார் எனவும் -

இதனைத் தொடர்ந்து அவ்விடத்தில் சித்தர்களும், யோகிகளும், முனிவர்களும் தவம்செய்து முத்தியடைந்ததாகவும் கூறப்படுகின்றது.

தேவலோக கந்தர்வனான "ஐராவத", வியாழ பகவானுடைய சாபத்தால் யானையாக கதிர்காமக் காட்டில் மதம்கொண்டு அலைந்து திரிந்தான். அத்தருணம் கதிர்காமக் கந்தனை வேண்டித் தவம்செய்து கொண்டிருந்த சிகண்டி முனிவரை இந்த யானை தாக்க வந்தபோது சிகண்டி முனிவர் தனது கையில் இருந்த வெற்றிலையின் நுனியைக் கிள்ளி கதிர்காமக் கந்தனை நினைத்து யானை மீது வீசினார். அவ்வெற்றிலை நுனி வேலாக மாறி யானையைத் தாக்க அந்த யானை துடிதுடித்து வீழ்ந்து கந்தர்வனாக உருவெடுத்து தனக்கு முத்தி தரவேண்டும் என வேண்டி நிற்க, சிகண்டி முனிவர் நீ வடபால் சென்று வல்லியாற்றங்கரையில் உள்ள கல்லோடைப் பகுதியில் தவம் செய்து முத்தியடைவாயாக என பணித்தார்.

ஐராவகவும் சிகண்டி முனிவர் கூற்றுப்படி வல்லியாற்றங்கரையில் உள்ள கல்லோடப் பகுதியிலிருந்த பூவரமர நிழலில் தவம்செய்து சமாதியானார். இவ்விடத்தில் அமைக்கப்பட்ட கோயில் பல நூறு வருடங்களாகப் புகழ்பெற்ற வணக்கத்தலமாக இருந்து வந்துள்ளது.

### தொண்டமனாறு

செல்வச் சந்நிதியின் தலச்சிறப்புக்கு மேன்மையளிப்பது ஆலய அருகில் பாய்கின்ற தொண்டமனாறு என்னும் நீர்ப்பரப்பான உப்பாறாகும். இந்த உப்பாறு வடக்கே இந்து சமுத்திரத்துடன் சங்கமமாகின்றது. இதனைத் தொண்டைமான் என்ற சிற்றரசன் அமைத்ததாக வரலாறு கூறுகின்றது. இவ்வரசன் கரணவாய், வெள்ளப்பரவைப் பகுதியில் விளைந்த உப்பினை மரக்கலங்களில் ஏற்றிச் செல்ல வசதியாக தொண்டமான் இந்த ஆற்றினை வெட்டுவித்தான் எனக் கூறுவர்.

16 ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயராலும், பின் ஒல்லாந்தராலும் அழிக்கப்பட்ட இந்த ஆலயம் பிற்பட்ட காலத்தில் மருதர் கதிர்காமர் என்ற முருக பக்தரால் மீண்டும் அமைக்கப்பட்டது. முருகப்பெருமான் ஆற்றங்கரையில் ஆடு மேய்க்கும் சிறுவனாகக் காட்சி கொடுத்து "நான் அறுபத்து மூவருடன் இங்குவந்து எழுந்தருள இருக்கின்றேன்.

"எனக்கு இவ்விடத்தில் ஆலயம் அமைத்து 65 ஆலம் இலைகளில் அமுது படைத்து என்னை வழிபட்டு வருபவர்களுக்கு அவ்வமுதை வழங்குவீராக" எனக் கூறினார்.

இதைக் கேட்டு ஆச்சரியமடைந்த கதிர்காமர், 'எனக்கு மந்திரமோ பூசை முறைகளோ தெரியாது. நான் எவ்வாறு தங்களுக்கு பூசை செய்வேன்' என்று கூறினார். அப்போது, அவரைக் கணப்பொழுதில் கதிர்காமம் அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் பூசை முறைகளைக் காட்டி வாய்கட்டிப் பூசை செய்யுமாறு கூறி வேல் ஒன்றையும் வழங்கினார் எனவும் ஆலய புராணம் கூறுகிறது.

முருகப் பெருமானிடம் வேலைப் பெற்ற கதிர்காமர், முருகப்பெருமான் கூறிய இடத்தில் ஆலயம் அமைத்து பூசைசெய்து வந்தார். பூசைகள் முடிந்ததும் திருநீற்றை பக்தர்களுக்கு கொடுக்கும் முறை தெரியாத கதிர்காமருக்கு முருகப்பெருமானே வழி காட்டினார்.

பூசை முடிந்த பின் பூசகர் கதிர்காமரும் முருகப் பெருமானும், ஆலய வாசலில் அமைக்கப்பட்டிருந்த இரு திண்ணைகளிலும் எதிரெதிராகவிருந்து கதைத்ததாக பல கதைகள் கூறுகின்றன. பூசை முறைகள், திருவிழாக்கள் செய்யும் முறைகளையும் முருகப் பெருமான் தெளிவாகக் கதிர்காமருக்கு கூறிவந்தாராம். இந்த திண்ணைகள் இரண்டும் ஆலய நந்திக்குப் பக்கத்தில் இன்றும் இருப்பதைக் காணலாம். முருகப்பெருமானும் கதிர்காமரும் இன்றும் கதைத்துக் கொண்டிருப்பதாக எண்ணி இதற்கு இடப்பாகமாகவே வாசல் அமைக்கப்பட்டிருக்கிறது.

**நா.தங்கவேல்**
**சாவகச்சேரி செய்தியாளர்**

செல்வச் சந்நிதி முருகன் ஆலயம் தல விருட்சமாக பூவரச மரம் அமைந்துள்ளது. இப்பூவரச மர நிழலிலேயே வீரவாகு தேவர் வேல் ஒன்றை வைத்து சந்திக்கால பூசை வழிபாடு செய்தார் எனவும் வரலாறுகள் தெளிவுபடுத்துகின்றன. 'ஐராவத' என்ற முனிவரும் இந்த பூவரச மர நிழலிலேயே தவம்செய்து சமாதியாகினார் எனவும் குறிப்பிடப்படுகிறது.

### ஆலய மஹோற்சவம்

சந்நிதி ஆலய கொடியேற்றம் என்றால், ஆவணி அமாவாசை தினம் அற்றுப் போகும் நாளில் ஆலய உள் வீதிப் பூவரச மரத்தடியில் "வள்ளிக் கொடி" முளைப்பதுடன் ஆரம்பமாகின்றது. இவ்விழா 15 தினங்கள் நடைபெறும். இவ்வாறாக முளைத்த வள்ளிக் கொடியை ஆலய தல விருட்சமான பூவரச மரத்திற்கு அருகில் தற்பொழுதும் காணக்கூடியதாக உள்ளது. இது ஆலய தனிச்சிறப்பை உணர்த்துகிறது.

திருவிழாக்காலங்களில் முருகப் பெருமான் வேல் உருவிலேயே வீதி வலம் வருகின்றார். இவ்வேலில் சிகண்டி முனிவர் தன்னைத் தாக்க வந்த யானைக்கு வெற்றிலையை கிள்ளி வீசியபோது அது வேலாக மாறி யானையைத் துரத்தியதை எடுத்துக் காட்டும் முகமாக வெற்றிலையின் நுனி பதிக்கப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

இவ்வாறான தலச்சிறப்பு, தெய்வீகம் பொருந்திய சந்நிதி முருகனின் சிறப்பு சொல்லில் அடங்காதது.

தற்பொழுது மஹோற்சவத்தை முன்னிட்டு ஆலயச்சூழலில் காவடிகள், கர்ப்பூரச்சட்டிகள், அங்கப்பிரதட்டை, அன்னதானங்கள் என பலவாறான நேர்த்திகள் சொல்லில் அடங்காதன. எனவே, நாளும் அவனது பாதம் பணிந்து முருகனது தேர் வடம் பிடித்து இழுத்து எமது பிறவித் துன்பங்களை அகற்றி நற்பயன் பெறுவோம்! ✣

## தீர்வொன்று தாருமையா!

காமையில் ஏறிவரும் கந்தா - உந்தனது
காலடியே சரண்புகுந்தோம் காத்தருள்வாய் எங்களையே!
தேவர்குல தீதறுத்த மூவர்குல நாயகனே!
தேந்தமிழர் படுந்துயரம் தீர்த்துவைக்க வேண்டுமையா!

தித்திக்கும் இசைத்தமிழால் பாக்கொண்ட பாவலனே!
திக்கெட்டும் தமிழர் நிலை உயர வழி செய்யுமையா!
திரிபுரங்கள் எரிசெய்த சிவபெருமான் தவமகனே!
தீர்வொன்று தந்தெம்மை காத்தருள வேண்டுமையா!

ஆண்டிரண்டு கழிந்ததையா அமைதியான வழியினிலே - அது
ஆயிரமாய் நிலைக்க வேண்டும் அழகிய தீவினிலே
ஓங்கும் இறை நினைவென்றும் எம் உள்ளத்திலே
ஒலித்திட வேண்டுமையா உமையவள் பாலகனே.

- உடுவில் மானா.

**இராவணாஎல்ல பாரிய பஸ் விபத்து:**

## மீட்புப்பணிக்கு விரைந்த இராணுவ பஸ் வழியில் தீப்பிடித்துக்கொண்டது!

இராவணாஎல்ல பாரிய பஸ் விபத்தையடுத்து மீட்புப் பணிகளில் ஈடுபட விரைந்த தியத்தலாவை இராணுவத்தினரின் பஸ் எதிர்பாராதவிதமாக தீப்பிடித்துக் கொண்டது. இராணுவத்தினரின் துரித நடவடிக்கையால் தீ முற்றிலும் பரவாது அணைக்கப்பட்டது. தியத்தலாவை இராணுவத்தினர் விசேட ஹெலிமூலம் விபத்து நடந்த இடத்திற்கு உடனடியாக விரைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். இப்பணிகளுக்கு உதவுவதற்காக மேலும் ஒரு தொகுதி இராணுவத்தினர் பஸ் மூலம் அனுப்பப்பட்டனர். அந்த பஸ் 'எல்ல' என்ற இடத்தை அடைந்தபோது தீப்பற்றிக் கொண்டது.

பஸ்ஸில் வந்த 35 இராணுவத்தினரும் பாய்ந்து இறங்கி உடனடியாகத் தீயை அணைத்தனர். இயந்திரக் கோளாறே தீப்பிடிப்பதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

**படையினர் அகற்ற உத்தரவிட்ட**

## பன்னாலை வீடு விவகாரம்; விரிவான விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.9

தெல்லிப்பழை, பன்னாலைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட வீடு ஒன்று உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அடங்கியுள்ளதாகக் கூறி, அதனை அகற்றுமாறு இராணுவத்தினர் சம்பந்தப்பட்ட வீட்டின் உரிமையாளரை வற்புறுத்திய சம்பவம் தொடர்பான விசாரணைகளை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் மேற்கொண்டுள்ளது.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின்னர் தெல்லிப்பழை, பன்னாலைப் பகுதியில் பொதுமக்கள் மீளக்குடியமர்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் மக்களை மீளக் குடியமர அனுமதிப்பதாக படைத்தரப்பு முன்னர் அறிவித்திருந்ததாகக் கூறப்பட்டது.

இதன்படி, அப்பகுதியில் மீளக் குடியமரவெனப் பொதுமகன் ஒருவர் புதிதாக வீடொன்றை அண்மையில் கட்டியிருந்தார்.

ஆனால், தற்போது இந்த வீடு உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் அடங்காத போதும், அதனை உயர் பாதுகாப்பு வலயப் பகுதியெனத் தெரிவித்து அவ்வீட்டை அகற்றுமாறு இராணுவத்தினர் தம்மை வற்புறுத்தி வருவதாக வீட்டின் உரிமையாளர் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடொன்றைச் செய்திருந்தார்.

இதனை அடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் சம்பந்தப்பட்ட இடத்தை நேரில் சென்று பார்வையிட்டதுடன், இது தொடர்பான விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர். (எ-8)

## பாக். வெளிவிவகார அமைச்சர் சனியன்று கொழும்பு வருகிறார்

பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் குர்ஷிக் எம்.கசூரி மூன்றுநாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 13 ஆம் திகதி இலங்கை வருகிறார்.

எதிர்வரும் ஜனவரி மாதம் பாகிஸ்தானில் இடம்பெறவிருக்கும் மாநாடு ஒன்றிற்கான அழைப்பை இலங்கைத் தலைவர்களுக்கு நேரடியாக விடுக்கவே அவர் இங்கு வருகின்றார் எனக் கூறப்பட்டது. ஜனாதிபதி பிரதமர் ஆகியோரை அவர் சந்தித்துக் கலந்துரையாடுவார். (எ-3)

## முழுநிலா நாள் கருத்தரங்கு

கொழும்புத்துறை,செப்.9

அகவொளி நிலையத்தால் நடத்தப்படும் முழுநிலா நாள் கருத்தரங்கு நாளை புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு அகவொளி மண்டபத்தில் நடைபெறும்.

'சிறுவர் துஷ்பிரயோகமும் பாதிக்கப்பட்ட சிறுவர்களைக் கையாளுதலும்' என்னும் தலைப்பில் மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு இணைத் தலைவர் வைத்திய கலாநிதி ஆர். சுரேந்திரகுமார் கருத்துரை வழங்குவார். (எ-30)

## நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பும்

யாழ்ப்பாணம்,செப்.9

புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி நிறுவுநர் தினமும், பரிசளிப்பு விழாவும் நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் வ.ஆறுமுகம் தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கல்விக் கோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரமும் கலந்துகொள்ளவுள்ளனர்.

நிறுவுநர் நினைவுப் பேருரையை கல்லூரியின் பழைய மாணவனும், கோப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தருமான க.சிதம்பரப்பிள்ளை நிகழ்த்துவார். 'சோமாஸ்கந்தன்' மலருக்கான மதிப்புரையை கவிஞர் கலாநிதி இ.முருகையனும் அருளாசியுரையை சிவஸ்ரீ சாமி.சோமசுந்தரக்குருக்களும் நிகழ்த்துவர்.(எ-10)

## கத்திவெட்டுக்கு இலக்காகி ஒருவர் படுகாயம்!

யாழ்ப்பாணம்,செப்.9

கடந்த 6 மாதங்களுக்கு முன் ஏற்பட்ட சச்சரவுகளைத் தொடர்ந்து இடம்பெற்று வந்த பகைமை கத்தி வெட்டில் முடிந்தது.

கத்திவெட்டுக்கிலக்காகி ஒருவர் இரண்டு கைகளிலும் முகத்திலும் காயமடைந்தார்.

நாவாந்துறையில் கடந்த சனியன்று இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அம்பலவாணர் நாகராசா (வயது 41) என்பவரே படுகாயமடைந்தவராவார். படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-15)

## ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்

வட்டுக்கோட்டை,செப்.9

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் தர்மராஜா தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-161)

## கூரை மரம் கழற்றியவர் வசமாகச் சிக்கினார்

கொழும்புத்துறை,செப்.9

கொழும்புத்துறை துறையப்பா வித்தியாலயத்தின் சேதமடைந்த கட்டடப் பகுதியில் இருந்த கூரை மரங்களைத் திருடிய ஒருவர் நேற்றுமுன் தினம் இரவு பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் கூரை மரங்கள் கழற்றப்படும் சத்தம் கேட்டு அப்பகுதிக்கு விரைந்த பொதுமக்கள் கூரை மரங்களைக் கழற்றுவதில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படும் ஒருவரைக் கையும் மெய்யுமாக பிடித்து பொலீஸில் ஒப்படைத்துள்ளனர். கூரை மரம் கழற்றுவதில் ஈடுபட்டிருந்ததாகக் கூறப்படும் மேலும் இருவர் தப்பி ஓடி விட்டதாகக் கூறப்பட்டது. யுத்தத்தினால் சேதமடைந்த இப்பாடசாலையின் ஒரு பகுதி தற்போது புனரமைக்கப்பட்டு வருவது தெரிந்ததே. (எ-30)

# கமநலசேவை நிலையம் நிறுவ மாகியப்பிட்டியில் காணி கிடைத்தது

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவுக்கென தனியானதொரு கமநலச் சேவை கேந்திர நிலையம் நிறுவுவதற்கு மாகியபபிட்டி இரட்டையபுலம் ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை, சபைக்குச் சொந்தமான நான்கு பரப்புக் காணியை நன்கொடையாக வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

வலி.தென்மேற்கு பிரிவிலுள்ள விவசாயிகள் சம்மேளனங்கள், உடுவில் கமநல கேந்திர நிலையம், தொல்புரம் கமநல கேந்திர நிலையம், கீரிமலை கமநல கேந்திர நிலையம் ஆகிய மூன்று நிலையங்களிலும் இணைக்கப்பட்டுள்ளன என்றும் -

இதனால் ஏற்படும் சிரமங்களை நீக்குவதற்கு வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவுக்கென தனியாக கமநல கேந்திர நிலையம் ஒன்று உருவாக்கப்படவேண்டும் என்றும் - கடந்த பல வருடங்களாக கோரிக்கை விடுக்கப்பட்டு வந்தது தெரிந்ததே. இதற்கிடையில், மேற்படி நிலையம் நிறுவுவதற்கு தேவைப்படும் காணியை யாராவது வழங்கும் பட்சத்தில் அதில் கமநல கேந்திர நிலையம் நிறுவுவதற்கு நிதி ஒதுக்கப்படும் என்று பிரதேச செயலரால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

காணி பெறுவதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளுக்கென பண்டத்தரிப்பு விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் ச.செல்வரத்தினம் தலைமையில் நடவடிக்கைக் குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

தற்போது மேற்படி ஆலய பரிபாலன சபை காணியொன்றை அன்பளிப்பு செய்ய முன்வந்ததை அடுத்து அதில் கமநல கேந்திர நிலையம் நிறுவக் கூடிய வசதி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-135)

# அரச விடுமுறை தினங்களை குறைப்பது பற்றி பரிசீலனை

அரசாங்க விடுமுறை தினங்களை கணிசமான அளவு குறைப்பது பற்றி அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது. சர்வதேச மட்டத்தில் ஆகக்கூடுதலான விடுமுறை தினங்களைக் கொண்ட நாடுகளில் இலங்கை முதலாவது இடத்தில் இருப்பதாக சர்வதேச சுதந்திர தொழிலாளர் சங்க சம்மேளனம் மேற்கொண்ட ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

சர்வதேச முதலீட்டாளர்கள் இங்கு பாரிய தொழில்முயற்சிகளை மேற்கொள்ளவிருப்பதால் அரச விடுமுறை தினங்களை குறைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாக தொழில், தொழில் வாய்ப்புகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க கூறினார்.

தற்பொழுது அங்கீகரிக்கப்பட்ட வாராந்த விடுமுறை தினங்கள் 104, போயா விடுமுறை தினங்கள் 12இற்கும் மேலாக அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த விடுமுறைகள், சுகவீன விடுமுறைகள் உட்பட 42 நாள்கள் மற்றும் பண்டிகை தினங்கள், சுதந்திர தினம், மேதினம், வெசாக், சித்திரைப் புத்தாண்டு என 12 நாள்கள் என மொத்தமாக 170 நாள்களுக்கு மேல் விடுமுறைகள் இருக்கின்றன. இதைத் தவிர திடீர் சுகவனம் 'சோட்லீவ்' எனவும் விடுமுறையில் செல்கின்றனர். இதன்படி 365 நாள்கள் கொண்ட ஒரு வருடத்தில் 195 நாள்கள் மட்டுமே கடமையாற்றுகின்றனர்.

இதிலும் திடீர் வேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டம், சட்டப்படி வேலை என பல வேலை நாள்கள் வீணடிக்கப்படுகின்றன.

இதனால், தொழில்துறையில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதோடு பொதுமக்களின் கருமங்களும இழுத்தடிக்கப்பட்டு தாமதமடைகின்றன.

எனவே, தொழிற்சங்கங்கள், சமூக சேவை அமைப்புக்கள், தொழில் வழங்குநர்கள், முதலீட்டாளர்கள் என பல மட்டத்தினருடனும் பேச்சுக்களை நடத்தி அனைத்துத் தரப்பினரதும் ஒப்புதலுடன் அரச விடுமுறை தினங்களை குறைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் மஹிந்த சமரசிங்க மேலும் தெரிவித்தார்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில்
16 - 06 - 1923



இறைவன் அடியில்
08 - 08 - 2003

### அமரர் தம்பையா இராசேந்திரம்

(ஓய்வுபெற்ற அதிபர், நல்லூர் சி.சி.கலவன் பாடசாலை - முன்னாள் காரியதரிசி, வட இலங்கைத் தமிழாசிரிய சங்கம்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வதிவிடமாகவும் கொண்டு 08.08.2003 அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்த இவர் மாணிக்கரத்தினத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, கொழும்புத்துறை இ.ம. வித்தியாலயம்) அன்புக் கணவரும் ரவீந்திரன் (வான்கூவர்), யமுனா (கொழும்பு), நரேந்திரன் (பஹ்ரெயின்), சிவகுமார், மகேந்திரன் (ஆஸ்திரேலியா), கங்கா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மஹாலக்ஷ்மி (வான்கூவர்), பிஞ்ஞகன் செம்மல் (கொழும்பு), குமாரிசந்திரா (பஹ்ரெயின்), இராஜமாலினி, அனுஷியா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜினேஷ்குமார் (பஹ்ரெயின்), பிரமளா, மிதுலா (ஆஸ்திரேலியா), வித்தியா, சேயோன் (கனடா) ஆகியோரின் அருமைத் தாத்தாவும் ஆவார்.

இவரது இறுதிக்கிரியைகள் 14.08.2003இல் நடைபெற்றன என்பதையும் 24.08.2003இல் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெற்றன என்பதையும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம். அத்துடன், எமது பிரிவுத்துயரில் கலந்து அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் மற்றும் பல வழிகளிலும் எமக்கு உதவிகள் செய்து அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்த எல்லோருக்கும் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*120, 7ஆம் குறுக்குத் தெரு,*
*பொருப்பணை வீதி,*
*இரத்மலானை*
T.P.No: 2605459 (C/30078) (26-16-18)

*பிரிவால் வருந்தும்:*
**அன்பு மனைவி,**
**மகன், மகள்,**
**மருமக்கள்.**

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு,செப்.9

யாழ்மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கலாஜோதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் சுன்னாகம் கலைவாணி விளையாட்டுக் கழகமும், மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (எ-5-86)

★ ★ ★

வலி.வடக்கு,செப்.9

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை அணிகளுக்கிடையே நடைபெற்று வரும் உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2மணிக்கு கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் இறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:-

**15 வயதுப் பிரிவு**

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.

**16 வயதுப் பிரிவு**

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம் எதிர் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்.

**18 வயதுப் பிரிவு**

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் எதிர் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி.(எ-5-86)

## சமய சந்நிதிகளில்

அரியாலை, நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நடைபெற்று வருகிறது.

இன்று காலை 9 மணிக்கு தேர் திருவிழாவும் நாளை காலை 8.30 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (எ-10-30)

★ ★ ★

தமபசிட்டி மாயக்கை சித்தி விநாயகர் கோவில் வருடாந்த மஹோற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. இன்று ரதோற்சவமும், நாளை தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (எ-10-173)

★ ★ ★

சாவகச்சேரி வடக்கு, பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய புனருத்தாரண மஹாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது. எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இன்று காலை 8 மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

ஆலய மஹாகும்பாபிஷேக நிகழ்வுகள் சிவத்திரு சோம.சந்திரசிகாமணிக்குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-10-31)

★ ★ ★

பிரான்பற்று முருகமூர்த்தி ஆலய ரதோற்சவம் இன்று முற்பகல் நடைபெறவுள்ளது. தீர்த்த உற்சவம் நாளை முற்பகல் நடைபெறவுள்ளது. (எ-10-135).

★ ★ ★

ஈவினை மத்தி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மஹோற்சவம் கடந்த 31ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

இன்று காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் நாளை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (எ-10-69)

★ ★ ★

கொக்குவில் கிழக்கு, பொற்பதி ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய மஹோற்சவம் கடந்த 27ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இன்று காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை காலை 8.30 மணியளவில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (எ-10-69)

★ ★ ★

வடலியடைப்பு - புதறானை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய ரதோற்சவம் இன்று முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது. தீர்த்த உற்சவம் நாளை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும். (எ-10-135)

★ ★ ★

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயில் ரதோற்சவம் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும். தீர்த்தோற்சவம் நாளை காலை 9 மணிக்கு நடைபெறும். (எ-10-100)

★ ★ ★

ஆனைக்கோட்டை ஸ்ரீ வரதவிக்ன விநாயகர் ஆலய ரதோற்சவம் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும்.

தீர்த்தோற்சவம் நாளை காலை 10.30மணிக்கு இடம்பெறும்.(எ-10-100)

## வடக்கு-கிழக்கு அரச பாடசாலைகளில்

# அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பணிப்பு

ஏறாவூர்,செப்.9

வடக்கு - கிழக்கு மாகாண அரச பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் ஏற்படும்போது பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரி நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் புதிய அதிபர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

மாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் எம்.கே.எம்.ஹனிபா சகல வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

அதிபர் நியமனங்களை வழங்கும்போது மாகாணக் கல்விப்பணிப்பாளரின் ஊடாக கல்வியமைச்சு செயலாளரின் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

பாடசாலைகளில் அதிபர் வெற்றிடங்கள் ஏற்படும் போது வலயக் கல்விப்பணிப்பாளர்கள் உரிய நடைமுறைகளைப் பின்பற்றாது புதிய அதிபர்களை நியமனம் செய்வதால் தகுதியானவர்கள் பாதிக்கப்படுவதாக மாகாணக் கல்வியமைச்சிற்கு பலவேறு முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதனால், உயர் அதிகாரிகள் நீதிமன்றம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு என்பனவற்றில் பல்வேறு வழக்குகளை எதிர் நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலைமைகளைக் கருத்திற்கொண்டு நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் பொருத்தமான அதிபர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேர்முகப்பரீட்சையின் போது அதிபர் சேவை தரம், கல்வித் தகைமை, தொழில் தகைமை, ஏற்கனவே அதிபராக சேவையாற்றிய காலம், கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் சேவையாற்றிய காலம், பொதுப்பரீட்சைகளில் மாணவர்கள் பெற்ற பெறுபேறுகள் என்பவற்றுக்கு புள்ளிகளை வழங்கி கூடுதல் புள்ளிகளைப் பெறுவோருக்கு புதிய அதிபர் நியமனங்களை வழங்குமாறும் சிரேஷ்ட உதவிச் செயலாளர் வலயக் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளார்.

நேர்முகப் பரீட்சையின் போது அதிபர் சேவை தரம் ஒன்றுக்கு 15 புள்ளிகளும், தரம் இரண்டிற்கு 10 புள்ளிகளும், தரம் மூன்றிற்கு 05 புள்ளிகளும் வழங்கப்படவுள்ளன.

கல்வித்தகைமைகளில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்திற்கு 05 புள்ளிகளும் உயர்தரத்திற்கு 08 புள்ளிகளும் பட்டப் படிப்புக்கு 12 புள்ளிகளும், கல்வி முதுமாணி பட்டத்துக்கு 15 புள்ளிகளும் வழங்கப்படவுள்ளன.

தொழில் தகைமைகளைக் கருத்திற்கொள்ளும்போது ஆசிரியர் பயிற்சிக்கு 10 புள்ளிகளும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவிற்கு 12புள்ளிகளும், பட்டப்பின் முகாமைத்துவ பயிற்சிக்கு 15 புள்ளிகளும் வழங்கப்படவுள்ளன. (ஐ-157)

## அமரபுர நிக்காய மகாநாயக்கர் காலமானார்

இலங்கை அமரபுர மகா நாயக்கரான வண. மடிகே பஞ்ஞாசீஹதேரர் (வயது 91) நேற்றுக்காலை இயற்கை எய்தினார். கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த அவருக்கு நேற்று மரணம் சம்பவித்தது.

கடந்த ஜூலை மாதம் நோய்வாய்ப்பட்டு தனியார் வைத்திய சாலை ஒன்றில் சேர்க்கப்பட்டு அவர் சிகிச்சை பெற்று வந்தார். பின்னர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

1913ஆம் ஆண்டு மாத்தறை மடிகேயில் பிறந்த அன்னார் தனது 13ஆவது வயதில் துறவறம் பூண்டார். 1926ஆம் ஆண்டு பிக்குவானார். பல பட்டங்களைப் பெற்ற அவர், வெளிநாடுகளிலும் பௌத்த போதனைகளை மேற்கொண்டிருந்தார்.

மகாநாயக்கரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துப் பிரதமர் செய்தி ஒன்றை விடுத்துள்ளார்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
14-07-1931



விண்ணில்
21-08-2002

### திருமதி சக்திவேல் மரகதாம்பிகை

திதி: 09.09.2003

ஆண்டு ஒன்றாகி விட்டும்
ஆறவில்லை எம் துயரம்.
நீண்ட தூரம் நீங்கள்
சென்று விட்டாலும்,
எம் மனதில் உங்கள் நினைவுகள்
மாறவில்லை இன்னும்.

பிரிவால் வருந்தும்:
**கணவர், மக்கள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*78/5, கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (22402) (16-18)

## மரண அறிவித்தல்

### பொன்னையா கதிரவேலு

சாவகச்சேரி, மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் நுணாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா கதிரவேலு நேற்று (8.9.2003) திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா தம்பதிகளின் அன்புப் புதல்வரும் திருமதி வள்ளிநாயகியின் அன்புக் கணவரும் ஹரிகரன், தயாபரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சுவாமிநாதர், காலஞ்சென்ற திருமதி சரஸ்வதி சங்கரப்பிள்ளை, திருமதி வாலாம்பிகை கனகசபை, திருமதி கமலாதேவி நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(9.9.2003) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு கல்ஹிசை மஹிந்த மலர்ச்சாலையிலிருந்து கல்ஹிசை பொது மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*3A, Kelankaduwa Place,*
*Off 1st Chappel lane,*
*Colombo-06.*
*T.P :01-2597854/077-6003605* (C/30081) (26-16-18)

தகவல்:
பொ.க.ஹரிகரன்
(மகன்)

# குடாநாட்டு மக்களின் அன்றாட உணவில்

**எந்த மரக்கறிப் பயிர்களையும் சொந்த மண்ணில் பயிரிடவேண்டும். அதிலிருந்து பயன்பெற வேண்டும் என்ற தீராத ஆர்வம் கொண்டவர்கள் தான் குடாநாட்டு விவசாயிகள்.**

**அதில் கணிசமான அளவுக்கு வெற்றிகண்டுள்ளனர் என்று சொன்னால் அது மிகையல்ல. அந்தத் தீராத ஆர்வத்தினால்தான் மலைநாட்டில் மட்டும் செய்கை பண்ணப்பட்டு வந்த கரட், மிளகு, கோவா போன்ற பயிர்களும் தென்பகுதியில் மட்டும் செய்கை பண்ணப்பட்டு வந்த கறிமிளகாய் போன்ற பயிர்களும் இன்று குடாநாட்டில் சாதாரணமாகச் செய்கை பண்ணப்பட்டு வருகின்றன.**

**குடாநாட்டுச் சந்தைகளில் தினமும் காணப்படுகின்ற கறிமிளகாய் இன்று எமது அன்றாட உணவின் ஓர் அங்கமாகிவிட்டது. இதன் செய்கை பற்றியும் அது தொடர்பான விவரங்கள் பற்றியும் இன்றைய 'கமமும் புலமும்' பகுதியில் பார்ப்போம்.**

கடந்த 80ஆம் ஆண்டின் ஆரம்ப காலங்களில் குடாநாட்டுச் சந்தைகளில் அருமையாகக் காணப்பட்ட கறிமிளகாய் 95 ஆம் ஆண்டில் குடாநாட்டிலுள்ள ஒரு சில விவசாயிகளால் இங்கு பரீட்சார்த்தமாகச் செய்கை பண்ணப்பட்டது. ஆயினும், வலிகாமம் இடப்பெயர்வினை அடுத்து சில மாதங்கள் அனைத்துப் பயிர்ச் செய்கைகளும் தடைப்பட்டன. மீண்டும் மக்கள் தமது இடங்களில் மீளக் குடியமர்ந்தவுடன் செய்கையில் ஈடுபடத் தொடங்கினர்.

**சந்திப்பு: ஜெயஸ்ரீ**

ஆயினும், 2000 ஆம் ஆண்டில் இருந்துதான் இந்தக் கறிமிளகாய்ச் செய்கையில் அதிக விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருவதாகக் கூறுகிறார் கோப்பாய் வடக்கைச்



சேர்ந்த செ. நகுலேஸ்வரன் என்ற விவசாயி. இவரது தோட்டத்துக்கு தாம் அண்மையில் சென்றபோது எம்மை அன்புடன் வரவேற்றது நகுலேஸ்வரன் மட்டுமல்ல அவரது கறிமிளகாய்ச் செடிகளும்தான். அந்தச் செடிகளில் காணப்பட்ட மிளகாய்களே குடாநாட்டு விவசாயிகளின் திறமைக்குச் சான்று பகர்ந்தன.

அவரிடம் நாம் கறிமிளகாய்ச் செய்கை பற்றிக் கேட்டபொழுது விவரமாக எமக்கு எடுத்துக் கூறினார். பி.எஸ். ரகத்தைச் சேர்ந்த கறிமிளகாய் இனமே மிகவும் தரம் வாய்ந்ததாகும். அதுவே இங்குள்ள கால நிலைக்கு ஏற்றதும் அதிக பயனைத் தரக்கூடியதுமாகும். இதனைத்தான்



இங்குள்ள விவசாயிகள் செய்கை பண்ணி வருகிறார்கள். இந்த ரக விதைகள் ஜப்பானில் இருந்து ரின்களில் இங்கு வருகின்றன. இதனை நாற்றுமேடையில் போட்டு 20-25 நாள்களின் பின்பு கன்றுகளைப் பிடுங்கி அரை அடி இடைவெளியில் நட வேண்டும். ஒரு நிலையத்தில் ஒரு கன்றை மட்டுமே நடவேண்டும்.

நட்டதும் தொடர்ந்து 3 நாள்கள் நீர் பாய்ச்சவேண்டும். பின்னர் ஒன்று விட்ட ஒரு நாளும் அதன் பின்னர் நான்கு நாள்களுக்கு ஒரு தடவையும் நீரைப் பாய்ச்சலாம். அத்துடன், நோய்த் தாக்கங்கள் ஏற்படாவண்ணம் நன்கு பராமரிக்க வேண்டும். குறிப்பாக மே மாதத்தில் நடுகை பண்ணினால் நவம்பர் மாதம் வரையான 7 மாத காலத்துக்குப் பயன் பெறலாம் 5 மாதங்கள் நம்பிக்கையான வருமானத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். மே மாதத்தில் செய்கை பண்ணுதலே மிகவும் நன்று. பனி மற்றும் மழை காலங்களில் இலைகள் உதிரும் நிலை ஏற்படும் என்பதால் மே மாதத்தில்தான் நாம் இதனைச் செய்கை பண்ணுகிறோம்.

குறிப்பிட்ட காலத்தில் செய்கை பண்ணி நல்ல பராமரிப்பினை மேற்கொண்டு வந்தால் நட்டு 45 ஆவது நாளில் மிளகாய்களைப் பிடுங்கலாம். உதாரணமாக ஆயிரம் கன்றுகள் நட்டால் அதாவது நாலு பரப்பில் செய்கை பண்ணினால் 45 ஆவது நாளில் 50 கிலோ மிளகாயைப் பிடுங்கலாம். நான் அவ்வாறு பிடுங்கியிருக்கிறேன் என்றார் நகுலேஸ்வரன்.

அடிக்கட்டுப் பசளையை இட்ட பின்பு கன்றுகளை நட்டுப் பின்னர் 15 ஆவது நாளின் பின்பு அரை அந்தர் யூரியாவை இடவேண்டும். அத்துடன் கன்றுகள் நோய்த்தாக்கம் உள்ளதா என்பதையும் அவதானிக்க வேண்டும். அவ்வாறு நோய்த்தாக்கம் இல்லாதபோதும் முன்காப்பு நடவடிக்கையில் ஈடுபடவேண்டும். சாதாரண மிளகாய்ச் செடியில் ஏற்படுவதுபோனறு

# கலந்துவிட்ட கறிமிளகாய்

இச்செடியிலும் குருமன் நோய் ஏற்படலாம். இதனைக் கட்டுப்படுத்த றொக்கத்தியோன் மருந்து தெளிக்க வேண்டும். அட்மயர் மருந்தும் பாவிக்கலாம். இவற்றை நான்கு நாள்களுக்கு ஒருதடவை தெளிக்கவேண்டும். மழைகாலத்தில் டயத்தியோன்




பவுடரைப் பயன்படுத்தலாம். எவ்வளவுக்கு நாம் பராமரிப்பினை மேற்கொள்கிறோமோ அவ்வளவுக்குப் பலன் பெறுவதும் அதிகமாகும். ஆயினும், கன்றுகளில் இருந்து தினமும் சராசரியாக 70 - 100 கிலோ வரையில் பிடுங்கலாம் - என்றார் நகுலேஸ்வரன்.

அவர் கூறியதை ஒத்துக்கொள்வது போன்று அங்கிருந்த கறிமிளகாய்ச் செடிகளும் தலையசைத்துக் காட்டின. சராசரி நாலரை அடி உயரம்வரை வளரக் கூடிய இச்செடிகளின் இலைகள் சாதாரண மிளகாய் இலைகளை ஒத்ததாக இருந்த போதும் பூக்கள் சற்றுப் பெரிதாகக் காணப்பட்டன. ஆனால் காய்கள் மட்டும் மேல் நோக்கி இருந்தன.

இவற்றின் பராமரிப்புச் செலவுக்கு சுமார் எவ்வளவு பணம் தேவைப்படும் என்று நகுலேஸ்வரனிடம் கேட்டோம். நாலு பரப்பில் செய்கைபண்ணுவதற்கு சுமார் ஒரு லட்சம் ரூபா தேவைப்படும் என்று சொன்னார். ஆனால் மருந்துப் பாவனை, உரப்பாவனை என்பன குறைவாக இருந்தால் செலவாகும் பணத்தின் அளவும் குறையும் என்றார். அத்துடன் நின்றுவிடாது அருகில் கிடந்த வெற்று மருந்துப் போத்தல்களையும் எமக்குக் காட்டினார். அவை குவிந்து கிடந்தன. அந்த வெற்றுப் போத்தல்களில் பொறிக்கப்பட்டிருந்த விலைகளைப் பார்த்தபோது இவ்வளவு சிறிய போத்தல் மருந்துகளின் விலை இவ்வளவு அதிகமா? என்று வியந்துபோனோம்.

இவ்வளவு பணத்தைச் செலவழிக்கும் உங்களுக்கு இவற்றில் இருந்து இலாபம் ஈட்ட முடியுமா என்று அவரிடம் கேட்டபொழுது நான் ஒரு முழுநேர விவசாயி. இதுதான் எனது தொழில். அவ்வாறு இருக்கும் பொழுது வேண்டா வெறுப்பாக அரை மனதுடன் எவ்வாறு விவசாயத்தில் ஈடுபடமுடியும் என்று எம்மிடம் திரும்பக் கேட்டார் அவர். கேட்டதுடன் நின்றுவிடாது எமது கேள்விக்கான பதிலையும் தந்தார் நகுலேஸ்வரன்.



தினமும் 70 - 100 கிலோ மிளகாய் பிடுங்கமுடியும் என்றால் கிட்டத்தட்ட 7 மாத காலத்துக்குள் அந்தப் பணத்தைச் சம்பாதிக்க முடிவதுடன் இலாபமீட்டவும் முடியும் என்றார். ஒரு கிலோ மிளகாய் 80 ரூபா



வுக்கு விற்பனை செய்த காலமும் உண்டு. இவ்வாறு தினமும் விற்பனை செய்தால் அதிக பணம் சம்பாதிக்கலாம். ஆனால், தற்பொழுது 28 ரூபாவுக்குத் தான் விற்பனை செய்யக் கூடியதாகவுள்ளது - என்றார்.

கறி மிளகாய்ப் பழங்களையும் காயவைத்துப் பயன்படுத்த முடியுமா? என்று கேட்டதற்கு அப்படிப் பழமாகும் வரைக்கும் செடியில் விட்டால் செடிக்குத்தான் பாதிப்பு என்றார். பழங்கள் அதிக நிறையுடையதாக இருப்பதால் அவை கிளைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதுடன் ஏனைய காய்களுக்குச் செல்லும் உணவு, நீர் போன்றவற்றையும் உறிஞ்சுகின்றன. இதனால் காய்களுக்கு உரிய நீர், உணவு என்பன கிடைக்காமையால் அவை நோய்த்தாக்கத்துக்கு ஆளாகின்றன. இதன் காரணமாக பழமாகும் வரை செடிகளில் அவற்றை விடுவதில்லை. பழங்களாலும் எந்தப் பயனும் இல்லை என்றார் அவர்.

படையினரால் அதிக அளவில் கொள்வனவு செய்யப்படுவதுடன் தற்பொழுது வன்னிப் பகுதிக்கும் இவை அனுப்பிவைக்கப்படுவதாகவும் தெரிவித்தார் நகுலேஸ்வரன். இது மட்டுமன்றி முந்திரிகை, மிளகாய், கத்தரி, பாகல், வெங்காயம் போன்ற பயிர்ச்செய்கைகளிலும் இவர் ஈடுபட்டுள்ளதைக் காணமுடிந்தது. இவ்வாறு தொழிலார்வம் மிக்க ஓர் இளம் விவசாயியுடன் கிட்டத்தட்ட இரண்டு மணி நேரத்தில் பல விடயங்களை அறிந்து கொண்ட திருப்தியுடன் அவரிடம் இருந்து விடைபெற்றோம்.*

# தமிழீழ விளையாட்டுத்துறை வீரர்கள் சர்வதேச அரங்கில் தோன்றும் காலம் வரும்

*இலங்கையின 29 ஆவது தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாண நகரத்தில் நடத்துவது பற்றித் திட்டமிட்டுள்ள இலங்கை விளையாட்டுத் துறை அமைச்சுக்கு...*

வடக்கு - கிழக்குப் பகுதியில் யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் சமாதானப் பேச்சு ஆரம்பிக்கப்பட்டு தமிழ் மக்களுக்கு ஓர் இயல்பான வாழ்க்கை முறை ஏற்படுத்தப்படும் என்ற அபாரமான நம்பிக்கையில் வாழ்ந்த எமது இனம் கடந்த ஒன்றரை வருட காலமாக கண்டது தான் என்ன? குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டம் ஓர் இராணுவ முகாமாகவே உள்ளது. வாழ் நிலத்தைப் பொறுத்தவரை மக்கள் குடியிருப்புக்களில் இராணுவம் முகாமிட்டிருக்கின்றார்கள் என்று கூறுவதைவிட இராணுவ முகாமுக்குள் மக்கள் வாழ்கிறார்கள் என்பதே உண்மையானது. இந்தக் காட்சிகளை சர்வதேசத்தில் இருந்து இங்கு வந்துசெல்லும் எந்த நாட்டவரும் மறுக்கவில்லை. ஒரு தேசிய விளையாட்டு விழாவானால் சகல இன மக்களும் கூடி அந்த நிகழ்வை சிறப்பிக்க வேண்டும் அப்படி ஒரு சூழ்நிலை இன்று யாழ். நகரில் உள்ளதா? யுத்தத்தால் அழிக்கப்பட்ட மக்கள் குடியிருப்புக்கள் இன்னமும் கட்டியெழுப்பப்படவில்லை. தனது சொந்த ஊருக்கோ வீட்டிற்கோ செல்லமுடியாத நிலையில் வாழும் மக்கள் ஒரு புறம் - சமாதான பேச்சுக்கள்மூலம் மக்களுக்கு எதை இந்த அரசாங்கம் இதுவரை வழங்கியுள்ளது. இந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் தேசிய விளையாட்டை அரசு நடத்தி சர்வதேச உலகத்திற்கு இலங்கைத்தீவில் சமாதானமும் ஐக்கியமும் நிலவுகின்றது என்ற விளம்பரத்தை காட்ட முற்படுகின்றது. மொத்தத்தில் தமிழினம் வியாபாரப் பொருளாக ஆக்கப்படுவதை நாம் விரும்பவில்லை.

**யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திச் சங்கம்**

விளையாட்டுத்துறையையோ அன்றி விளையாட்டு வீரர்களின் மனநிலையையோ நாம் புண்படுத்தவில்லை. ஸ்ரீலங்கா விளையாட்டு வீரர்களை மட்டுமல்ல உலகத்தில் நட்சத்திரங்களாக்கத் திகழும் விளையாட்டு வீரர்கள் அனைவரையும் நாம் எம் இதயங்களில் நிறுத்திப் பாராட்டுகின்றோம். இவ்வீரர்கள் எமது இனத் தின் கேவலமான அவலநிலையை யும் புரிந்துகொள்ள வேண்டும். எமது வடக்கு - கிழக்கு வீரர்கள் மனதிலும் இது ஒரு கவலையை ஏற்படுத்தும். ஆனால், காலம் காலமாக அடிமைத்தளையில் வாழ்ந்த எமது இனம் சமாதானத்தின் மூலம் உரிமைகள் பற்றி பேசப்படும்போதும் நசுக்கப்படுகின்றோமே. இந்த அவலத்தை இயல்புநிலை எனக்காட்ட முயற்சிக்கும் இவ்விளையாட்டு விழா தற்போது யாழ் மாவட்டத்தில் நடத்துவது பொருத்தமானதா? விளையாட்டு அமைச்சு எடுத்திருக்கும் இந்த முடிவை நாம் பாராட்டுகின்றோம். ஆனால், உங்கள் அமைச்சின்மூலம் யுத்தத்தில் மாண்டபூமியை நிமிர்த்துங்கள். வடக்கு - கிழக்கு நிலத்தில் விளையாட்டை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். தென்பகுதியில் இன்று எத்தனை சர்வதேச தரத்திலான மைதானங்கள் உள்ளன. அந்த வீரர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் வசதிகள் எந்தளவு? இவை அனைத்தையும் ஒப்பிடும்போது வடக்கு - கிழக்கு தேசம் விளையாட்டு அபிவிருத்தியில காலங்காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வருவதை உங்களால் ஒத்துக்கொள்ள முடிகிறதா? இலங்கையில் தமிழினம் தனித்துவமானது; தனியான தேசியக் கட்டமைப்பைக் கொண்டது. இதனை சிங்கள விளையாட்டு வீரர்கள் மட்டுமல்ல உலகமே ஏற்கவேண்டும். நாம் விளையாட்டு நிகழ்வை நடத்தி வருகின்றோம். இயன்றளவு எமது வீரர்கள் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள். திறமையுள்ள வீரர்கள் வடக்கு - கிழக்கு தாயக தேசத்தில் வாழ்கிறார்கள். அப்படியானால் இலங்கை தேசிய அணிகளில் தமிழனின் பங்கு என்ன? இந்தக் கேள்விக்கு எந்த அரசாங்கமும் பதிலளிக்க முடியாது. புரிகிறதா இப்போது விளையாட்டுத் துறை விடயத்திலும் ஈழத் தமிழனுக்கு ஸ்ரீலங்காவில் இடமில்லை.




இந்த நிலையில், தமிழ்ப் பிரதேசத்தில் விளையாட்டு விழாவா? எவ்வாறு சாத்தியப்படும்? அடுத்தது விடுதலைக்காக விதையாகி இரத்தம் உறைந்து கிடக்கும் எமது வீரதேசத்தில் ஸ்ரீலங்காவின் தேசியக்கொடி பறக்க சிங்கள கலாசார நிகழ்வுகளுடன் போட்டிகளை நடத்துவது எப்படி? இனத்தோசம் இல்லாது நல்ல மனதுடன் சிந்தித்து விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டிருப்பின் அவர்களை நாம் புண்படுத்தவில்லை. ஆனாலும், காலசூழலைக் கருத்திற்கொண்டு இவ்விழாவை யாழ். நகரில் நடத்துவதை கைவிடுங்கள். இலங்கையில் இதுவரை நடந்த 28 தேசிய விளையாட்டு விழாக்களும் எவ்வாறு நடந்ததோ அதேபோன்று எங்காவது ஒரு இடத்தைத் தெரிவுசெய்யுங்கள். உங்கள் நிகழ்வில் பங்குகொள்ளும் எமது தமிழ் வீரர்கள் அங்கு வருவார்கள். போட்டியிடுவார்கள். திறமைகளை வெளிப்படுத்துவார்கள். செம்மணிக்குள் புதையுண்ட வீரர்களை நினைவில் கொண்டு இன்னும் உங்களுடன் சிரித்தபடியே பழகுவார்கள். காரணம் 'நாம் தமிழர்கள்.'

தமிழ் தேசியப் போட்டிகள் மூலம் உலகத்திற்கு எமது வீரர்கள் வெளிப்படும் காலம்வரும் அன்று சர்வதேசததில் எங்காவது ஒரு மைதானத்தில் ஒன்றாக சந்திப்போம் உரிமையுடன்.

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 05.08.1976 இல் பிறந்த, 7 இல் செவ்வாய், கேட்டை, சிவந்த, அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை. வெளிநாடு விரும்பத்தக்கது. வி.இல. 2028, மே/பா உதயன். (22375)

## தவறிவிட்டது

குகேந்திரன் இராசதுரை என்பவருடைய மோட்டார் சைக்கிள் பதிவிற்குரிய ஆவணங்கள் கோண்டாவிலுக்கும் கைதடிக்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து க.சிவகரன், கோண்டாவில் மேற்கு, மஞ்சத்தடி வீதி, இணுவில் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (22358)

## விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் றோட்டில் 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- விஜி, தொலைபேசி இல. 222 2672. (22368)

## வீடு விற்பனைக்கு

சுழிபுரம் மேற்கில் 8 பரப்பு நிலத்துடன் வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: க.செல்லையா, நுணசை வீதி, மாதகல் T.P 070 212513 (22387)

## T.V. விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Sony 21" T.V.விற்பனைக்குண்டு. தொடர்பு: 70, (32B) செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.T.P.0777983299 (22389)

## பேச்சாளர் கௌரவிப்பு

கோப்பாய், செப்.9

நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் மஹோற்சவத்தின் போது தொடர் தெய்வீகப் பேருரை யாற்றிய பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோரைப் பாராட்டிக் கௌரவிக்கும் வைபவம் நாளை புதன்கிழமை இரவு ஆலய மண்டபத்தில் நடைபெறும். (ஐ-72)

### தேவை

வாகனங்களுக்கு காற்று அடிக்கக் கூடிய கொம்பிரஷர் (COMPRESSOR) உடன் தேவை.
தொடர்பு:-
மாஸ்டர் - மோட்டார் சைக்கிள் திருத்துமிடம்,
இணுவில். (22386)

### மணமகன் தேவை

யாழ். வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 37 வயது அரசாங்க பொறியியலாளராகக் கடமையாற்றும் 5'2" உயரமுள்ள உத்தராடாதி நட்சத்திர மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை.

மணமகன் குறைந்தது பட்டதாரிக் கல்வி பெற்றவராகவும் அதற்கு ஏற்ற தொழில் புரிபவராயும் இருத்தல் விரும்பத்தக்கது.

ஜாதக விவரத்துடன் மேலதிக முழு விவரங்களுடன் தொடர்புகொள்ளவும்.

விளம்பர இல. 2029
C/o உதயன்,
யாழ்ப்பாணம்.
(22379) (21-12-14)

## மீனவருக்கு நிவாரணம் கிடைக்கவில்லை

வடமராட்சி, செப்.9

வடமராட்சி கிழக்குப்பகுதியிலுள்ள மணல்காடு கிராமத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மீனவக் குடும்பங்களுக்கு கடந்த நான்கு மாதங்களாக மீனவ நிவாரணம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மணல்காடு மீனவர் கூட்டுறவுச் சங்கம் இது தொடர்பாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச சங்கச் சமாச செயலாளர் எஸ். சூரியகுமாரனிடம் முறையிட்டிருக்கிறது.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையிலான நான்கு மாத காலத்துக்கு மீனவர் நிவாரணம் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

## தொடர்புகொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.9

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

திருமதி அழகேஸ்வரன் மொறின் கிறிஸ்ரினா (நேதாஜி ஒழுங்கை, நல்லூர்), கந்தையா யோகரட்ணம் (றெக்கிளமேசன், குருநகர்), திருமதி விஜயரட்ணம் தனலக்ஸ்மி (ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்) -

செல்வி செல்வராஜா மைதிலி (டச்சுவீதி, பண்டத்தரிப்பு), திருமதி வைரமுத்து ராஜேஸ்வரி (சங்குவேலி, மானிப்பாய்), திருமதி சிவராஜா நாகேஸ்வரி (ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்). (ஐ-10)

## பிறந்தநாள் வாழ்த்து



லண்டன் மாநகரில் வாழ்கின்ற எம் மதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய


**உயர்திரு. ஜெகதீசன்**

அவர்களுக்கு 69 ஆம் அகவை மலரும் இவ்வேளையில் எம் குடும்பத்தின் ஒளிவிளக்காய், ஏணியாய் விளங்கும் எம் உயர்வினைக் கண்டு மகிழ்ந் திடும் எம் சித்தப்பாவை நன்னாளாம் இப்பிறந்த பொன் நாளில் எம் இனிய சித்தியுடன் என்றும் சீருஞ்சிறப்புமாக பல்லாண்டு வாழ்ந்திட வேண்டுமென இறையருளை வேண்டி வாழ்த்துகின்றோம் வாழி!

வாழ்த்துபவர்கள்:
அண்ணி - குணபாக்கியம்,
ஸ்ரீரஞ்சன் குடும்பம்,
ரகுபாலா குடும்பம்,
சிறிபாலா குடும்பம்,
ஜெயபாலா குடும்பம்.

30/2. மருதடி வீதி.
யாழ்ப்பாணம்.

## இன்று தேர்த்திருவிழா



உ
குருவே துணை

அருள்மிகு கைதடி இணுங்கித் தோட்ட முருகப்பெருமான் இன்று புதிய சித்திரத்தேரில் பவனி வருகிறார்.

தேர்வடம் பிடிக்க வாருங்கள்!
வல்வினையைப் போக்குங்கள்!
அவன் நாமமே அரண் என வாழுங்கள்!
- கைதடி வர்த்தக நிலையம்,
கைதடிச்சந்தி, கைதடி.

எம்மிடம் 2X2 நீப்பைகள், 1X2 நீப்பைகள், கொ/முதிரை, பலகைகள், சப்புப்பலகைகள் கூடுதலாகப் பெறுபவர்களுக்கு விசேடகழிவு வழங்கப்படும்.

மற்றும் சீற், தேனி ஓடு, கம்பி வகைகள், காஸ் அடுப்புகள், சிலிண்டர்கள், மின்சார உபகரணங்கள், பைப்பொருத்துக்கள், பலசரக்குச் சாமான்கள், ஆனந்தம் தயாரிப்புக்கள், பிளாஸ்ரிக் கதிரைகள், மிருக உணவுகள், உரம், கிருமிநாசினிகள் ஆகியன எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கைதடி வர்த்தக நிலையம்
KAITHADY TRADE CENTRE
கைதடிச் சந்தி, கைதடி.
(22380) (21-12-14)

# தென்னிந்திய திருத்தல யாத்திரை



பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபா தரிசனம் உட்பட பல புனித தலங்களுக்கு செல்லும் அரிய வாய்ப்பு

தென்னிந்திய திருத்தல யாத்திரைகளை சிறந்தமுறையில் செய்துவரும் ஒரே நிறுவனம்

**தரிசிக்கும் புனித ஸ்தலங்கள்**



சென்னை: மெரினா கடற்கரை, அண்ணா சமாதி, எம்.ஜீ.ஆர். சமாதி, அடையார் அஷ்ட லஷ்மி கோயில், திருவேற்காடு, மாங்காடு

காஞ்சிபுரம்: காமாட்சி அம்மன், ஏகாம்பரரேஸ்வரர், வரதராஜப் பெருமாள், திருத்தணி,

ஆந்திரா: திருப்பதி, புட்டபர்த்தி பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா தரிசனம், சாய்பாபா மியூசியம்.



சிதம்பரம் நடராஜர்,
பூம்புகார் கண்ணகை அம்மன்,
நாமக்கல் ஸ்ரீ ஆஞ்சநேயர்.
தஞ்சாவூர் தஞ்சைப்பெருங்கோயில்,
இராமேஸ்வரம்,
திருச்செந்தூர்,

கன்னியாகுமாரி: முக்குத்தி அம்மன், திரிவேணி சங்கமம், சுவாமி விவேகானந்தர் நினைவாலயம், திருவள்ளுவர் சிலை, சுசீந்திரம்.
குற்றாலம்



மதுரை: மீனாட்சி அம்மன் பழமுதிர்ச்சோலை, அழகர் கோயில், பழனி,

திருச்சி: உச்சிப்பிள்ளையார், ஸ்ரீரங்கம், சுவாமி மலை, சமயபுரம் திருப்பரங்குன்றம்

யாத்திரியர்களுக்கு வசதியான விடுதிகளில் தங்குமிட வசதியும், முற்றிலும் குளிரூட்டப்பட்ட சொகுசு வாகனங்களில் வழிகாட்டி துணையுள்ளான பிரயாணமும், உயர்தர சைவ உணவுகளும் வழங்கப்படும்.

வீசா கட்டணம் உட்பட யாத்திரை சென்று மீண்டும் வெள்ளவத்தை திரும்பும் வரையான சகல செலவுகளும் நிறுவனத்தால் பொறுப்பேற்கப்படும்.

இத்திருத்தல யாத்திரை ஒக்டோபர் நடுப்பகுதியில் ஆரம்பமாகும். யாத்திரியர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருப்பதால் செப்டம்பர் 20-ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

நியாயமான கட்டணம்

குறிப்பு: சாயி நிறுவனங்கள், சமித்திகள், சமய தொண்டர் நிறுவனங்கள் மற்றும் குழுக்களாக விண்ணப்பிப்பவர்களுக்கு விசேட கழிவு உண்டு.

யாழ்ப்பாணத்தில்: தொடர்புகொள்ளவும்
சுதர்சன்
**Cozee Travels**
*Maniyam Building 15, Sirimpiyadi Lane, Off Stanley Road, Jaffna.*
*Tel: 021-2225899, 077-7304545*

கொழும்பில்: தொடர்புகொள்ளவும்
கமேஷினி
**Metro Travels & Tours (pvt) Ltd**
*403 1/2, Galle Road*
*Wellawatte,*
*Colombo 6.*
*Tel: 01-2362766, 074-510562*
*E-mail: meetro@slt.net.lk*


DREAM STATION | 255 9789

## எட்க்ரோ கிரீவ்ஸ்

செல்வம் செழிக்ககூடிய வளமான விளைச்சலுக்கு இலங்கையில் முன்னணியில் திகழும்

**எட்க்ரோ**
**கிரீவ்ஸ்**
**MK 12/ MK 25**

விவசாய நீர் இறைக்கும் இயந்திரம்



புத்திசாலியான உங்கள் சரியான தெரிவு, எட்க்ரோ நீர்இறைக்கும் இயந்திரம் மூலம் பொங்கி வரக்கூடிய சலுகைகள்

ஒரு வருடத்துக்கான உத்தரவாத சான்றிதழ். பலமிக்கதும் நீண்ட காலம் உழைக்கக்கூடியதும். அதிக தண்ணீரை பெற்றுக்கொள்ளக்கூடிய வல்லமை. சுயமாகவும் சுயமற்றதாகவும் நீர்இறைக்கவல்லது. எரிபொருளை சேமிக்கவல்லது. நாடளாவிய விற்பனைக்கு பிந்திய சிறந்த சேவை. தேவையானளவு உதிரிப்பாகங்கள்.

எட்னா அப்ளயன்ஸஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
160, பௌத்தாலோக மாவத்தை கொழும்பு 04.
தொலைபேசி, 508961 - 2, 502298 - 3, 592135 - 6
தொலைநகல், 594558, 580909
தொடர்புகளுக்கு: மயூரா - 0777-418821 இபுனு - 0777-418817

(22312) RJA.

யாழ்ப்பாணத்தில் :
**ஆர்க் என்ரப்பிறைசஸ்**
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பணம்.
தொ.பே.: 222 2052

# ஜனாதிபதி - பிரதமர் இழுபறியால் இலங்கை அரசியல் அலங்கோலம்!

## தமிழ்நாட்டின் 'தினமணி' நாளிதழ் ஆசிரிய தலையங்கம்

*"இலங்கையில் புதிய சர்ச்சை" என்ற தலைப்பில் நேற்று முன்தினம் 'தின மணி' நாளிதழ் பிரசுரித்த தலையங்கம் இது.*

இலங்கையின் அரசமைப்புச் சட்டம் விநோதமானது நிர்வாக அதிபர் சந்திரிகா குமாரதுங்க சர்வ அதிகாரங்களும் படைத்தவர். அதேசமயத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி தற்பொழுது நடைபெற்று வருகிறது. பிரதமரும் அதிபரும் எதிரும் புதிருமான அரசியல் கட்சிகளைச் சார்ந்திருப்பதால் முக்கிய பிரச்சினைகளில் கருத்து வேறுபாடுகள் தவிர்க்க முடியாதவையாக ஆகிவிடுகின்றன. அதிலும் குறிப்பாக, ஈழத்தமிழர் பிரச்சினையில் இழுபறி நிலை, இந்த அலங்கோலத்தை எடுப்பாக்கி வைத்திருக்கிறது.

இப்பொழுது இத்தகைய விநோதமான அரசியல் முரண்பாடு சர்வதேச அரங்கிலும் நிழலாட ஆரம்பித்திருக்கின்றது. இம்மாத இறுதியில் நியூயோர்க்கில் நடைபெறவிருக்கும் ஐ.நா. பேரவைக் கூட்டத்தில் இலங்கையின் சார்பில் யார் உரையாற்றுவது? அதிபரா அல்லது பிரதமரா?

"அந்த உரிமை எனக்கே உண்டு" என்று சாதிக்கிறார் அதிபர் சந்திரிகா.

ஆனால், இலங்கைக்குப் பிரதிநிதித்துவம் வகிக்கக்கூடிய தகுதி தனது அரசுக்கே இருப்பதாக ரணில் கருதுகிறார். சட்டப்படி நிர்வாக அதிபர் சர்வ வல்லமையும் படைத்தவராக இருக்கலாம். ஆனால், அரசியல் நெறிப்படி 2001 தேர்தல்களில் அதிபரின் மக்கள் கூட்டணியைப் படுதோல்வியடையச் செய்து புதிய ஆட்சியை அமைத்துள்ள தனது அரசே இலங்கை மக்களின் பிரதிநிதித்துவ அரசு என்பது ரணிலின் நிலைப்பாடு. அத்தேர்தல் முடிவு அதிபரின் தலைமையில் இலங்கை மக்களுக்கு நம்பிக்கையில்லை என்பதையே புலப்படுத்தியது - என்பது பிரதமர் தரப்பு வாதமாக இருக்கக் கூடும்.

இத்தகைய சூழ்நிலையில் ஐ.நாவில் உரையாற்றுவதற்கான உரிமை தனக்கே உண்டு என்பதை வலியுறுத்தி அதிபர் சந்திரிக்கா வெளியிட்டுள்ள அறிக்கை சுவையானது மட்டுமல்ல இலங்கை அரசியலின் முரண்பாட்டை, சர்வதேச அளவுக்கு எடுப்பாக்கி இருப்பதும் கூட.

"ஆட்சியின் தலைவரே ஐ.நாவில் உரையாற்றுவது என்பதே இவ்வளவு காலம் வழக்கமாக இருந்து வருகிறது. நிர்வாக அதிபருக்கே அந்த உரிமை உண்டு. நிர்வாகப் பொறுப்புடைய அந்தஸ்தில் இல்லாத பிரதமருக்கு அந்த உரிமை கிடையாது" - என்று சந்திரிகா சட்டம் பேசியிருக்கிறார். ஆட்சியின் சட்டபூர்வமான தலைவராக அதிபர் இருக்கலாம் நிர்வாக அதிபராகவும் இருக்கலாம். ஆனால், இலங்கையில் தற்போது நடைமுறையில் இருந்து வருவது ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் ரணிலின் ஆட்சியே.

இந்நிலையில் ஐ.நா. பேரவையில் இலங்கையின் சார்பில் உரையாற்றத் தனக்கு நேரம் ஒதுக்குமாறு கோரி, ஐ.நா. பொதுச் செயலாளர் கோபி அனானுக்கு அதிபர் சந்திரிகா கடிதம் எழுதியிருக்கிறார். இது சர்ச்சையை உருவாக்கி இருக்கிறது. ஏனெனில், இதே விருப்பத்தை பிரதமர் ரணிலும் ஐ.நாவிற்கு தெரிவித்திருக்கிறார். எனவே, ஐ.நா. இப்போது திண்டாட்டத்தில் இருக்கிறது. "இந்த விருப்பத்தை என்னிடம் ஏன் பிரதமர் ரணில் தெரிவிக்கவில்லை" - என்று அதிபர் சந்திரிகா சீறியிருக்கிறார்.

இலங்கையின் அரசமைப்புச் சட்டப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமரின் ஆட்சியை - தேர்தல் நடந்து முடிந்த ஓர் ஆண்டிற்குப் பிறகு - எந்த நேரத்திலும் கலைத்து விட்டு மறு தேர்தலுக்கு ஆணையிட அதிபருக்கு அதிகாரம் உண்டு. இந்த நிபந்தனையுடன் கூடிய அதிகாரம் இலங்கை அரசியல் சட்டத்தில் உள்ள இன்னொரு விசித்திரம்!

சட்டப்படி எப்போது வேண்டுமானாலும் ரணில் அரசை சந்திரிகாவினால் கலைக்க முடியும். ஆயினும், அப்படிச் செய்ய அதிபருக்கு ஏன் துணிவு வரவில்லை? அதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை. ரணில் ஆட்சியை 'டிஸ்மிஸ்' செய்தால் அடுத்து வரக்கூடிய தேர்தலில் மக்களின் அனுதாபத்தை பெரிய அளவில் திரட்டி, முந்தைய தேர்தலை விட பெரிய அளவில் வெற்றிபெற்று, மீண்டும் இதைவிட பலமான ஆட்சியை ரணில் அமைக்கக் கூடும் என்று அதிபர் உள்ளூர அச்சம் கொண்டிருக்கலாம்.

ஆக, இந்த அலங்கோலத்தில் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருப்பது ஈழப்பிரச்சினை தீர்விற்கான சமரச முயற்சிகளும் கூட - என்பது சோகமான உண்மை. (ஒ)

## தேசியக் கொடி ஏற்றும் விடயம் மானிப்பாயில் விவகாரமாகியது

யாழ்ப்பாணம்,செப்.9

தமிழீழத் தேசியக்கொடி ஏற்றுவது தொடர்பான விடயம் நேற்று முன்தினம் மானிப்பாயில் விவகாரமாகியது.

சண்டிலிப்பாய் தேசிய எழுச்சிப் பேரவைக் கூட்டம் நேற்று முன்தினம் மாலை 3.30 மணியளவில் மானிப்பாய் பிரதேச சபைக் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஆரம்பத்தில் தமிழீழத தேசியக்கொடியை ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டபோது, அங்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் வந்தனர். அவர்கள் தமிழீழத தேசியக்கொடி ஏற்றக்கூடாது எனக் கூறினர்.

அங்கு கூடியிருந்த பொது மக்கள் மற்றும் தேசிய எழுச்சிப் பேராளர்கள் ஆகியோர் இதனையடுத்து கண்காணிப்புக் குழுவினருக்கு நிலைமையை விளக்கினர். அதன் பின்னர் கண்காணிப்புக் குழுவினர் அகன்றனர்.

பின்னர் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின. சண்டிலிப்பாய் தேசிய எழுச்சிப் பேரவையின் உபசெயலாளர் சிவராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொது ஈகச்சுடரினை சண்டிலிப்பாய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சுடபவந்தன் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினை வலிகாமம் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவன் ஏற்றினார்.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில், வலிகாமம் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வின் இறுதியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் சில வருமாறு:-

☆தமிழர் தாயகத்தில் நடைபெறுகின்ற பிரதான தேசிய நிகழ்வுகளில் வெர் தடுத்தாலும் - உயர்விலை கொடுத்தேனும் - தமிழீழத் தேசியக்கொடி ஏற்றப்படும்.

☆வடக்கு-கிழக்கின் இடைக்கால நிர்வாகம் புலிகளிடம் வழங்கப்பட வேண்டும்.

☆ மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தும் முகமாக உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் மீள குடியமர உடன் அனுமதிக்கப்பட வேண்டும். (ஒ-9-150-86)

### மகளிர் படையணியின் மரதன் ஓட்டப் போட்டி முடிவு

தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண்கள் படையணிகளுக்கிடையிலான மரதன் ஓட்டப்போட்டி கடந்த 5ஆம் திகதி வன்னியில் இடம்பெற்றது.

இப்போட்டியில் முதலாம் இடத்தினை சோதியா படையணி வீராங்கனையும், இரண்டாம் இடத்தினை மாலதி படையணியைச் சேர்ந்த வீராங்கனையும், மூன்றாம் இடம்மிடத்தினை அன்பரசி படையணியைச் சேர்ந்த வீராங்கனையும் பெற்றுக்கொண்டனர்.(ஒ-5-70)

### பொலீஸார்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும் மிகுந்த பொறுப்புணர்வோடும் கடமையுணர்வோடும் இந்தப் பணிகளைச் செய்துவந்திருக்கின்றீர்கள். இப்பொழுது இருக்கின்ற காலம் மிகவும் வித்தியாசமானது. ஏ-9 பாதை திறக்கப்பட்டிருக்கிறது. தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் நிறைய வந்துகொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டவர்களும் அதிகம் வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் இதைத் தங்களுடைய நாடு என்று கருதிக்கொண்டு வருகிறார்கள். இந்நிலையில் உங்களுடைய செயல்தான் அவர்களுக்கு எங்களுடைய போராட்டத்தின் மீதும் எங்களுடைய காவல்துறையின் மீதும் நம்பிக்கையை உருவாக்கும். எனவே, இந்தக்கால கட்டத்தில் நீங்கள் மிகவும் அவதானமாகவும் முன்னரைவிட இன்னும் சிறப்பாகவும் செயற்படவேண்டும்.

இதுவரைகாலமும் எத்தனையோ நெருக்கடிகளுக்கும் அழுத்தங்களுக்கும் மத்தியில் உங்கள் பணிகளை ஆற்றினீர்கள். இப்பொழுது நிறைய வசதிகளும் வாய்ப்புகளும் ஏற்பட்டு வருகின்றன. நீங்கள் பழைய, இக்கட்டான காலங்களில் கட்டுக்கோப்புடன் மக்களோடு ஓர் உறவை வளர்த்துக்கொண்டு செயற்பட்டீர்கள் அது போன்று நடுவப்பணியகம் போன்ற கட்டமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு, மேலும் அதிகாரம் கைக்கு வந்து சேரும்போதும் அந்த அதிகாரம் எனும் தலைப்பாரத்தை உங்களிடம் வர விடாமல் அன்பு என்ற ஆயுதத்தால் அதனை விரட்டி - மக்களுடன் உங்களுடைய உறவுகளை இன்னும் நெருக்கமாக வளர்த்துக்கொண்டு உங்கள் கடமைகளைச் சிறப்பாகச் செய்யவேண்டும் எனக் கேட்டுகொள்கிறேன்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' - என்று தேசியத் தலைவர் கூறினார். (ஒ)

### மலசலகூடம் அமைக்க மீசாலையில் உதவி

யாழ்ப்பாணம்,செப்.9

மீசாலைப் பகுதியில் உள்ள வறிய குடும்பங்களுக்கு இந்து கலாசார அமைச்சினால் மலசலகூடம் அமைப்பதற்காக சிமெந்துப் பைக்கற்றுக்களும் மலசலகூட கோப்பைகளும் நாளை புதன்கிழமை காலை 8மணிக்கு மீசாலை காட்டுவளவு நெல்லியடி கந்தசுவாமி சோபிலில் வைத்து வழங்கப்படவுள்ளன.

இதற்குத் தெரிவுசெய்யப்பட்ட அனைவரையும் நேரில் வருகைதந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு ஆலயப்பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (ஒ-10)

### அமல மரித் தியாகிகளின் பொது அமர்வு

வடமாகாண அமலமரித் தியாகிகளின் பொது அமர்வு இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை வரை யாழ்ப்பாணம் தொடர்பகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை இப்போது அமர்வை வைபவரீதியாக ஆரம்பித்துவைப்பார்.

இதற்கு ஆயத்தமாக ஆன்மீக ஞான வொடுக்கம் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை வரை பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெறுகின்றது. (ஒ-8)

### பல்கலையில் கண்பரிசோதனை

யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினால் பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்களுக்கான இலவச கண்பரிசோதனை இன்று காலை 9மணி முதல் பிற்பகல் 2மணி வரையும் பல்கலைக்கழக ஊழியர் பொது அறையில் இடம்பெறவுள்ளது. (ஒ-10)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி உமாபதி

கற்பொக்கனை, கந்தரோடையைப் பிறப்பிடமாகக் கொண்ட சின்னத்தம்பி உமாபதி அவர்கள் நேற்று (08.09.2003) திங்கட்கிழமை அகால மரணமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வநாயகியின் அருமைக் கணவரும் கேதீஸ்வரன் (லண்டன்), ர.கமலினி (ஆசிரியை, யா/ நாகேஸ்வரி வித்தியாசாலை, சுன்னாகம்) ஆகியோரின் அருமைத் தந்தையும் சுப்பிரமணியம், விநாசித்தம்பி, காலஞ்சென்ற சிவகாமசுந்தரி, கணேசு, மனோ, ரஞ்சிதம் (கனடா), மங்கையர்க்கரசி, அன்னலட்சுமி (கனடா) ஆகியோரின் சகோதரரும் ச.இராசேந்திரம், ச.முருகையா, விஜியலட்சுமி, செல்வநாயகி ஆகியோரின் மைத்துனரும் இ.ரமேஸ்குமார், கே.ஸ்ரீதா ஆகியோரின் மாமாவும் ர.பிரியம்வதாவின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2003) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் கந்தரோடை சங்கம்புலவு மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கற்பொக்கனை,*
*கந்தரோடை,*
*சுன்னாகம்.* (22413) (11-18-29)

தகவல்:
இ.ரமேஸ்குமார் (மருமகன்)

### திருமதி எலிசபேத் கண்மணி றிச்சேட்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி எலிசபேத் கண்மணி றிச்சேட் 08.09.2003 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோன் றிச்சேட்டின் அன்பு மனைவியும் லீற்ரன், சந்திராவதி, பத்மாவதி, பற்றிசியா, திலகேந்திரன், விமலகுலேந்திரன், தவேந்திரன், விக்ரரின்-இன்பவதி ஆகியோரின் பாசமிகு தாயாரும் பரமேஸ்வரி, காலஞ்சென்ற யோன் மற்றும் கிறிஸ்ரி, அன்ரன், லலிதா, பரமேஸ்வரி, பற்றிமா, ஜெயகாந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (9.9.2003) செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் ஆனைக்கோட்டை புனித அடைக்கல நாயகி ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் யாழ். மரியன்னை பேராலய சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"சிதம்பரவில்லா,"*
*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (22408) (29-11-18)

தகவல்:
ஜெயகாந்தன் (மருமகன்)

### திருமதி பரமேஸ்வரி வல்லிபுரநாதர்

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் கரணவாயை வசிப்பிடமாகவும் தற்போது மல்லாகத்தில் வசிப்பவருமாகிய திருமதி பரமேஸ்வரி வல்லிபுரநாதர் 08.09.2003 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வல்வெட்டி காலஞ்சென்ற சுந்தையா-அன்னம்மா தம்பதிகளின் மகளும் கரணவாய் தெற்கைச் சேர்ந்த மயில்வாகனம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்றவர்களான நடராசா, குணரத்தினம், மகேஸ்வரி மற்றும் ராஜேஸ்வரி (கனடா), நாகேஸ்வரி (கொழும்பு), சோமசேகரம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பர்குணம், ஜெகநாதன், ஆலாலசுந்தரம் மற்றும் செல்லம்மா, செல்வமலர் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.09.2003) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு சகோதரருடைய இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அளவெட்டி, மல்லாகம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

*"பங்களா லேன்,"*
*கல்லாரை,*
*மல்லாகம்* (22411) (29-11-16)

தகவல்:
க.சோமசேகரம்
(நல்லதம்பி-சகோதரர்)


நிர்த்தனம் சுன்னாகம்
விஜய், பிரியங்கா சோப்ரா நடிக்க
தமிழன்
காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00 (பி.நே.)
WISH MASTER
(கராட்டிப் படம்)
(C/29905)

லக்ஷ்மி சினிமா இணுவில்
ஸ்ரீகாந்த், த்ரிஷா, வையாபுரி மற்றும் பலர் நடிப்பில்
மனசெல்லாம்
புதிய நேரம்: 11.00, 3.00, 7.00

நாகம்ஸ் சுன்னாகம்
மம்முட்டி, அப்பாஸ், ராகாரவி, வடிவேல் நடிக்க
கார்மேகம்
தினசரி காட்சிகள்: 11.00, 3.00, (பி.நே.)
இரவு 7.00 மணிக்கு
Red Scorpion

ராஜா யாழ்ப்பாணம்
மாதவன், சிம்ரன் நடித்த
பார்த்தாலே பரவசம்
காட்சி நேரம்:10.30, 2.30, 5.30, 8.30 (பி.நே.)

We Serve
கொக்குவில் லயன்ஸ் கழகம்
இலவச கண்பரிசோதனை முகாம்
காலம் : நாளை (10-09-2003) புதன்கிழமை
நேரம் : காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை
இடம் : கொக்குவில் இந்துக் கல்லூரி
இப்பரிசோதனை முகாமில் பெறுமதியான கண்ணாடிகளை 750/= இற்குப் பெற்றுக் கொள்ளலாம்.
செயற்றிட்ட இயக்குநர்
கொக்குவில் லயன்ஸ் கழகம்.
(C/30089) (11-16-29)

Computer College
கணனிக் கல்லூரி
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Desktop publishing, Hardware
M.S. Office
செப்டம்பர் 09,12,13 ஆம் திகதிகளில்
பிரிவு 1 செவ்வாய் மாலை 4.00
பிரிவு 2 வெள்ளி மாலை 4.00
பிரிவு 3 சனி காலை 10.00
மற்றும் இரவு, பகல் நேர பிரத்தியேக வகுப்புக்கள்
இயக்குனர்,
கணனிக்கல்லூரி,
317,கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
021-2223497, 021-2222827

# கட்சி பேதமின்றி தேசிய முன்னணி அமைக்க சகல கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு!

"இன்று இந்நாட்டுக்கு நேர்மையான அரசியல் தலைமைத்துவத்தின் அவசியம் பெரிதும் உணரப்படுகிறது. அதனால், கட்சி பேதமின்றி பரந்த தேசிய முன்னணி ஒன்றின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்பும் தேவை ஏற்பட்டிருக்கின்றது. அவ்வாறான ஒரு முன்னணிக்கு நாட்டிலுள்ள சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுகிறேன்."

- இவ்வாறு கூறினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, மத்துகம, பதுரலிய கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெற்ற வெள்ள நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சியில் அவர் உரையாற்றினார்.

அங்கு ஜனாதிபதி தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

நாடு எதிர்நோக்கும் ஆபத்தான மிகவும் தீர்க்கமான ஒரு சந்தர்ப்பத்திலேயே நாம் இன்று பேசுகிறோம். இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்நாட்டு மக்கள் பெரும் எதிர்பார்ப்புகளுடனேயே புதிய அரசு ஒன்றை தெரிவுசெய்தனர்.

வெகுவிரைவில் சமாதானம் கிட்டும் என்று மக்கள் எதிர்பார்த்தனர். நாம் செய்ததைக்காட்டிலும் மிகக் கூடுதலான அபிவிருத்தி ஏற்படும் என்று நம்பினர். ஆயினும், எதுவும் நடைபெறவில்லை.

சமாதானத்தின் பெயரால் நாட்டின் ஒரு பகுதியை பயங்கரவாதத்துக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதனூடாக தொடர்ந்து நாட்டுக்குள் யுத்தம் ஒன்று உருவாகும் அறிகுறிகள் உள்ளன. பலஸ்தீனம் - இஸ்ரேல் போன்று பெரும் யுத்தமொன்று எதிர்காலத்தில் ஏற்படலாம் என்ற நிலையும் இருக்கிறது.

வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளைத் தவிர சகல இன மக்களுக்கும் ஆபத்தான நிலையே உள்ளது. அப்பிரதேச மக்கள் இன்று சுதந்திரமாக இரவில் உறங்க முடியவில்லை - என்றார் ஜனாதிபதி. (ஒ)



தமிழீழ வலைப்பந்தாட்ட அணியினர் தேசியத் தலைவர் பிரபாகரன் மற்றும் விடுதலைப் புலிகளின் பிரமுகர்களுடன் எடுத்துக் கொண்ட படம்.

## கண்ணி அகற்ற மேலும் 50 தொண்டர்கள்

மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவில் பயிற்சி பெற்று 50 தொண்டர்கள் நேற்று வெளியேறி உள்ளனர்.

இது தொடர்பான நிகழ்வு கிளிநொச்சியில் இடம்பெற்றது.

மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பொறுப்பாளர் பரணி தலைமையில் நடந்த இந்த நிகழ்வில் கண்ணி அகற்றும் பயிற்சியளிக்க கிளிநொச்சி வந்துள்ள தாய்லாந்து நிபுணர்களும் கலந்துகொண்டனர்.

நேற்று வெளியேறியவர்களுடன் இந்தப்பிரிவின் தொண்டர் எண்ணிக்கை 680ஆக உயர்ந்துள்ளது. இவர்களில் 32 பேர் பெண்களாவர். (ஒ-3)

## பலாலி விநியோகத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைப் பொறுத்தவரை நாங்கள் 'அசையாத வாத்து' நிலையில் உள்ளோம்.

முல்லைத்தீவில் தொழிற்சாலைகள் போன்ற இரண்டு கட்டடங்கள் புதிதாக அமைக்கப்பட்டு வருவதாகவும் எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. அது எதற்காக என்பது யாருக்கும் தெரியாது.

இலங்கைக் கடற்படையின பலத்தை அதிகரிக்கும் விடயத்திலும், அதன் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் விவகாரத்திலும் அரசு அதிகம் சிரத்தை காட்டவில்லை. இது கடற்படையின் உற்சாகத்தையும் மனோதிடத்தையும் குன்றச் செய்துவிட்டது.

கடற்படையின் புலனாய்வுப்பலம் குன்றிவிட்டது. நீர்மட்டத்துக்குக் கீழான தொலைக்காட்சி இப்போது கடற்படையிடம் இல்லை.

கடற்புலிகளின் தளபதி சூசை அதிகம் அழுத்தம் கொடுப்பதன் காரணமாக புலிகளின் கடற்படை வளர்ந்து வருகின்றது.

புலிகளின் கடற்படை கூட்டுப் பயிற்சிகளில் ஈடுபடும்போது நமது (அரச) கடற்படை, வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க வேண்டியுள்ளது.

எனறாலும், எமது கடற்படை இன்னும் பெருமை மிக்க நிலையிலேயே உள்ளது. அதனைக் கொன்றொழித்து விடவேண்டாம் என்று நான் அரசை வேண்டுகிறேன்.

எனது மனச்சாட்சிக்கு நேர்மையாகச் செயற்படவேண்டும் என்பதற்காகவே திருகோணமலைக்கு புலிகளால் ஏற்பட்டிருக்கும் ஆபத்தை ஊடகங்களுக்கும் மக்களுக்கும் நான் பகிரங்கப்படுத்தி வருகின்றேன்.

- இப்படி கதிர்காமர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தாயக அணி பெற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இளம்பரிதி, தமிழீழ விளையாட்டுத்துறை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் ம.பத்மநாதன், தமிழீழ விளையாட்டுத் துறையின் செயலாளர் அன்ரன் அன்பழகன், வலைப்பந்தாட்ட அணியின் முகாமையாளர் றோகான் இராஜசிங்கம் ஆகியோருடன் விளையாட்டுத் துறையின் மாவட்டப் பொறுப்பாளர்களும் போராளிகளும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் தலைவர் பாப்பா தலைமை உரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து அணியினர் தமிழீழ தேசியத் தலைவருக்கு அறிமுகஞ் செய்து வைக்கப்பட்டனர். தொடர்ந்து வலைப்பந்தாட்ட அணித் தலைவி நிசாந்தி இராஜரட்ணம் தமது அணி வென்ற வெற்றிக்கிண்ணத்தை பிரபாகரனிடம் சமர்ப்பித்தார். அதனை அவர் பின்னர் விளையாட்டுத்துறை பொறுப்பாளரிடம் கையளித்தார் - அத்துடன் அவர் வெற்றி பெற்ற அணியினருக்கு பாராட்டுச் சான்றிதழ்களும் சிறப்புப் பரிசில்களும் வழங்கிக் கௌரவித்தார்.

பிரபாகரன் தனது பாராட்டுரையில் கூறியதாவது:-

'நீங்கள் பெற்று வந்த இவ்வெற்றி எதிர்காலத்தில் எமது தேசம் எப்படியிருக்கப் போகின்றது என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. மேலும் தமிழீழப் பெண்கள் அணி இந்த வெற்றியை பிரிட்டனில் முதற்தடவையாகப் பெற்றுத் தந்ததையிட்டு நான் பெருமையடைகின்றேன் நாம் ஒரு சிறிய தேசம். எனவே எமது விளையாட்டுத் துறையை பெரியளவில் வளர்ப்பதன் மூலமும், சர்வதேச அளவில் அவற்றில் சாதனை படைப்பதன் மூலமும் உலகிற்கு எமது தேசத்தை இனங்காட்ட முடியும் என்றார்.

இவ்வலைபந்தாட்ட அணியில் அங்கம் வகிப்போரில் - ஜீ.சி.ஈ. உயர்தரப்பரீட்சையில் - வர்த்தகப் பிரிவில் 3ஏ பெறுபேறு பெற்ற செல்வி மாலினியையும் அதே பிரிவில் ஏ,2பி பெறுபேறு பெற்ற செல்வி நிசாந்தியையும் தேசியத் தலைவர் வாழ்த்தினார்.

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரடியனாறு தேனகம் விடுதியில் நேற்றிரவு 7.30 மணிக்கு ஆரம்பமான இப்பேச்சு இரவு 10 மணிவரையும் நீடித்தது.

இச்சந்திப்பில் கருணாவுடன் தளபதி ரமேஷ், அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

முன்னதாக நேற்றுப்பகல் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி லைவா பட்டாபி, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மோனகுருசாமி, ஈ.பி.டி.பி பொறுப்பாளர் பிரதீபன் ஆகியோருடன் நோர்வேத் தூதர் பேச்சு நடத்தினார்.

முஸ்லிம் தலைவர்கள் மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர் இன்று சந்திக்கவிருக்கிறார். (ஒ-3)

# இத்தாலிக்கு சட்டவிரோதமாகச் செல்ல முயன்று கைதானவர்களில் 27 பேருக்கு பிணை அனுமதி

## பெரும்பாலானவர்கள் வடபகுதி இளைஞர்கள்

கொழும்பு,செப்.9

ட்றோலர் ஒன்றில் இத்தாலிக்குச் சட்டவிரோதமாகச் செல்ல முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு கடந்த 7 மாதங்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் 40 பேரில் 27 பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று திங்கட்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் சந்திரா நாணயக்கார, கே.பாலபட்டபெந்தி ஆகியோர் இப்பிணை அனுமதியை வழங்கினர்.

கடந்த பெப்ரவரி 11ஆம் திகதி அதிகாலை தங்காலை, குடாவெல்ல மீன் பிடித்துறைமுகத்தில் ட்றோலர் ஒன்றில் ஏறி இத்தாலிக்குச் செல்ல முயன்றார்கள் என்ற குற்றத்தின் பேரில் 41 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

மறுநாள், தங்காலை நீதிவான் முன்னிலையில் தங்காலை பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்ட இச்சந்தேகநபர்கள் அனைவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இவர்கள் அனைவருக்கும் எதிராக குடிவரவு, குடியகல்வு சட்டத்தின் கீழ் தனித்தனியாக குற்றச்சாட்டுப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இவர்களுக்கு எதிரான வழக்கு மேல் விசாரணைக்காக எதிர்வரும் 22ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், தம்மைப் பிணையில் செல்ல அனுமதிக்குமாறு கோரி இவர்களில் 27 பேர் தனித்தனியாக சட்டத்தணி ஜெயதேவி இராயப்பு ஊடாக தாக்கல் செய்த பிணை மனுக்கள் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

பிணைமனுக்களை ஆதரித்து சட்டத்தணி என்.ஸ்ரீகாந்தா ஆஜரானார். எதிர் மனுதாரர்களான தங்காலை பொலீஸ் அத்தியட்சகர் மற்றும் சட்டமா அதிபர் தரப்பில் ஆஜராகியிருந்த அரச சட்டவாதி வசந்த பெரேரா பிணை மனுக்களை தாம் ஆட்சேபிக்கவில்லை என நீதியரசர்களிடம் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து தலா 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தகுதி வாய்ந்த இருநபர்களின் ஆட் பிணையிலும் எதிரிகளுக்கு நீதியரசர்கள் பிணை அனுமதி வழங்கினர்.

கே.சிவநாதன், டி.தயாசிரி, பி.யோகநாதன், டி.சாந்தகுமார், கே.பாலச்சந்திரன், வி.ஜெயராஜா, டி.அம்பிகைதீபன், பி.பிரதாசன், டி.கஜேந்திரன், எஸ்.கேதீஸ்வரன், எஸ்.ஜெயபாலு, கே.கனகரூபன், எஸ்.ரூபன், சுமித் சிசிர, சுனில் பெரேரா, ஜெயமான பெரேரா, பி.விமலசந்திரன், ஜோன் கியூபட், பி.நவாஸ்கான், கே.அமிர்தலிங்கம், எம்.தயாபரன், எம்.அஜந்தன், க.மோகனசேகரம், பி.செல்லையா, எம்.அப்புகாமி, அஜித் லக்ஸ்மன், பி.ஏ. பிரேம்லால் ஆகியோரே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்களில் பெரும்பாலானோர் வடபகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களாவர். (ம-6)

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சந்திப்பில் தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

கிழக்கின் தமிழ் - முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக் குறித்து இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

தமிழ் - முஸ்லிம் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி கிழக்கு மாகாண நிலை குறித்து ஆராய்ந்து, பாதுகாப்பு தொடர்பான திட்டம் ஒன்றை வகுப்பது என்றும் -

அதன்பின் இருகட்சிகளின் தலைவர்களும் புலிகளின் தலைவர்களுடன் அத்திட்டம் குறித்து ஆராய்ந்து தமிழ் - முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்வது என்றும் - இச்சந்திப்பில் முடிவுசெய்யப்பட்டது.

இச்சந்திப்பில் அமைச்சர்களான மிலிந்த மொறகொட, ஜோன் அமரதுங்க, பொலீஸ்மா அதிபர் ஆனந்த ராஜா, பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன், தமிழ்க் கூட்டமைப்பின் பதினொரு நாடாளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் எம்.பிக்களான பஷீர் சேகுதாவுத், ஹிஸ்புல்லா ஆகியோர் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாண நிலை குறித்து ஆராய்வதற்காக மட்டக்களப்பு சென்றுள்ள நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிரட்ரீசருடன், சந்திப்பின் இடையில் தொலைபேசி மூலம் அமைச்சர்களான மிலிந்த மொறகொட, ஹக்கீம் ஆகியோர் உரையாற்றினர். நோர்வே தூதருடன் கலந்துரையாடிய விடயங்களை அவர்கள் ஏனையோருக்குத் தெரியப்படுத்தினர். (ஒ-3)

## வாகனத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சபைக்கு 'பிக்-அப்' வாகனம் ஒன்றை அரசு வழங்கியிருந்தது. அந்த வாகனம் சபையின் தலைவர் பொறுப்பில் இருந்தது.

சபை கலைக்கப்பட்டு நிர்வாகச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்ட போதும், இதுவரை அந்த வாகனம் பிரதேசசபை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவில்லை.

இதையடுத்து, இது தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. பொலீஸார் நீதிமன்றத்தின் கவனத்துக்கு இந்த விவகாரத்தைக் கொண்டுவந்தனர்.

ஊர்காவற்றுறை நீதிவான் இது விடயமாக விசாரித்த பின்னர், வாகனத்தைக் தேடிக்கண்டுபிடித்து நீதிமன்றத்தில் கையளிக்கும்படி பொலீஸ்மா அதிபருக்கு நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இதேசமயம் -

நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி நீதிவான் திரும்பிக்கொண்டிருந்த சமயம், இலக்கத்தகடு இல்லாது சென்ற வாகனம் ஒன்றை அவதானித்துள்ளார்.

இலக்கத்தகடு இல்லாத வாகனம் வீதியில் செல்வது சட்டவிரோதமான செயல் என்பதால், அந்த வாகனம் தொடர்பான விவரங்களைச் சேகரித்து நீதிமன்றத்தில் சமர்பிக்கும்படி ஊர்காவற்றுறைப் பொலீஸாருக்கு அவர் உத்தரவிட்டுள்ளார். (ஒ-3)

## காவலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடத்திற்குச் சென்ற சாவகச்சேரி நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டார். பின்னர் வரணி ஆஸ்பத்திரிக்கு சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த சிப்பாயின் சடலத்தை அவர் பார்வையிட்டார்.

கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை செய்தபின் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-3-117)

## ராணுவ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்தவர் ஆவார்.

குருநகரிலிருந்து மாம்பழம் சந்தியிலுள்ள தனது சகோதரியின் வீட்டுக்கு குறிப்பிட்ட சிறுமி சைக்கிளில் சென்றுகொண்டிருந்ததாகவும் -

நாவகுழிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த படையினரின் பவுஸருடன் அப்போது மோதுண்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

விபத்தில் சிக்கிய சிறுமியின் வலது கால் படுகாயத்துக்குள்ளானதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். பொலீஸ் நிலைய போக்குவரத்துப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொள்ளனர். (ஒ-9)

324 Palaly Rd., Jaffna.
1st Semester New Batches Commence on
BIT
Weekend: 14th September at 10.00 a.m
Weekday: 12th September at 05.00 p.m
Special offer for the first 10 Joiners
50% off in Course Fee
Free ACS Module
Free to follow Two Diploma Courses
Printed Notes
Library Facilities
Qualified Lecturer Panel
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project

A/L தமிழ்
PAPER (DAY 2004)
நா.க. தமிழிந்திரன்
ஈழத்தமிழிலக்கியம்
திங்.,புதன் : 7 - 8
சனி,ஞாயிறு : 7 - 8
★ 16 மணித்தியாலங்கள்
★ அலகுப் பயிற்சிப் பரீட்சை
BEACON -யாழ்.

LOGIC
2005 A/L
வகுப்பு அளவையியல்
11.09.2003 Thu. 7. a.m
By: P.கமல்
BRIGHTMAN நாவலர் வீதி

NEW SCIENCE COLLEGE
JAFFNA
மின்னியல்
Wed.,Thu.-3.30-5.00(p.m.)
ஆரம்பம்:-10-09-2003
சடப்பொருளியல்
Tue.,Thu.-6.00-7.00(a.m.)
ஆரம்பம்:-16-09-2003
BY: M.கருணாநிதி

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.09.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.